வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu வார மலர் ஈழநாடு

மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றும்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றும்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk மலர் : 04 25.06.2023 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 198 பக்கங்கள் : 20



07 அரசியலுக்குள் இறங்குகிறாரா தளபதி விஜய்?



08 குருந்தூர் மலை: 1956 ஐ நோக்கிய பாதை?



09 ஜெனிவாவின் தீர்மானங்களும் அறிக்கைகளும்



10 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு' – மக்களுக்கானதா?

# அரசியல் பிழைப்பு நடத்திவரும் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள்

## சாடுகின்றார் அமைச்சர் பிரசன்ன

கொழும்பு, ஜூன் 25

"தமிழ் மக்களை ஏமாற்றி அரசியல் பிழைப்பு நடத்துகின்றார்கள் தமிழ் அரசியல் தலைவர்கள். லண்டனில் ஜனாதிபதி ரணில் கூறிய தமிழ் மக்கள் சார்ந்த கருத்துக்களை இவர்கள் தம் அரசியல் இலாபங்களுக்காக மறுக்கிறார்கள்."

-இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் ஆளும் தரப் பின் பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க. 19



## கச்சதீவு ஒப்பந்தத்தை ரத்து செய்ய நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை

### இந்திய நீதிமன்றம் அறிவிப்பு

சென்னை, ஜூன் 25

கச்சதீவு ஒப்பந்தத்தை இரத்து செய்ய நீதிமன்றத் துக்கு அதிகாரம் இல்லை என இந்திய நீதிமன்றம் அறிவித்துள்ளது.

கச்சதீவு ஒப்பந்தத்தை இரத்து செய்யுமாறு சென்னை மீனவர்கள் நலன் சங்கம், உயர்நீதிமன்றக் கிளையில் தாக்கல் செய்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டபோதே தலைமை நீதிபதி இதனை அறிவித்துள்ளதாக தி ஹிந்து செய்தி வெளியிட்டுள் ளது.

1974-இல் இந்தியா மற்றும் இலங்கை இடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப் படையில், கச்சதீவு இலங்கையிடம் ஒப்படைக்கப் பட்டது.

குறித்த ஒப்பந்தத்தில் பாரம்பரியமாக மீன்பிடி தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு எந்த இடையூறும் ஏற்படுத்தக்கூடாது என 19

## யானை பக்கம் சாயும் எம்.பிக்கள் தடுக்க போராடும் மொட்டு கட்சி!

கொழும்பு, ஜூன் 25

பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ரணில் விக்கிரமசிங்க தலைமை யிலான ஐக்கிய தேசியக் கட்சி பக்கம் சாய்வதைத் தடுப்பதற்கான நடவடிக் கைகள் தொடர்பில் மொட்டுக் கட்சியின் முக்கியஸ்தர்கள் கவனம் செலுத்தியுள்ளனர்.

அடுத்த பாராளு மன்றத் தேர்தல் வரையா வது பாராளுமன்றத்தின் பெரும்பான்மையைத் தக்க வைத்துக்கொள்வ தற்கு அவர்களைத் தம்வ சம் வைத்துக்கொள்வ தற்கு தயாராகி வருகின்றது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவே களமிறங்கவேண்டும் என மொட்டுக் கட்சியின் முக்கியஸ்தர்களான பிரசன்ன ரணதுங்க, ரொஷான் ரணசிங்க, காஞ்சன விஜேசேகர, திலும் அமுனுகம உள்ளிட்டோர் வெளிப் படையாகவே கருத்து வெளியிட்டு வருகின்ற னர்.

இந்நிலையில் மொட்டுக் கட்சி உறுப்பினர் ஒரு வரே வேட்பாளர் 19

## உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு; அவசரமாக கூடும் பாராளுமன்றம்

கொழும்பு, ஜூன் 25

சர்வதேச நாணய நிதி யத்துடன் செய்து கொள் ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பான நிதி விதி முறைகளை அங்கீகரித் துக் கொள்வதற்காக அடுத்த வாரம் அவசர பாராளுமன்ற கூட்டத் தொடருக்கு அழைப்பு விடுக்கப்படவுள்ளது என தெரியவருகின்றது.

இதன்படி அடுத்த வாரம் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இரு நாட்கள் சபை அமர்வு இடம்பெறும் எனத் தகவல்கள் தெரிவிக் கின்றன.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பின் கீழ், உள்நாட்டில் விற்கப்படும் சுமார் 36 பில்லியன் டொலர் மதிப்புள்ள பிணை முறிகள் மற்றும் உண்டியல்கள் தொடர் பான கடனின் ஒரு பகுதி மறுசீரமைக்கப்படும் என்று அறியப்படுகிறது.

மேலும் சில அரச வங்கிகள் மற்றும் விசேட நிதியங்களால் கொள்வ னவு செய்யப்பட்ட பத் திரங்கள் மற்றும் கட்ட ணப் பட்டியல்கள் ஆகிய வற்றின் வட்டியை குறைக்கவோ 19

## ஜனாதிபதி நாடு திரும்பிய பின்னர் உள்ளூராட்சி தேர்தல் குறித்து முடிவு

கொழும்பு, ஜூன் 25

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்காக சமர்ப்பிக் கப்பட்டுள்ள வேட்பு மனுக்களை இரத்துச் செய்யுமாறு விடுக்கப் பட்டுவரும் கோரிக்கை கள் தொடர்பில் அவதா னம் செலுத்தப்பட்டுள் ளது என தெரியவருகின் றது.

ஜனாதிபதி நாடு திரும்பிய பின்னர் இது தொடர்பில் முடிவொன்று எடுக்கப்படலாம் என அறியமுடிகின்றது.

வேட்புமனுக்களை இரத்துச் செய்யுமாறு ஆளும் கட்சியும், எதிர ணிகளும் பாராளுமன் றத்துக்குள்ளும், அமைச் சின் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலும் கடுமையாக போராடிவருகின்றன.

கடந்த வாரம், ஆளும் கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில், உள் ளூராட்சி மன்றத் தேர்த லுக்காக ஏற்றுக்கொள் ளப்பட்ட வேட்புமனுக் களை இரத்துச் செய்ய மாறு விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சரான 19



## ஜனாதிபதித் தேர்தலுக்கு பதிலாக விரைவில் சர்வஜன வாக்கெடுப்பு?

### பரிசீலித்து வருகின்றார் ரணில்

கொழும்பு, ஜூன் 25

ஜனாதிபதித் தேர்தலுக்குச் செல்லாது சர்வஜன வாக் கெடுப்பொன்றை நடத்துவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பரிசீலித்து வருகின்றார் என அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது. 19

## யாழ். பல்கலைக்கழகத்துக்குள் நுழையும் சிங்களமயமாக்கல்!

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்ப்பாண பல் கலைக்கழகத்தில் இடம் பெறும் தமிழர் விரோத சிங்களமயமாக்கல் செயற் பாடுகள் தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கடித மொன்றை எழுதியுள் ளது.

துணைவேந்தர், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், பல்கலைக்கழக ஊழியர் சங்கம், அனைத்துப் பீடங்களுக் குமான மாணவர் ஒன்றியங்களுக்கும் இந்தக் கடிதம், அனுப்பப் பட்டுள்ளது

அக்கடிதத்தில், "எமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் பலமான தொரு திரளாக எழுவ தற்கும் தமிழ் மக்களின் உரிமைக்கான பயணத் தில் தவிர்க்க முடியாத குரலாக ஒலிப்பதற்கும், பல்கலைக்கழக அறிவு சார் பலமான பேராசிரி யர்கள் மற்றும் விரிவு ரையாளர்களான உங்கள் அனைவர தும் நேரடியான 19

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# எமக்கு வெற்றி வாய்ப்பு உள்ளவரை எந்த தேர்தலும் நடைபெறமாட்டாது!

## சுட்டிக்காட்டுகின்றார் லால்காந்த

கொழும்பு, ஜூன் 25

**தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறும் என்ற நிலைமை காணப்படும் வரையில் எந்த தேர்தலும் இலங்கையில் நடத்தப்படமாட்டாது என மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் சபை உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்தார்.**

அனுராதபுரத்தில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தல் ஒன்றை நடத்தாது, ஆட்சி அதிகாரத்தை முன்னெடுத்துச் செல்லவே ஆட்சியாளர்கள் முயற்சித்து வருகின்றனர்.

நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ள நிலையில், அந்த உத்தரவை எட்டி உதைத்துவிட்டு அரசியலமைப்புச் சட்டத்தை மீறி உள்ளூராட்சிச் சபை தேர்தலை நடத்தாமல் இருக்கின்றனர்.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் நடத்தப்பட்டால் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறும் என்பதை அரசாங்கம் உட்பட அரசியல் கட்சிகள் அறியும். இதன் காரணமாகவே தேர்தல் நடத்தப்படாமல் இருக்கின்றது.

தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறும் என்ற நிலைமை காணப்படும் வரை அரசாங்கம் எந்த தேர்தலையும் நடத்தாது - என்றார். (அ)

# திருகோணமலையில் மான்களை பாதுகாக்க ஆளுநர் நடவடிக்கை

திருமலை, ஜூன் 25

திருகோணமலை நகரில் உள்ள மான்களின் எண்ணிக்கையை கணக்கெடுக்கும் செயற்பாடு நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்டது.

கிழக்கு மாகாண சுற்றுலா திணைக்களத்தின் அனுசரணையுடன் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது

திருகோணமலை நகர சபையும் பட்டினமும் சூழலும் பிரதேச செயலகம் இணைந்து திருகோணமலை நகரில் உள்ள மான்களின் எண்ணிக்கையை கணக்கெடுக்கும் செயற்திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர்.

இந்த செயற்றிட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், கிழக்கு மாகாண சுற்றுலா திணைக்களத்தின் தலைவர், திருகோணமலை நகர சபை செயலாளர், திருகோணமலை பிரதேச செயலாளர், அரச உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது, திருகோணமலையில் 20இற்கும் மேற்பட்ட மான்கள் பிளாஸ்ரிக் கழிவுகளை உண்டு உயிரிழந்துள்ளதாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

மான்களின் பாதுகாப்பு, உணவு போன்ற விடயங்களைக் கவனிக்க குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் காலங்களில் அதிகமான மான்களைக் கொண்ட இடமாக திருகோணமலை திகழும் எனவும் கிழக்கு மாகாண ஆளுநர் குறிப்பிட்டார். (அ)

# 65 புதிய எச்.ஐ.வி நோயாளர்கள் முதல் காலாண்டில் அடையாளம்

கொழும்பு, ஜூன் 25

ஆண்டின் முதல் காலாண்டில் 165 புதிய எச்.ஐ.வி நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தேசிய பாலியல் நோய்கள் மற்றும் எச்.ஐ.வி கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கல்வி, தகவல் மற்றும் தொடர்பாடல் பிரிவின் முன்னாள் இணைப்பாளர் வைத்தியர் சாந்த ஹெட்டியாராச்சி இதனைத் தெரிவித்தார்.

இதன்படி, மாதந்தோறும் எச்.ஐ.வியினால் பாதிக்கப்பட்ட 60 முதல் 70 பேர் வரை அடையாளம் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# இரகசியமாகப் புதைக்கப்பட்ட சிசு; சடலத்தை தோண்டி எடுக்க உத்தரவு

கொழும்பு, ஜூன் 25

முந்தல் பகுதியில் பிறந்து 21 நாட்களே ஆன சிசுவொன்று இரகசியமான முறையில் புதைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், பொலிஸார் தங்களது சமர்ப்பணங்களை நீதிமன்றில் முன்வைத்தனர்.

அந்த பகுதிக்கு பொறுப்பான கிராம சேவகரால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய பொலிஸாரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முந்தல் - அகுனாவில பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய பெண்ணும் அவரது கணவரும் இணைந்து உயிரிழந்த குறித்த சிசுவை புதைத்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், பொலிஸார் முன்வைத்த சமர்ப்பணங்களுக்கு அமைய, புதைக்கப்பட்ட சிசுவின் சடலத்தை மீண்டும் தோண்டி எடுத்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

# முகநூல் மூலம் ஏற்பாடான போதைப்பொருள் விருந்து

## 12 பேரை கைது செய்த பொலிஸார்

கொழும்பு, ஜூன் 25

முகநூல் சமூக வலைத்தளம் வழியாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதைப் பொருள் விருந்து நடைபெற்ற இடத்தை சுற்றிவளைத்த பொலிஸார் 12 பேரை கைது செய்தனர்.

அவிசாவளை குருகல்ல பிரதேசத்தில் களனி ஆற்றுக்கு அருகில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றில் இந்த போதைப் பொருள் விருந்து நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

சந்தேக நபர்களுடன் 11 கஞ்சா சுருட்டுக்கள், 20 கிராம் ஐஸ் போதைப்பொருள், 24 பியர்கள், 13 பியர் போத்தல்கள், உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் தயாரிக்கப்பட்ட 20 மதுபானப் போத்தல்களை பொலிஸார் கைப்பற்றினர்.

முகநூல் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்ட போதைப் பொருள் விருந்து ஹோட்டல் ஒன்றில் நடைபெறுவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

ஹோட்டலில் சுற்றிவளைப்பை மேற்கொள்ள காட்டு வழியாக பொலிஸார் சென்றபோது வீதியில் ஆங்காங்கே மரக்கட்டைகள் போடப்பட்டு தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்ததாகவும் பொலிஸாரின் வருகையை கண்காணிக்கச் சில நபர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹோட்டலுக்குள் நடப்பது வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு தெரியாதபடி வாழை இலைகள் பயன்படுத்தி மறைக்கப்பட்டிருந்தன.

ஒருவரிடம் தலா 3 ஆயிரத்து 500 ரூபாவை அறவிட்டு இந்த போதைப்பொருள் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாக கைது செய்யப்பட்டவர்களிடம் பொலிஸார் நடத்திய விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

# சிறுவர்கள் மத்தியில் பரவும் புதிய வைரஸ்!

## பெற்றோருக்கு அறிவுரை

கொழும்பு, ஜூன் 25

டெங்கு நோய் மற்றும் இன்புளுவன்சா ஏ மற்றும் பி வைரஸ்கள் சிறுவர்களிடையே வேகமாக பரவி வருவதாக சிறுவர் வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

குழந்தைகளின் ஆரோக்கியத்தில் பெற்றோர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டும். குழந்தைகளுக்கு காய்ச்சல் இருந்தால் பாடசாலைகள் அல்லது பகல்நேர பராமரிப்பு மையங்களுக்கு அனுப்ப வேண்டாம்.

அதிகமான வெயில் நேரங்களில் வெயிலில் விளையாட அனுமதிக்க வேண்டாம் - என்றார். (அ)

# சிமெந்து விலை குறையும்

கொழும்பு, ஜூன் 25

சிமெந்து மூடை ஒன்றின் விலை, 300 முதல் 400 ரூபாவுக்கு இடைப்பட்ட அளவில் குறைவடையும் என நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளின் உதவியுடன், இலங்கைக்கு சிமெந்தை கொண்டுவர எதிர்பார்க்கப்படுகிறது.

அவ்வாறான நடவடிக்கை எடுக்கப்படும் சந்தர்ப்பத்தில், சிமெந்து மூடை ஒன்றின் விலை, 300 முதல் 400 ரூபாவுக்கு இடைப்பட்ட அளவில், குறைவடையும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டார்.

# பொலிஸார் எல்லை மீறக்கூடாது!

## பொகவந்தலாவையில் ஜீவன் காட்டம்

கொழும்பு, ஜூன் 25

பொகவந்தாலாவை நகரில் கைது செய்யும் போர்வையில் இளைஞர் ஒருவர் மீது பொலிஸார் நடத்தியுள்ள தாக்குதலை வன்மையாகக் கண்டித்துள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான், இச்சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு எதிராகவும் சுயாதீன விசாரணை நடத்தப்படவேண்டும் என வலியுறுத்தினார்.

பொகவந்தலாவை நகரில் நேற்று களமிறங்கிய அமைச்சர் ஜீவன் தொண்டமான், உயர்மட்ட பொலிஸ் அதிகாரிகளையும் சம்பவ இடத்துக்கு அழைத்தார்.

கைது செய்யப்பட்ட இளைஞர் தரப்பில் உள்ள நியாயத்தை அதிகாரிகளுக்கு எடுத்துரைத்த ஜீவன் தொண்டமான், இது விடயத்தில் சில பொலிஸ் அதிகாரிகள் தமது அதிகார எல்லையை மீறும் வகையில் செயற்பட்டுள்ளனர் எனவும் சுட்டிக்காட்டினார்.

இளைஞரை கைது செய்த பொலிஸார் செயற்பட்ட விதம் தொடர்பில் விசாரித்து அவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அமைச்சர் வலியுறுத்தினார்.

சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதே பொலிஸார் பொறுப்பாகும். மாறாக சட்டத்தை கையில் எடுத்து செயற்படுவதற்கு எவருக்கும் அதிகாரம் கிடையாது எனவும் உயர் மட்ட பொலிஸ் அதிகாரிகளிடம் ஜீவன் தொண்டமான் இடித்துரைத்தார்.

பொகவந்தலாவ நகரில் அமைந்துள்ள அரச வங்கியொன்றுக்கு சென்ற வாடிக்கையாளர் ஒருவருக்கும் வங்கி முகாமையாளருக்கும் இடையில் கடந்த 22ஆம் திகதி பிற்பகல் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

வங்கி முகாமையாளரின் அறிவிப்பை அடுத்து பொகவந்தலாவை பொலிஸ் உத்தியோகத்தர்கள் குறித்த இடத்திற்கு சென்று சந்தேக நபரை கைது செய்ய முற்பட்ட போது அங்கு கூடியிருந்தவர்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டனர். பொலிஸாரும் தான்தோன்றித்தனமாக செயற்பட்டனர் என விமர்சனம் எழுந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஹற்றன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதுடன் அவரை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# ஜனாதிபதி வேட்பாளர்கள் மொட்டு கட்சியில் இல்லை

## கூறுகிறார் நவீன் திஸாநாயக்க



**கொழும்பு, ஜூன் 25**

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தக்கூடிய வேட்பாளர்கள் எவரும் பொதுஜன பெரமுனவில் இல்லை என சபரகமுவை மாகாண ஆளுநர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.**

இதன் காரணமாக ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் பொது வேட்பாளராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நிறுத்தவேண்டும் என்பது தனது நிலைப்பாடு எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இது சம்பந்தமாக தற்போது சிறியளவில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருகின்றன. காணப்படும் நிலைமையை ஆராய்ந்து சரியான தீர்மானத்தை எடுக்கவேண்டும்.

எவ்வாறாயினும் ஜனாதிபதி வேட்பாளர் பற்றி பேசுவதற்கு இன்னும் காலஅவகாசம் உண்டு - என்றார். (அ)

# விடத்தற்பளையில் வெடிபொருட்கள்!



யாழ்ப்பாணம், ஜூன் 25

கொடிகாமம் பொலிஸ் பிரி விற்குட்பட்ட விடத்தற் பளை கரம்பகம் பகுதியில் வீதியோரம் பையில் கட் டப்பட்ட நிலையில் வெடி பொருட்கள் சில அடை யாளம் காணப்பட்டுள்ளன.

பையில் கட்டப்பட்ட நிலையில் வெடிபொருட் கள் காணப்பட்ட நிலையில் அது தொடர்பாக கொடி காமம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு வெடிபொருட்களை மீட்ப தற்கான நடவடிக்கைகள் முன் னெடுக்கப்பட்டன.

மேற்படி வெடிபொருட்கள் இரவு வேளையில் குறித்த பகுதியில் கொண்டு வந்து வைக்கப் பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக் கப்படுகிறது. (அ)

# வீட்டை எரித்த யுவதி பின்னர் சடலமாக மீட்பு!

## பொலிஸார் தீவிர விசாரணை

கொழும்பு, ஜூன் 25

தாயாருடன் வசித்து வந்த யுவதி ஒருவர் தமது வீட்டைத் தீயிட்டுக் கொளுத்திய பின்னர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

காலி மாவட்டம், கரந்தெனிய பிரதேசத்தில் தாயாருடன் வசித்து வந்த 22 வயதுடைய ரி.ஜே.மாளவிகா என்ற யுவதி, நேற்று முன்தினம் இரவு தாயார் வீட்டுக்குள் இருந்தவேளை வீட்டைத் தீயிட்டுக் கொளுத்தி விட்டுத் தலைமறைவாகியுள் ளார்.

வீட்டுக்குள் சிக்கிய தாயார் காயங்கள் எதுவுமின்றி வெளியில் தப்பியோடி வந்து அயலவர்களின் உதவியைக் கோரியுள்ளார்.

அயலவர்களின் உதவியுடன் தீ அணைக்கப்பட்டபோதிலும் வீட்டில் இருந்த பெரும்பாலான பொருள்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

தீ அணைக்கப்பட்ட பின்னர் அயலவர்களின் உதவியுடன் காணாமல்போன மகளைத் தாயார் தேடியுள்ளார்.

அவ்வேளை, வீட்டுக்கு அருகில் உள்ள பாழடைந்த வீடொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் மாளவிகா சடலமாக மீட்கப்பட்டார்.

காதல் தோல்வியால் ஏற்பட்ட மனநோயால் பாதிக்கப்பட்டிருந்த குறித்த யுவதி, கடந்த நான்கு மாதங்களாக அந்த நோய்க்குச் சிகிச்சை பெற்று வந்திருந்தார் என்று அவரின் தாயார் பொலிஸ் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

எனினும், சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார், பிரேத பரிசோதனையின் பின்னரே யுவதியின் மரணம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்க முடியும் என்று குறிப்பிட்டனர்.

இதேவேளை, உயிரிழந்த யுவதியின் தந்தை கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் கடன் தொல்லையால் உயிரை மாய்த்திருந்தார் என்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவி



வடமராட்சி, ஜூன் 25

தொண்டமனாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரமத்தால் பல இலட்சம் பெறுமதியான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

திருகோணமலை செல்வ நாயகபுரம் பிரதேச வைத்திய சாலைக்கு 505,400 ரூபா பெறு மதியான மருந்து வகைகள் அண்மையில் வழங்கப்பட்டன.

இதேவேளை, புன்னாலைக் கட்டுவன் சித்திவிநாயகர் வித்தி யாலயத்தில் தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவி ஒருவருக்கு ரூபா 45,000 சைக்கிள் ஒன்றும் வழங்கப்பட்டதுடன்

தொண்டைமானாறு - வளர்மதி முன்பள்ளி மாண வர்களிற்கு சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் பாவனைக்காக ரூபா 55,000 பெறுமதியான சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் இயந்திரம் பொருத்தப்பட்டுள் ளது.

உதவிகளை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் வழங்கினார். (அ-02)

# அக்காவும் தம்பியும் லொறி மோதிப் பலி!

## பெலியத்தை பிரதேசத்தில் சம்பவம்

கொழும்பு, ஜூன் 25

வீதி விபத்தில் சகோதரர்கள் இருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் அம்பாந்தோட்டை மாவட்டம், பெலியத்தை பிரதேசத்தில் நேற்றுக் காலை 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சந்தையில் மரக்கறி வாங்க வீதியில் நடந்து சென்ற சகோதரர்கள் இருவர் மீது பின்னால் வேகமாக வந்த லொறி மோதியதில் ஒருவர் சம்பவ இடத்திலும், மற்றையவர் வைத்தியசாலையிலும் உயிரிழந்தனர்.

14 வயதுடைய எம். தரங்க என்ற சகோதரன் சம்பவ இடத்திலும், 20 வயதுடைய எம்.டில்ஷிகா என்ற சகோதரி வைத்தியசாலையிலும் சாவடைந்துள்ளனர்.

லொறியின் சாரதியைக் கைது செய்துள்ள பொலிஸார், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.

# கொழும்பில் இளைஞரைக் கடத்தி கப்பம் கோரிய மூவருக்கு மறியல்!

கொழும்பு, ஜூன் 25

கொழும்பு - காலிமுகத்திடலில் நபர் ஒருவரைக் கடத்திச் சென்று தாக்குதல் நடத்திப் பணம் கோரிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மூன்று பேரும் எதிர்வரும் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமகே முன்னிலையில் முற்படுத்தியபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பாணந்துறை பிரதேசத்தைச் சேர்ந்த மூவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

அவர்கள், பக்கமுன பகுதியைச் சேர்ந்த ஒருவரைக் கடந்த 21 ஆம் திகதி கடத்திச் சென்றனர்.

இதையடுத்து, தமது மகன் கடத்திச் செல்லப்பட்டுள்ளார் எனவும், அவரை விடுவிக்க 10 இலட்சம் ரூபாவைக் கடத்தல்காரர்கள் கோருகின்றனர் எனவும் அவரின் தந்தை பொலிஸில் தாக்கல் செய்த முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர். (அ)

# எஸ்.ரி.எவ். துப்பாக்கிச் சூடு; கொலைச் சந்தேக நபர் பலி!

கொழும்பு, ஜூன் 25

பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 22 வயதுடைய கொலைச் சந்தேகநபர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் எம்பிலிப்பிட்டிய, பனாமுர, வெலிக் கடையாய பிரதேசத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்றது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

உயிரிழந்த நபர், பல துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்களுடன் நேரடித் தொடர்புடையவர் என்ற அடிப்படையில் அவரைக் கைது செய்வதற்காக நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, குறித்த நபர் பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளார்.

இதையடுத்து, பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் சந்தேகநபர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் முன்னாள் இராணுவச் சிப்பாய் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் மினுவாங்கொடை பெஸ்டியன் மாவத்தை பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் அம்பலாங்கொடையில் பிரதி அதிபர் ஒருவர் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் உள்ளிட்ட பல துப்பாக்கிப் பிரயோக சம்பவங்களுடன் நேரடித் தொடர்புடையர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை எம்பிலிப்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# கொழும்பில் தனியார் கல்வி நிலைய ஆசிரியர் ஹெரோயினுடன் சிக்கினார்!

கொழும்பு, ஜூன் 25

தனியார் கல்வி நிலைய ஆசிரியர் ஒருவர் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு - பொரளையில் உயர்தரப் பிரிவு மாணவர்களுக்குக் கற்பிக்கும் 31 வயதுடைய ஆசிரியரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

குறித்த ஆசிரியர் நேற்றுக் காலை காரில் சென்றபோது வெல்லம்பிட்டியவில் வைத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைதாகும் போது அவரிடமிருந்து 350 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய குறித்த ஆசிரியர் கைது செய்யப்பட்டார்.

விசாரணைகளின் பின்னர் அவர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# சுகாதாரப் பேரிடரை நோக்கி வேகமாக நகர்கின்றது நாடு!

## சஜித் பிரேமதாஸ எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 25

நாட்டில் 14 வீதமாக இருந்த ஏழ்மை 31 வீதமாக அதிகரித்துள்ளதுடன், நாட்டின் மொத்த வறுமை 70 இலட்சத்தை தாண்டியுள்ளதாகவும், மருத்துவமனைகளுக்குத் தேவையான மருந்துப் பற்றாக்குறையால் இலங்கை தற்போது மிகமோசமான சுகாதாரப் பேரிடரை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விடுத்துள்ள விசேட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மருந்துக்கான பற்றாக்குறை, மருந்தின் விலை உயர்வின் ஊடான மோசடி, ஊழல் என எல்லாவற்றையும் கருத்தில் கொள்ளும்போது, ஒட்டுமொத்த அரசாங்கமும் இந்த நாட்டின் நோய்வாய்ப்பட்ட மக்களின் வாழ்க்கையுடன் விளையாடிக்கொண்டிருக்கிறது.

நாட்டில் நிலவும் உண்மை நிலவரத்தைப் புரிந்து கொள்ள ஒரு வெளிப்படைத்தன்மையான கணிப்பீட்டை நடத்துவதுதான் அரசாங்கம் முதலில் செய்திருக்கவேண்டும்.

மாறாக, அரசாங்கம் தொண்டைக்குள் போலி மருந்தை புகட்டி ஒட்டுமொத்த நாட்டையும் ஆபத்தில் தள்ளிவிட்டுள்ளது.

ஏழ்மையான மக்களுக்கு நிவாரணம் வழங்கவென அரசாங்கம் அஸ்வெசும எனும் கண்மூடித்தனமான நிவாரணத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளதோடு, இத்திட்டத்தின் மூலம் சுமார் 12 இலட்சம் பேருக்கு மூன்று ஆண்டுகளுக்கு நிவாரணம் வழங்கப்படும். நாட்டில் 70 இலட்சம் ஏழ்மையான மக்கள் இருக்கும்போது 12 இலட்சம் பேருக்கு நிவாரணம் வழங்குவதன் நோக்கம் என்ன? எந்த கணக்கெடுப் பின், எந்தத் தரவுகளின் அடிப்படையில் இந்த 12 இலட்சம் பேர் தெரிவு செய்யப்பட்டனர்?

தற்போது, நாட்டுக்கு முக்கியமான சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம்கூட ஒரு பொதுவான இலக்குடன் ஒன்றாக இணைந்து நாட்டுக்காக சிந்திக்கப்படுவதை விடுத்து, வெறுமனே தனது குறுகிய இலக்குகளை அடைவதற்காகவே அரசாங்கம் இதை செய்யும் நிலைக்கு வந்துள்ளது.

இவை அனைத்தும் சந்தர்ப்பவாத அரசாங்கத்தின் குறுகிய நோக்கற்ற - தன்னிச்சையான செயல்முறையைத் தவிர வேறொன்றையும் புலப்படுத்துவதாக இல்லை.

இந்நிலையை மாற்றி மக்கள் சார் சிந்தனை வாயிலாக புதிய மக்கள் ஆணையின் மூலமே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்துவதோடு,

இதற்காக அரசாங்கத்திற்கு அனைத்து அழுத்தங்களையும் பிரயோகிப்போம் என்பதையும் வலியுறுத்துகிறோம் - என்றுள்ளது. (அ)

# காட்டு யானைகள் அட்டகாசம் மக்கள் வாழ்வாதாரம் பாதிப்பு



கிளிநொச்சி, ஜூன் 25

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கல்மடு நகர் பகுதியில் தொடர்ச்சியாக காட்டு யானைகளினால் பல்வேறு வகையிலும் பாதிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதியில் வாழும் மக்கள் கவலை தெரிவித்தனர்.

மக்கள் குடியிருப்பு பகுதியில் நேற்று முன்தினம் மாலை 6:00 மணி தொடக்கம் அதிகாலை வரை காட்டு யானைகளின் அட்டகாசம் தொடர்ந்தது.

இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும், நாளாந்த கடமைகளை முன்னெடுக்க முடியாதுள்ளதாகவும், ஆறு மணிக்கு பின்னர் வீடுகளிலேயே முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கவலை தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் கல்மடுநகர் பகுதியில் 2 காட்டு யானைகள் குடியிருப்புக்குள் புகுந்து வாழ்வாதாரமாக வைக்கப்பட்டிருந்த 45 க்கும் மேற்பட்ட பயன் தரக்கூடிய தென்னைகளை முற்று முழுதாக அழித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மற்றும் அரசியல்வாதிகள் தாம் வாசிக்கும் பகுதிக்கு வருகை தந்து கல்மடு தொடக்கம் இரணைமடு பகுதிவரை மின்சார வேலி அமைக்கும் பணி விரைவாக முன்னெடுக்கப்படஇருப்பதாக தெரிவித்து சென்றனர் எனவும், அதன்பின் இன்று வரையில் எந்தவித நடவடிக்கையும் மேற் கொள்ளப்படவில்லை எனவும், இதன் காரணமாக அப்பாவி மக்களாகிய தாம் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் மக்கள் கவலையுடன் தெரிவித்தனர். (அ)

# ஜனாதிபதி செயலகத்துக்கு சொந்தமான 51 வாகனங்கள் குறித்து தகவல் இல்லை!

கொழும்பு, ஜூன் 25

ஜனாதிபதி செயலகத்துக்குச் சொந்தமான 51 வாகனங்கள் தொடர்பில் எந்தத் தகவலையும் 2022 ஆம் ஆண்டு இறுதி வரை இல்லையென தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வாகனங்களின் பெறுமதி இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி அலுவலகத்திற்குச் சொந்தமான 53 வாகனங்கள் ஏனைய அரச நிறுவனங்கள், ஆலயங்கள், மதத் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளதுடன், இவற்றில் 2022 ஆம் ஆண்டில் 27 வாகனங்களுக்காக 137 இலட்சம் ரூபா பராமரிப்புச் செலவீனமாக செலவிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அலுவலகத்துக்குச் சொந்தமான வாகனங்கள் வேறு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டபோதிலும், அந்த வாகனங்கள் முறையான அனுமதியின் கீழ் முறையான வகையில் மாற்றப்படவில்லை என்றும் கணக்காய்வு அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. (அ)

# இலங்கைக்கு பல நாடுகளிலிருந்து ஏராளமான வேலைவாய்ப்புக்கள்!

கொழும்பு, ஜூன் 25

இலங்கைக்கு 41 நாடுகளில் இருந்து 12 இலட்சத்துக்கும் அதிகமான வேலை அனுமதிப் பத்திரங்கள் கிடைத்துள்ளதாகவும் இந்த வருடம் மூன்று இலட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு மொழித் திறனை வளர்த்து இலங்கையர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பும் வகையில் செயற்பட்டு வருவதாக அமைச்சர் மேலும் கூறினார். (அ)

# மது விற்பனை கடும் வீழ்ச்சி!

கொழும்பு, ஜூன் 25

விலை அதிகரிப்பு காரணமாக மதுபான உற்பத்தி மற்றும் விற்பனை குறைவடைந்துள்ளதாக கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆகவே இவ்வருடம் வரி வருமான இலக்குகளை தம்மால் அடைய முடியவில்லை என்றும் கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கம தலைமையில் தேசிய பொருளாதாரம் மற்றும் பௌதீக திட்டமிடல் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழு கூட்டத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இங்கு, கலால் திணைக்களத்தினால் இவ்வருடம் எதிர்பார்க்கப்பட்ட வருமானம் 217 பில்லியன் ரூபாய் எனவும், ஜூன் மாதம் வரை 72.985 பில்லியன் ரூபாய் மாத்திரமே வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

மதுபானத்தின் விலை அதிகரிப்பால் மது உற்பத்தி மற்றும் விற்பனை குறைந்துள்ளதாகவும் இதனால் எதிர்பார்த்த வருமானத்தை எட்ட முடியவில்லை என்று இங்கு வருகை தந்த அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

மேலும் கலால் திணைக்களம் 110 வருட வரலாற்றைக் கொண்ட நிறுவனம் என்றும், இந்த நிறுவனம் டிஜிற்றல் மயமாக்கப்படாமல் இருப்பது பலவீனம் என்றும் மகிந்தானந்த அளுத்கம சுட்டிக்காட்டினார்.

# 33ஆவது தியாகிகள் தின நினைவு மட்டக்களப்பில்




மட்டக்களப்பு, ஜூன் 25

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் பத்மநாபா உள்ளிட்ட தியாகிகளின் 33ஆவது நினைவு அஞ்சலி மட்டக்களப்பில் நேற்று சனிக்கிழமை எழுச்சிபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு வாவிக்கரை வீதியில் அமைந்துள்ள கட்சியின் அலுவலகத்தில் முன்னாள் மாகாண சபை உறுப்பினரும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிரதித் தலைவருமான இரா.துரைரெட்ணம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன், முன்னாள் கிழக்கு மாகாண சபையின் பிரதித் தவிசாளர் இந்திரகுமார் பிரசன்னா, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் உபதலைவர் பொன்.செல்லத்துரை (கேசவன்), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மத்தியகுழு உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் முன்னால் உறுப்பினர்கள், உயிர் நீத்தவர்களின் உறவுகள், மற்றும் பிரதேச அமைப்பாளர்கள் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்துகொண்டு படுகொலை செய்யப்பட்ட பத்மநாபாவின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து ஈகச்சுடர் ஏற்றி மலர் தூவி இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர். (அ)

# ஜனாதிபதி தேர்தலில் ரணிலுக்கே வெற்றி!

## கூறுகிறார் அமைச்சர் பிரசன்ன

கொழும்பு, ஜூன் 25

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வேட்பாளராகக் களமிறங்குவார். அவரே வெற்றியும் பெறுவார் என அரசில் உள்ள பலரும் எதிர்பார்த்துள்ளனர் என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

ரணில் விக்கிரமசிங்க அடுத்த தடவையும் ஜனாதிபதி பதவிக்கு வந்தால் அவருக்கு ஆதரவளிப்பதில் பிரச்னை இல்லை.

நாட்டில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடிய காரணமாக நாட்டு மக்களின் நலன் கருதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல தீர்மானங்களை எடுத்திருந்தார். அதன் பலனாக நாடு தற்போது சுமுகமான நிலைமைக்கு மாறியுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பாகக் காணப்பட்டதை விடவும் அத்தியாவசியப் பொருட்களின் விலை தற்போது குறைவடைந்துள்ளது-என்றார்.

# அவிசாவளை மாநகரசபை அதிகாரிகள் இருவர் கைது!

கொழும்பு, ஜூன் 25

அவிசாவளை மாநகர சபையின் பதில் செயலாளரும், வருவாய் பரிசோதகரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரிகளுக்கு கிடைக்க பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில், நேற்று குறித்த இரு அதிகாரிகளும் கைது செய்யப்பட்டனர். அவிசாவளை பஸ் நிலைய புதிய வர்த்தக கட்டடத் தொகுதியில் வர்த்தகம் நிலையம் ஒன்றின் உரிமையை விரைவாக வழங்குவதற்காகக் கூறி இலஞ்சம் கோரப்பட்டுள்ளது.

குறித்த இரு அதிகாரிகளும் அவிசாவளை மாநகர சபையினுள் இலஞ்சம் பெறும்போதே கைது செய்யப்பட்டனர். (அ)

ஈழநாடு
Eelanadu
25.06.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், வைகாசி ஆனி 10

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# ரணிலின் அரைவாசி தீர்வு

பிரச்னைகளுக்கான தீர்வு விடயத்தில் அரைவாசியை வழங்கிவிட்டதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார். இதற்கு தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் தங்களுடைய எதிர்ப்பை வெளியிட்டிருக்கின்றனர். ரணில் பொய் கூறுகின்றார் – அவ்வாறு நடைபெறவில்லை. ஆனால், ரணிலோ, இந்தத் கருத்தை சாதாரணமான ஒரு இடத்தில், சாதாரணமான ஒருவரிடம் கூறவில்லை.

சர்வதேச ஜனநாயக ஒன்றியத்தின் 40ஆவது ஆண்டு பூர்த்தி நிகழ்வில் பங்குகொள்வதற்காகவே, ரணில் விக்கிரமசிங்க, இங்கிலாந்து சென்றிருந்தார். இந்த நிகழ்வின்போது, சர்வதேச ஜனநயாக ஒன்றியத்தின் தற் போதைய தலைவரும் கனடாவின் முன்னைநாள் பிரதமருமான ஸ்டீபன் ஹாப்பருடனான நேர்காணலின்போதே, மேற்படி கருத்தை தெரிவித திருக்கின்றார். சர்வதேச ஜனநயாக ஒன்றியம், உலக வலதுசாரி கட்சிகளின் கூட்டமைப்பாகும். உலகின் மிகவும் சக்திவாய்ந்த அமைப்பு. இந்த அமைப்பின் அங்கத்துவ கட்சிகளில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றாகும்.

ரணில் விக்கிரமசிங்க கூறியிருப்பது போன்று விடயங்களில் எந்தவொரு முன்னேற்றமும் இடம்பெறவில்லை – குறிப்பாக அரசியல் தீர்வு விடயத்தில். ஆனால் அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரத்தில் சில விடயங்கள் இடம்பெற்றிருப்பது உண்மைதான். ஆனால் அதற்கப்பால் எதுவும் இடம் பெறவில்லை – ஏனெனில் ரணில் விக்கிரமசிங்க என்னும் ஜனாதிபதியின் உத்தரவின் பெயரில் விடயங்களில் மாற்றங்கள் இடம்பெறுவதல்ல முக்கியமானது – இடம்பெறும் மாற்றங்கள், கட்டமைப்பு சார்ந்த மாற்றங்களாக இருக்கவேண்டும். ஆகக் குறைந்தது, ரணில் கூறிய 13ஆவது திருத்தச்சட்ட விடயத்தில் கூட எந்தவொரு முன்னேற்றத்தையும் அவர் காண்பிக்கவில்லை. இந்த நிலையில், அவரால் எவ்வாறு உலகின் நன் மதிப்புமிக்க சர்வதேச அமைப்பொன்றின் தலைவருடனான நேர்காணலின் போது, நடக்காத விடயங்களை நடந்ததாகக் கூறமுடிந்தது? தமிழ்த் தலைமைகள் பலவீனமாக இருப்பதாலா அல்லது இவ்வாறான அரங்குகளில் தமிழர்களால் நுழைய முடியாது என்பதாலா?

இதில் ஒரு சுவாரஷ்யமான விடயத்தை நினைவுபடுத்த வேண்டியிருக்கின்றது. ரணில் பிரதமராக இருந்த காலத்தில், வடக்கு மாகாண முதலமைச்சராக இருந்த விக்னேஸ்வரனை ஒரு பொய்யர் என்று குறிப்பிட்டிருந்தார். அதன் பின்னர் ரணிலை காணும் போதெல்லாம், விக்னேஸ்வரன் முகத்தை திரும்பிக்கொண்டிருந்தார். இன்று ரணில் பொய் கூறுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் கூறுகின்றனர் – ஆனால் விக்னேஸ்வரனோ ரணிலின் கைகளை இறுகப் பற்றிக் கொண்டிருக்கின்றார்.

ரணில் விக்கிரமசிங்கவை நேர்காணல் செய்திருக்கும், ஸ்டீபன் ஹாப்பர், இலங்கை விடயங்களை நன்கறிந்தவர். குறிப்பாக, தமிழ் மக்களின் பிரச்னைகளையும் அறிந்தவர். ஹாப்பரின் ஆட்சிக் காலத்தில், மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் மீது கடுமையான விமர்சனங்களை அவரது அரசாங்கம் முன்வைத்திருந்தது. கனடாவில் மூன்று இலட்சத்துக்கும் அதிகமான ஈழத் தமிழ் மக்கள் வாழ்கின்றனர். தற்போதைய கனடிய அரசாங்கத்தில் தமிழர் சார்பான ஒரு பாராளுமன்ற உறுப்பினரும் இருக்கின்றார். அதேவேளை, பழமைவாத கட்சியிலும் பல ஈழத் தமிழர்கள் இருக்கின்றனர். இந்த நிலையில், ஈழத் தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கான தீர்வு விடயத்தில் அரைவாசியை அடைந்துவிட்டதாக கூறுவதை, புலம்பெயர் தமிழர்கள் எவ்வாறு எதிர்கொள்ளப்போகின்றனர்?

# மிகவேகமாக பரவுகின்றது டெங்கு!

## *6 மாதங்களில் 47 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிப்பு!*

*கொழும்பு, ஜூன் 25*

*இவ்வருடத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பை காண முடிவதாகவும் ஜனவரி மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் 47,000 இற்கும் அதிகமான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்றும் உடலியல் நோய்கள் தொடர்பிலான விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்தார்.*

*எதிர்வரும் பருவகால மழைவீழ்ச்சியின் போது டெங்கு நோய் பரவல் அதிகரிக்கக் கூடும் என்பதால் சுற்றுச்சூழலை தூய்மையாக வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தையும் வைத்திய நிபுணர் சுட்டிக்காட்டினார்.*

*தற்போதுவரையில் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலேயே அதிகளவில் டெங்கு நோயாளர்கள் பதிவாகின்றனர் எனவும் அங்குள்ள சுகாதார மற்றும் பாதுகாப்பு துறையினருடன் இணைந்து கழிவுகளை அகற்றும் விசேட வேலைத் திட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளதாகவும் ஆனந்த விஜேவிக்ரம சுட்டிக்காட்டினார்.*

*அவர் மேலும் தெரிவிக்கையில்-*

*இந்நாட்களில் டெங்கு நோய் பரவலை கட்டுப்படுத்துவதற்காக சுகாதார அமைச்சின் தலையீட்டின் கீழ் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதேபோல் டெங்கு ஒழிப்பு திட்டத்தினை அரச,தனியார் துறைகள் பொதுமக்களையும் ஒன்றிணைத்துக்கொண்டு முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும். தொடர்ச்சியாக இந்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் பட்சத்தில் டெங்கு நோயினை கட்டுப்படுத்தும் இயலுமை காணப்படுகின்றது.*

*எதிர்வரும் பருவகாலத்தை தொடர்ந்து டெங்கு நோய் பரவல் அதிகரிக்கக்கூடும். பொதுவாக ஜூலை மாதத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பை காண முடியும். அந்த வகையில் எதிர்வரும் நாட்களில் நோயாளர்கள் அதிகரிக்க கூடும் என்பதால் அனைத்து துறையினரும் அவதானத்துடன் செயற்பட வேண்டியது அவசியமாகும்.*

*டெங்கு நோய் எந்த வயதினரையும் பாதிக்கும். பதிவாகும் நோயளர்களில் 75 சதவீதமானவர்கள் 15 வயதுக்கு மேற்பட்டவர்கள். இதற்கு முன்பாக சிறு பிள்ளைகள் அதிகமாக பாதிக்கப்பட்டாலும் தற்போது இளைஞர்களே இளைஞர்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். டெங்கு என்பது ஒருவகை வைரஸ் ஆகும். டெங்கு நோயாளர்களை டெங்கு நுளம்புகள் கடிக்கும் பட்சத்தில் அந்த நுளம்பினால் ஏனையவர்களுக்கு டெங்கு நோய் பரவக்கூடிய சந்தர்ப்பம் அதிகமாகும். பரவுவதற்கான சாத்தியங்கள் அதிகரிக்கும். அதனால் டெங்கு கட்டுபாட்டிற்கு இந்த காரணங்கள் பற்றி அவதானம் செலுத்த வேண்டியது அவசியம்.*

*முதலில் நுளம்புகள் பரவக்கூடிய பகுதிகளை தூய்மைப்படுத்துவது மிகவும் அவசியமாகும். தூய்மையான நீர் சேரும் பகுதிகளிலேயே டெங்கு நுளம்புகள் தங்கியிருக்கும். பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்ட பிளாஸ்ரிக், ரயர், பூச்சாடிகள் உள்ளிட்ட பொருட்கள் இருக்கும் இடங்களில் டெங்கு நோய் அதிகரிக்கும். முடிந்தளவுக்கு மேற்படி பகுதிகள் தொடர்பில் அவதானம் செலுத்தி அவற்றை தூய்மைப்படுத்த வேண்டியது அவசியமாகும். அதேபோல் நுளம்பு கடியிலிருந்து தப்பிக்கொள்ள வேண்டியதும் அவசியமாகும்.*

*டெங்கு நோய்க்கு இலங்கானவர்கள் மற்றையவர்களுக்கு பரவாமலிருக்கும் வகையில் நுளம்புக் கடியிலிருந்து பாதுகாப்பு பெற வேண்டியது அவசியமாகும். அதற்காக உடலை முழுமையாக மறைக்கும் உடைகளை பயன்படுத்த வேண்டியது அவசியமாகும். நுளம்பு கடியிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான பூச்சி விரட்டித் திரவியங்கள் ஊடாகவும் நுளம்புக் கடியிலிருந்து பாதுகாப்பு பெற முடியும். எவ்வாறாயினும் இந்த முறைமைகள் 100 சதவீதம் பலன் தருபவை அல்ல - என்றார்.*

*(அ)*

# பொலிஸாரிடமிருந்து தப்பியவர் ரயில் முன் பாய்ந்து தற்கொலை

*கொழும்பு, ஜூன் 25*

*காலி, கராப்பிட்டிய பிரதேசத்தில் உத்தரவை மீறிச் சென்ற முச்சக்கரவண்டி மீது பொலிஸார் அண்மையில் துப்பாக்கிச் சூடு நடத்தியிருந்தனர்.*

*அந்த முச்சக்கரவண்டியின் சாரதி நேற்றுக் காலை பியதிகம பகுதியில் உள்ள ஆலயமொன்றுக்கு அருகில் ரயிலில் பாய்ந்து தற்கொலை செய்துகொண்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.*

*காலியில் இருந்து மருதானை நோக்கி பயணித்த ரயிலில் பாய்ந்து அவர் உயிரை மாய்த்தார் என தெரிவிக்கப்படுகின்றது.*

*குறித்த நபர் சுமார் 31 வயதுடையவர் எனவும் ஹபுகல, வக்வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.*


*கடந்த 22ஆம் திகதி காலி கராப்பிட்டிய பிரதேசத்தில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று பதிவாகியிருந்தது.*

*உத்தரவை மீறிச் சென்ற முச்சக்கரவண்டி மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாக பொலிஸார் தெரிவித்தனர்.*

*எவ்வாறாயினும், முச்சக்கரவண்டியில் இருந்த இருவர் அதிலிருந்து தப்பிச் சென்றிருந்தனர். அதன்போது தப்பிச் சென்ற முச்சக்கர வண்டியின் சாரதியே நேற்று தற்கொலை செய்து கொண்டார் என தெரிவிக்கப்படுகின்றது.*

*(அ)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



பகிர்வு -83

# முதியோர்களுக்கு மட்டும்

**கணபதி சர்வானந்தா**

சில வருடங்களுக்கு முன்னர் – கொழும்பு, பம்பலப்பிட்டியில் உள்ள சைவ உணவுச் சாலைக்கு உணவருந்தச் சென்றிருந் தேன். சில நிமிடங்களுக்குப் பின்னர் ஏழு பேர் அடங்கிய சிங்க ளக் குடும்பமொன்று வந்து எனக்கு அருகே உள்ள மேசையில் அமர்ந்து கொண்டது. அவர்களுள் ஒரு வயது முதிர்ந்த மூதாட்டியும் உணவருந்த வந்திருந்தார். அன்று ஞாயிறு விடுமுறை என்பதால் பெரும்பாலும் வெளியே சுற்றுலா போவ தென்பதன் இறுதி நிகழ்வாக அது இருக்கலாம் என்று ஊகித்துக் கொண்டேன். அவர்கள் அனைவரும் மகிழ்வோடு இருந்ததை அவதானிக்க முடிந்தது. சைவ உணவு உண்பதில் அவர்கள் ஆர்வத்தோடு இருந்தனர் என்பதற்கு அது பற்றிய அவர்களின் உரையாடல்கள் எனக்குச் சான்றாக இருந்தன.

அக் குடும்பத் தலைவர் என்று நினைக்கிறேன் அவர் முதலில் அந்த மூதாட்டியின் விருப்பத்தைக் கேட்டறிந்தார். அவரும் பதிலுக்கு சைவ உணவைப் பற்றிப் பல கேள்விகளைக் கேட்டு விட்டுத் தனது விருப்பத்தைச் சொன்னார். அவர் விருப்பப்படி உணவு வரவழைக்கப்பட்டு அவர் உண்ண ஆரம்பித்த பின்னரே மற்றவர்கள் தமக்கு விருப்பமான உணவை வரவழைத்து உண்ணத் தொடங்கினர்.

இப்படி வெவ்வேறு இடங்களில் இது போன்ற பல சம்பவங் களை அவதானித்ததனூடாக இதனை ஒரு சமூகப் பண்பு சார்ந்த விடயம் என்று தான் எண்ணலாம். எம்மவரைவிட சிங்கள மக்களுக்கு சமூக அக்கறை அதிகம் என்பதற்குப் பல கதைகள் உண்டு. முதியோர் தொடர்பில் அவர்கள் கொண்டுள்ள அக்கறை, மாற்றுத் திறனாளிகளைக் கண்டால் அவர்களுக்கு உதவும் பண்பு போன்ற பல விடயங்களைக் குறிப்பிடலாம். இதனைப் பத்திரி கைக்கு எழுத வேண்டும் என்பதற்காகச் சோடித்தவையென எண்ண வேண்டாம். அதனை அனுபவித்தவர்கள் சொன்ன கதைகளுக்கூடாகக் கண்டு, கேட்டு அறியப்பட்டவைகளே அவை.

எமக்கு சமூக அக்கறை குறைவு என்பதற்கு ஒரு நல்ல உதார ணமாகப் பின்வரும் விடயத்தைச் சுட்டிக் காட்டலாம்.

ஒரு முறை வட மாகாண அரசில் மூத்தவராக இருந்த ஒரு வரைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அவர் அப்போது பொதுத் தேர்தலுக்கான போட்டியில் களமிறங்கியிருந்தார். அவர் ஒரு சிறந்த நடிகன் என்பதைப் பல சந்தர்பங்களில் கண்டறிந் துள்ளேன். அதனை ஊர்ஜிதப்படுத்திக் கொள்ள அவர் கொண் டுள்ள சமூக அக்கறை பற்றிச் சில கேள்விகளைக் கேட்டேன். அவற்றுள் ஒன்று முதியோர் பற்றியது.

“ஐயா! உங்கள் பதவிக் காலத்தில் நீங்கள் எத்தனை தடவை கைதடிக்குச் சென்று வந்தீர்கள்?

“பல முறை” அவர் பதில்.

அதில் எத்தனை தடவை அங்குள்ள அரச முதியோர் இல்லத் துக்குச் சென்றிருக்கிறீர்கள்? அவர்கள் சுகத்தை விசாரித்திருக் கிறீர்கள்? அங்கு அவர்கள் திருப்தியாக இருக்கிறார்களா என்பதனைக் கேட்டறிந்துள்ளீர்கள்? ஒரு பொறுப்புள்ள பதவி வகுத்தவர் என்ற வகையில் உங்களுக்கு இது போன்ற சமூக அக்கறை இருந்திருக்க வேண்டும் – என்றவாறு அவரது பதிலுக்க ாகக் காத்திருந்தேன்.

“……” மௌனமே பதிலாகக் கண்டேன்.

கைதடியிலுள்ள அந்தக் காரியாலயத்துக்குப் பல தடவை சென்று வந்துள்ள நீங்கள் அத்தனை தடவையும் அந்த வயோதிபர் இல்லத்தைத் தாண்டியே சென்றிருக்கிறீர்கள். ஒரு தடவையாவது அதனுள் சென்று பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் உங்களிடம் இருக்கவில்லை. அந்தப் பொறுப்பை உணராதவர் என்றவகையில் நீங்கள் மக்கள் சேவைக்குப் பொருத்தமில்லாத வர் என்பதுதான் எனது முடிவு என்று சொல்லிவிட்டு வந்து விட்டேன். இன்றும் அவர் தான் ஒரு சமூக அக்கறைகொண்ட தமிழ் மக்கள் பிரதிநிதி என்று சொல்லிவருகிறார். அதனை உண்மை என்று நம்பியிருக்கும் மக்களைப்பார்த்துப் பரிதாபப் படுவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?

மேற் சொன்ன விடயங்களை வெளிக் கொணரக் காரணமாயி ருந்த அந்தப் பதிவை உங்களோடு பகிர விரும்புகிறேன்.

“கடந்த வாரம் நண்பர் ஒருவரின் இல்லத் திருமணத்துக்கு சென்று இருந்தேன். கீழ்த்தளத்தில் திருமணம். முதல் தளத்தில் உணவு பரிமாறும் கூடம்.

திருமணம் முடிந்து விருந்து சாப்பிடச் சென்றபோது, கீழ்த் தளத்திலேயே ஒரு பக்கம் சிறிய பந்தி அமைக்கப்பட்டு மேசை, கதிரைகள் இரண்டு வரிசைகள் மட்டும் தனியாக அமைக்கப்பட்டி ருந்தது. அங்கு “முதியோர்களுக்கு மட்டும்” என்று ஒரு பலகை எழுது வைக்கப்பட்டு முதியோர்களை மட்டும் அழைத்து முதலில் அங்கு அனுப்பி அமரவைத்தனர். அவர்களுக்கு உணவு பரிமாறினார்கள். ஏன் இப்படி என்று என் நண்பரிடம் கேட்டேன்? அதற்கு அவர் ”வயது முதிர்வு காரணமாக முதியோர்களுக்கு மூட்டு வலி, சர்க்கரை மற்றும் சில உபாதைகளால் படி ஏறிப்போய் சாப்பிட முடியாது. அதேபோல வரிசையில் நின்று இடம் பிடிப்பதும் கஷ்டம். அதை விட முக்கியானது இவர்கள் கொஞ்சம் மெதுவாக சாப்பிடுவார்கள். பொதுவாக இது போன்ற பந்தியில் சாப்பிடும் மற்றவர்கள் வேகமாகச் சாப்பிட்டுவிட்டு அடுத்த பந்திக்ககாக வழிவிட இலையை மூடிச் செல்லும்போது இவர்கள் சங்கடத்துடன் சரியாகச் சாப்பிட முடியாமல் பாதியிலேயே இலையை மூடிவிட்டு செல்லவேண்டிய அவசியம் இருக்கும். அதனால்தான் இப்படி ஒரு ஏற்பாடு.

இங்கு அவர்கள் தங்களுக்குத் தேவையானதை எடுத்து மெதுவாகச் சாப்பிட்டு விட்டுச் செல்ல முடியும். பெரியவர்கள் எந்த வித அவசரமும் இல்லாமல் பொறுமையாக சாப்பிட்டு செல்ல வேண்டும் என்பதற்காகத்தான் இப்படிச் செய்துள்ளோம்.

உண்மையில் இந்த ஏற்பாடு எனக்கு மட்டுமல்ல அங்கு வந்திருந்த அனைவருக்கும் பிடித்திருந்தது. முக்கியமாக முதியவர்களுக்கு மிகவும் வசதியாக இருந்தது. நான் உட்பட அனைவரும் நண்பரை மனதாரப் பாராட்டினோம்.” – என்று அப் பதிவு முற்றுப் பெற்றது.

ஒரு தனிமனிதன் சமூகத்தை நன்கு விளங்கிக்கொண்டு தன் வீட்டுக்கு வருகின்றவர்கள் பற்றி இவ்வாறு நுணுக்கமாகச் சிந்தித்து, அவர்களை நன்கு வரவேற்க வேண்டும் என்று செயற்படும்போது “நாங்கள் மக்கள் சேவகர்கள்” என்று மார் தட்டிக் கொள்ளுபவர்கள் மக்கள் பற்றி எவ்வாறு சிந்திக்க வேண்டும்?

●

# இந்தவார ராசிபலன் 25.06.2023 - 01.07.2023

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - ஆனி 10
நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : சப்தமி




சில செயல்களில் தளர்வு ஏற்பட்டு சிந்தனையைக் கிளறும். பண வரவு திட்டமிட்டபடி வந்துசேரும். எதிர்பார்த்த பலன்களை அடைய முயற்சிப்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகளின் கெடுபிடி இருந்தாலும், வேலைகள் சிரமமில்லாமல் நடைபெறும். அவசிய மான வேலை ஒன்றை விரைவாகச் செய்து கொடுக்க வேண்டியதிருக்கும். சொந்தத் தொழில் செய்பவர்கள், இரவு - பகல் பாராமல் வாடிக்கையாளரின் பணியைச் செய்து முடிப்பார்கள்.




தளர்ச்சியைக் கண்டு தயங்காமல், முயற்சியை அதிகப்படுத்தி முன்னேற்றப் பாதையில் நடைபோடுவீர்கள். பணவரவு இருந்தாலும், செலவுகள் நினைத்ததை விட அதிகமாக இருக்கும். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகமாகலாம். சக ஊழியரின் பணியையும் சேர்த்து செய்ய வேண்டியதிருக்கும். சொந்தத் தொழில் செய்பவர்கள், புதிய வேலைகளில் கவனம் செலுத்துவர். கூட்டுத் தொழில் லாபகரமாக நடைபெறும். குடும்பம் சீராக நடந்தாலும், சிறுசிறு பிரச்சினைகள் தோன்றவே செய்யும். அவற்றை பெண்களே சமாளித்து விடுவர்.




மறைமுகமான எதிர்ப்பை சந்திக்க வேண்டியதிருக்கும். சில செயல்கள் வெற்றிபெற முயற்சிகள் தேவைப்படும். நீண்ட காலமாக முடிவுறாத காரியம், திடீரென நடைபெறலாம். உத்தியோகஸ்தர்களில் சிலருக்கு, அலுவலகத்தில் புதிய பொறுப்புகள் கிடைக்கலாம். வரவேண்டிய கடன் தொகை கிடைக்க முயற்சி மேற்கொள்வீர்கள். சொந்தத் தொழிலில் வேலைப்பளு அதிகமாகும். முதலில் செய்து கொடுத்த வேலையில் உள்ள குறைபாடுகளைச் சரிசெய்து கொடுக்க நேரிடும்.




விருந்தினர் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். மறைமுகமான எதிர்ப்புகள் குறையும். மனதில் நினைத்திருந்த செயலை செய்து முடிப்பீர்கள். உத்தியோகஸ்தர்கள், வேலைப்பளுவால் அவதிப்பட நேரலாம். தள்ளி வைத்த பணி ஒன்றை, சக ஊழியர்களிடம் வீண் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. சொந்தத் தொழில் செய்பவர்கள், வாடிக்கையாளர் எதிர் பார்க்கும் நேரத்தில் பணிகளைச் செய்து கொடுக்க இயலாமல் போகலாம்.




நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு உறவினர்களும், நண்பர்களும் உதவியாக இருப்பார்கள். தொலைதூரத்தில் இருந்து வரும் செய்தி, மகிழ்ச்சி தரும். உத்தியோகஸ்தர்கள் அதிகப் பணிகளால் அல்லல்பட நேரலாம். சக ஊழியர்கள் ஆதரவாக நடந்துகொள்வர். சொந்தத் தொழிலில், புதிய வாடிக்கையாளர் அறிமுகம் கிடைக்கும். அவசர வேலைகளுக்காக கூடுதல் நேரம் வேலை செய்ய நேரிடும்.




சில காரியங்களில் தளர்வான போக்கு காணப்படும். அதிக முயற்சி செய்தால் அதிலும் வெற்றி காணலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள், வேலையில் கவனமாக இல்லாவிட்டால் பிரச்சினை உருவாகும். சிறிய குறைகளும் உயரதிகாரிகளுக்கு பெரிதாக தோன்றலாம். சொந்தத் தொழில் செய்பவர்கள், வரவேண்டிய பணத்தை வசூலிப்பதில் கவனம் செலுத்துவர். கூட்டுத்தொழில் சுமாராக நடைபெற்றாலும் லாபம் குறையாது. பணியாளர்களின் கோரிக்கைகளைக் கவனித்து சாதகமாக வேலைகளை மேற்கொள்வீர்கள்.




வெள்ளி, சனி ஆகிய இரு தினங்களில் சந்திராஷ்டமம் உள்ள தால், எதிர்பார்த்ததை விட செலவு அதிகமாகும். பழைய கடன்கள் கட்டுக்குள் இருக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலருக்கு, பொறுப்புகள் அதிகமாகலாம். எதிர்பார்க்கும் பணவரவுகைகளுக்கு வந்துசேரும். சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு வேலைப்பளு கூடும். புதிய நபர்களின் அறிமுகம் மகிழ்வளிப்பதாக இருக்கும். கூட்டு வியாபாரம் செய்பவர்கள் வழக்கமான லாபம் பெறுவீர்கள். பங்குதாரர்களுடன் வியாபார வளர்ச்சி பற்றி ஆலோசிப்பீர்கள்.




ஞாயிறு முதல் செவ்வாய் மாலை 4.08 மணி வரை சந்திராஷ்ட மம் உள்ளதால், வரவுகள் தாமதமாகும். அலைச்சலால் ஆரோக்கி யக் குறை ஏற்படலாம். உத்தியோகத்தில் உள்ளவர்கள், தங்கள் முயற்சியால் பதவி உயர்வு பெறக்கூடும். அலுவலகத்தில் எதிர்பார்த்த கடன் தொகை வந்துசேரும். சொந்தத்தொழில் செய்பவர்களுக்கு, முக்கியமான நபரின் அவசர வேலையை முடித்துக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும்.




உறவினர்கள், நண்பர்களின் உதவிகள் தேவையான போது கிடைக்காமல் போகலாம். உத்தியோகஸ்தர்கள் சிலருக்கு, அதிக வருமானத்துடன் வேறு வேலை கிடைக்கலாம். சொந்தத் தொழிலில் வேலைப்பளு அதிகரிக்கும். புதிய நபர்களின் அவசரப் பணிகளில் கவனம் செலுத்துவீர்கள். குடும்பத்தில் கடன் தொல்லை இருந்தாலும், பெரிய பாதிப்பை உண்டாக்காது. பெண்கள் ஆடை அலங்காரப் பொருள் வாங்கி சேர்ப்பார்கள்.




பணிகளில் அதிகக் கவனம் செலுத்தினாலும், சில காரியங்களில் தளர்வு ஏற்படலாம். பணவரவை விட செலவு அதிகரிக்கும். கூடுதல் வருமானம் பெற திட்டமிடுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்கள், சக ஊழியர்களின் பணியையும் சேர்த்து செய்ய நேரலாம். பணியில் ஏற்பட்ட தவறை திருத்த, மீண்டும் அதே பணியை செய்ய வேண்டி யதிருக்கும். மேலதிகாரிகளின் போக்கு சாதகமாக அமையும்.




செயல்கள் பலவற்றில் முயற்சியுடன் ஈடுபட்டு, முன்னேற்றமான பலன்களைப் பெறுவீர்கள். பணவரவுகள் எதிர்பார்த்தபடி வந்து சேரும். மதிப்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்கள், சக ஊழியர்களின் ஒத்துழைப்புடன் முக்கியமான வேலை ஒன்றைச் செய்து பாராட்டுப் பெறுவீர்கள். சிலருக்கு அலுவலகக் கடனுதவிகள் கிடைக்கக் கூடும். சொந்தத்தொழில் செய்பவர்கள், பணிகளில் அதிக கவனத்துடன் செயல் படுவார்கள். கூட்டுத் தொழில் நன்றாக நடைபெற்று, எதிர்பார்க்கும் லாபம் கிடைக்கும்.




தளராத முயற்சியால் வெற்றிகளை பெறுவீர்கள். சில செயல்களில் எதிர்பார்க்கும் திருப்தி இல்லாமல் போகலாம். பணவரவு இருந்தா லும், செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகஸ்தர்களில் சிலருக்கு, பதவி உயர்வு கிடைக்கலாம். அலுவலகத்தில் செல்வாக்கு அதிகமா கும். சொந்தத் தொழிலில் பழைய வாடிக்கையாளர்கள் மூலம் புதிய வர்களின் அறிமுகம் ஏற்படலாம். அவர்களின் பணிகளை ஓய்வின்றி செயல்பட்டு முடித்துக் கொடுப்பீர்கள். கூட்டுத் தொழில் வியாபாரத்தில் லாபம் அதிகமாகும். பணப் பொறுப்புகளில் உள்ளவர்கள் கவனமாக இல்லாவிட்டால் பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும்.

# அரசியலுக்குள் இறங்குகிறாரா தளபதி விஜய்?



சென்னை மடல்
-பகவான் சிங்-

**கோ**லிவுட்டின் 'தற்போதைய சூப்பர் ஸ்டார்' விஜய் தனது மிகப் பிரம்மாண்டமான தயாரிப்பை அடுத்த ஆண்டு மே மாதம் மத்தியில் வெளியிட முனைந்துள்ளார். அல்லது ஒருவேளை, இரண்டு ஆண்டுகள் கழித்து, இதே மாதத்தில் வெளியிடலாம். வரும் மே மாதத்தில் பாராளுமன்றத் தேர்தலில் இரண்டு தொகுதிகளையாவது வென்று தனது மக்கள் செல்வாக்கை நிரூபிக்கவோ அல்லது 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.கவின் மு.க. ஸ்டாலினுக்குப் போட்டியாவோ அவர் களம் இறங்கலாம். 'முன்னாள் சூப்பர் ஸ்டார்' ரஜினிகாந்த் சாதிக்க நினைத்தும் முன்வரத் துணியாத ஒரு மலையில் ஏற இவர் முழு மூச்சாகச் செயல்படத் தொடங்கிவிட்டார். மிகவும் கவனத்துடன் அவர்

வளர்த்துவந்த ரசிகர் மன்றமான 'தளபதி விஜய் மக்கள் இயக்கம்' இப்போது முடுக்கிவிடப்பட்டுள்ளது. பொதுச் சேவைக்கான ஒரு தளமாக அறியப்பட்ட இந்த இயக்கத்தை, 49 வயதான தான், தமிழக முதல்வர் என்னும் புதிய பாத்திரத்தை ஏற்கத் தகுதி பெறும் வகையில், ஒரு அரசியல் தளமாக மாற்ற முற்பட்டுள்ளார். அனைத்து மத, அரசியல் சார்புகள் கொண்ட இவரது ரசிகர்களும் கிராம அளவில் கூடச் செயல்பட்டு, தயாராகிக்கொண்டிருக்கின்றனர். சிறுவர் - சிறுமிகள், ஆண்கள் - பெண்கள் என அனைத்துத் தரப்பினரும் இவரின் ரசிகர் கூட்டத்தில் அடங்குவர். திரையில் அவர் வில்லன்களை அழித்து, ஒடுக்கப்பட்டவர்களுக்கான மிகச் சிறந்த தீர்வுகளை அளிப்பது போல உண்மையில் செய்வார் என்று நம்பி வருவார்களா? இவர்கள் அனைவரும் விஜய்க்கு வாக்காளர்களாக மாறுவார்களா? பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

மக்கள் செல்வாக்கு பெற்ற இந்தக் கனவு நாயகன், படப்பிடிப்புக் களத்திலிருந்து பொதுமக்கள் மன்றமான அரசியல் களம் கண்டு ஆட்சியையே பிடிக்க முயல்வது குறித்து எனக்கு அச்சத்தை விட, கவலைதான் ஏற்படுகிறது. ஆனால், தெருவோரத் தேநீர்க் கடைகளில் நிகழும் சாமானியர்களின் விவாதங்கள் மட்டுமல்லாமல் தேசியச் செய்தித்தாள்களில் கட்டுரைகள் எழுதும் அரசியல் அறிஞர்கள் கூட எம்.ஜி.ஆர், ஜெயலலிதா ஆகியோருடன் விஜயை ஒப்பிட ஆரம்பித்துவிட்டார்கள். ஆனால், ஒரு உண்மையை நாம் மறக்க முடியாது. எம்.ஜி.ஆர் பல ஆண்டுகள் அண்ணாவின் நிழலில் தி.மு.கவில் கொடி கட்டிப் பறந்தவர். பிறகு, அவரின் வாரிசான ஜெயலலிதா அம்மையார், அவர் விட்டுச் சென்ற ஒரு கோடிக்கும் மேலான தொண்டர் பலத்தை அடித்தள முதலீடாகக் கொண்டு கட்சியை முன்னெடுத்துச் செல்ல முடிந்தது. விஜயைப் பொறுத்தவரை, இது போன்ற அரசியல் பின்புலமோ ஆசானோ கிடையாது. அவரது தந்தையும் திரைப்படத் தயாரிப்பாளருமான எஸ்.ஏ.சந்திரசேகர் இவர் குழந்தை நட்சத்திரமாக இருந்த காலத்திலிருந்தே ஆசானாக இருந்து வந்த நிலையில், இப்போது அவர்களிடையே சுமுகமான உறவு இல்லை என்று கூறப்பட்டாலும் ரத்த பாசம், மாறி வரும் சூழலில், இவர்களை ஒன்றாகச் சேர்க்கும் என்று எதிர்பார்க்கலாம்.

ஒரு வேளை விஜய் வெற்றியடைந்தால், அது, அரசியல் களத்தில் தன்னலம், ஊழல், மக்களைக் கொள்ளையடித்து, அவர்களுக்கு நடைமுறை சாத்தியமற்ற வாக்குறுதிகளை வழங்கி ஏமாற்றும் போக்கு ஆகியவற்றைக் கைவிட்டு, மக்கள் நலன் கருதும் நல்ல, நேர்மையான ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பஞ்சம் குறித்த மக்களின் ஆதங்கத்தையே வெளிப்படுத்துவதாக இருக்கும். மக்களை இலவசங்களுக்காகக் கையேந்த வைத்து ஒரு புட்டி சாராயத்துக்கும் ஒரு பிரியாணி பொட்டலத்துக்கும் தங்களுக்கு வாக்களித்த மக்களின் வாழ்வில் உள்ள துன்பங்களைக் கண்டும் காணாமல் இருக்கும் போக்கு நிலவுகிறது. இந்தப் பயங்கரமான நரகத்திலிருந்து பாலாறும் தேனாறும் ஓடும் ஒரு சொர்க்கத்துக்குத் தளபதி தங்களை இட்டுச் செல்வார் என்ற நம்பிக்கையே இவரது இயக்கத்தில் அதிகமாக மக்கள் தற்போது இணைந்து வருவதற்குக் காரணம். இது மிகவும் அழகாக வடிவமைக்கப்பட்ட ஒரு வண்ணமயமான டூயட் சீன் - இதை அவர்கள் நம்புகிறார்கள். தங்கள் தளபதியை மக்களின் முதல்வராக முடி சூட்டி, புனித ஜோர்ஜ் கோட்டையில் அரியணையில் அமர்த்தத் தயாராக இருக்கின்றனர். இந்த வண்ணக் கனவில் எந்தத் தீங்கோ, தவறோ, குற்றமோ இல்லை. ஜனநாயகத்தில் யார் வேண்டுமானாலும் தலைவராகலாம், ஆட்சி செய்யலாம். களம் காணும் போட்டியாளர்களில் சிறந்தவர்களைத் தேர்ந்தெடுத்து நாட்டின், மக்களின் சிறந்த எதிர்காலத்தை உறுதிப்படுத்தும் அளவுக்கு வாக்காளர்களுக்குப் போதுமான அறிவையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்துவது தான் இதில் உள்ள மாபெரும் சவால். துரதிர்ஷ்டவசமாக, கடந்த சில ஆண்டுகளாக இந்த அரசியல் அறிவில், விழிப்புணர்வில் மக்களிடையே பெரும் பற்றாக்குறை நிலவி வருகிறது. இந்த நலிவு மட்டுமல்லாமல், மக்களிடையே சினிமா நட்சத்திரங்களுக்கான ஈர்ப்பும் அதிகரித்து வருகிறது. இரண்டு படங்கள் வெற்றியடைந்தவுடனே அந்த நாயகனைத் தங்கள் எதிர்கால முதல்வராகக் கருதும் போக்குக்குப் படித்தவர்களும் விதிவிலக்கில்லை.

கடந்த ஆண்டுகளில் பல வெற்றிப்படங்களை விஜய் கொடுத்துள்ளார். வெற்றிப்படங்களின் எண்ணிக்கையில் இவர் ரஜினிகாந்த்துக்கு இரண்டாவது இடத்தில் இருப்பதாகவும் ஒரு படத்துக்கு நூறு கோடி வாங்குவதாகவும் ஒரு சினிமா இதழில் நான் படித்தேன்.



இந்தத் தொகையின் பிரம்மாண்டத்தைப் பார்த்து பிரமித்த நான், அதில் '1'-க்குப் பிறகு எத்தனை பூஜ்ஜியங்கள் வருகின்றன என்று அறிய ஒரு காகிதத்தில் அதை எழுதிப் பார்த்தேன். நமது சமூகத்தில் மிகப்பெரிய பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையில் உள்ள இடைவெளி எப்படிப் பெரிதாகி வருகிறது என்பதைக் கண்டு வருந்தினேன். மேலும், இப்படி அதிக வருவாய் ஈட்டுபவர்கள், தங்கள் வரிகளை ஒழுங்காகச் செலுத்தினால், நாட்டின் பொருளாதாரம் இன்னும் மேம்பட்டிருக்குமே என்றும் எண்ணி வருந்தினேன். தற்காலத்தில், பொதுவாழ்க்கையில் அப்படிப்பட்ட நேர்மை என்பது மிகவும் அரிதாகிவிட்டது - இந்நிலை தமிழகத்தில் மட்டுமன்று, இந்தியாவில் மட்டுமன்று, உலகம் முழுவதிலும் நிலவுகிறது. உதாரணமாக, டோனல்ட் ட்ரம்ப் செய்ததையும் இன்னும் செய்துகொண்டிருப்பதையும் பாருங்கள் - இருந்தும் அறிவார்ந்த அமெரிக்க மக்களின் ஒரு கணிசமான பகுதியினர் இந்த ஊழல் மன்னனை ஆதரித்து அவர் மீண்டும் அதிபராக வேண்டும் என்றும் விரும்புகிறார்களே! திரை உலகில் ஒரு திரைப்படத் தயாரிப்பு தொடங்கும் முன், முகூர்த்தம் பார்த்து, அதன் வெற்றி வேண்டி, கடவுளர்களைத் திருப்தி செய்ய பூஜைகள் செய்யப்படுவது வழக்கம். விஜயின் இந்த பிரம்மாண்ட தயாரிப்புக்கான முகூர்த்தம், ஜூன் 17 அன்று சென்னை நீலாங்கரையில் உள்ள ஒரு பெரிய மாநாட்டு அரங்கில் 'மக்கள் இயக்க'த்தால் ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த நிகழ்ச்சியில், பத்து, பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ மாணவியருக்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தார் விஜய். ஒரு நாள் முழுவதும், சுமார் 13 மணி நேரம் நின்று கொண்டே, மாணவர்களுடனும் பெற்றோர்களுடனும் உரையாற்றி, அவர்களின் கோரிக்கைக்கேற்ப செல்பி எடுத்துக்கொண்டு அவர்களிடையே ஊக்கமளிக்கும் அழகான ஒரு உரையையும் ஆற்றினார். இது ஊடகங்களில் தலைப்புச் செய்தியாகி வைரலானது. ஒரு பத்திரிகையாளனாக ,ஜெயலலிதா, விஜய்காந்த் போன்ற சினிமா நட்சத்திரங்களின் அரசியல் பிரவேசங்களைக் கண்டுள்ள என்னை, விஜயின் இயல்பான நீரோட்டம் போன்ற சீரான தொடக்க உரை மிகவும் கவர்ந்தது. இயக்க உறுப்பினர்கள் மட்டுமல்லாமல், அங்கிருந்த மாணவ மாணவிகள் மற்றும் அவர்களின் பெற்றோர் அனைவரும் மீண்டும் மீண்டும் கர கோஷம் எழுப்பி அந்த உரையை ரசித்தனர். அவரது அதிரடி தொடக்கமே இப்படித்தான் இருந்தது - "என்னோட கனவெல்லாம் சினிமா நடிப்பு தான் அதை நோக்கித் தான் என்னோட பயணம் போய்ட்டிருந்தது. ஒரு வேளை - (சற்று நிறுத்தி, சிரிப்பு) - சரி, அத விடுங்க, இப்போ எதுக்கு - (சிரிப்பு)". இதற்கு முன்னர், அவர் தனது உரையை 'என் நெஞ்சில் குடியிருக்கும் ' என்று தொடங்கினார். அது, அவரின் ஒரு முக்கிய முத்திரைச் சொற்றொடராக அமைந்துவிட்டது.

அவர் அந்த வாக்கியத்தை முடிக்கக்கூட இல்லை, 'இனிய மக்களே' என்பது போன்ற எதையும் அவர் குறிப்பிடவில்லை. அவரது அந்த இடைவெளியைப் புரிந்துகொண்ட மக்கள், உடனே ஆரவாரத்தில் கத்தி, அவரைப் பாராட்டி முழக்கங்கள் எழுப்பி, அவர் தனது அரசியல் பிரவேசத்தை அறிவிப்பதைப் புரிந்து கொண்டவர்களாகக் கூச்சலிட்டனர். ஒரு திரைப்பட பாணியில் தான் இந்த அறிவிப்பும் அமைந்தது. உலகம் முழுவதிலும் தமிழர்கள் வாழும் இடங்கள் அனைத்திலும், சமூக ஊடகங்களும் இது குறித்துப் பரபரப்பாகச் செய்தி பரப்பி, இதை வைரலாக்கின.

கடந்த காலத்தில் மட்டுமல்லாமல், இன்றும் கூட முக்கிய தமிழ் அரசியல்வாதிகள் தங்களது உரையை இப்படி ஒரு முத்திரையுடன் தொடங்குவதைப் பார்த்து வருகிறோம். எம்ஜிஆரின் "எனது ரத்தத்தின் ரத்தமான அன்பு உடன்பிறப்புகளே", கலைஞரின் "என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே" மற்றும் ஜெயலலிதாவின் "என்னை வாழவைக்கும் தெய்வங்களான, புரட்சித் தலைவர் ரத்தத்தின் ரத்தமான, கோடிக்கணக்கான எனது அருமைத் தமிழ் மக்களே.."

இவையெல்லாம் நமக்குப் பழக்கமானவை தாம். அரசியல், சினிமா, இலக்கியம் என்று எந்தத் துறையாக இருந்தாலும், தங்களின் மனம் கவர்ந்தவர்களைக் கொண்டாடுவது தமிழர்களின் வழக்கம். சாலையோரச் சுவர்களில் அரசியல்வாதிகள் மற்றும் திரை நட்சத்திரங்களின் போஸ்டர்களை ஒட்டிக்கொண்டாடும் போக்கு, தமிழகத்தில் - அதுவும் குறிப்பாக- படித்த அறிவாளிகள் நிறைந்த சென்னை நகரில் தான் அதிகம் காணப்படுகிறது. இது போன்ற புகழுரைகள் இல்லாமல் காலியாகச் சுவரில் சிறு இடம் கூட இங்கு இருக்க முடியாது. நமது காவியங்களிலும் வரலாற்றுப் புத்தகங்களிலும் பேரரசர்களையும் மேதைகளையும் அறிவிற்சிறந்த பெண்டிரையும் குறிப்பிடப் பயன்படுத்தும் பட்டப்பெயர்கள் போல்,தங்களைத் தாங்களே புகழ்ந்து பட்டமளித்துக் கொள்ளும் போக்கும் அதற்கான பொதுமக்கள் தொடர்புக்காகக் கணிசமாகச் செலவு செய்யும் போக்கும் நமது பிரபலங்களிடமும் காணப்படுகிறது.

சிறு பெரு நட்சத்திரங்கள் அனைவரும் இப்படிப் பட்டம் சூட்டிக்கொள்ளும் போக்கு திரைத் துறையில் மிகவும் சாதாரணமானது. இரண்டு படங்கள் வெற்றியடைந்தால், அவர்கள் 'புரட்சிக் கலைஞர்', 'மக்கள் நாயகன்' என்று ஆகிவிடுகிறார்கள். மேலும் இரண்டு வெற்றிப் படங்களைக் கொடுத்து விட்டால், அவர், 'வருங்கால முதல்வர்', 'தமிழகத்தின் எதிர்காலம்' என்றெல்லாம் ஆகிவிடுகிறார். இவர்களின் பெயர்களையும் பட்டங்களையும் பட்டியலிடுவது இங்கு தேவையற்றது. இந்த நகைச்சுவையை எனது ஈழநாடு வாசகர்கள் அறிந்தே இருப்பார்கள். காமராஜர், கக்கன் போன்ற நேர்மையான, அர்ப்பணிப்புணர்வுள்ள முதல்வர்களையும் அமைச்சர்களையும் கூடத் தமிழகம் பார்த்துள்ளது என்பதை நான் இங்கு நினைவுபடுத்தத் தேவையில்லை, காரணம் அது உங்களுக்கே தெரிந்திருக்கும்.

கர்மவீரர் என்றும் பெருந்தலைவர் என்றும் காமராஜர் போற்றப்பட்டார் என்றால் அதற்கு அவருக்கு முழுத் தகுதியும் இருந்தது. தியாகி என்று உள்துறை அமைச்சர் கக்கன் போற்றப்பட்டதும் முற்றிலும் சரியே. அவர்கள் தங்கள் வாழ்வை மக்கள் நலனுக்காகவே அர்ப்பணித்தனர். அவர்களிடம் இரண்டு வேட்டிகள், சட்டைகள் மற்றும் துண்டுகளே இருந்தன என்றும் அவற்றையும் அவர்கள் தாங்களே துவைத்து உடுத்தினார்கள் என்றும் நாம் படித்திருக்கிறோம். ஒரு முறை தனது வீட்டுக்கு வந்த ஒரு விருந்தினரைச் சந்திக்க காமராஜர் தாமதப்படுத்தியதாகவும் அதற்குக் காரணம் அவரது அன்றைய ஆடைகள் கொல்லைப்புறத்தில் காய்ந்து கொண்டிருந்ததாகவும் ஒரு குறிப்பை நான் படித்திருக்கிறேன். அந்த நாட்கள் மீண்டும் வாரா என்பது வேதனையான உண்மை.

மீண்டும் விஜயிடம் செல்வோம். தனது உரையில், மாணவர்களைத் தேசத்தின் எதிர்காலம் என்று குறிப்பிட்ட விஜய், அரசியலில் ஊழலை எதிர்க்க, அவர்களும் அவர்களின் பெற்றோர்களும் வாக்களிக்கப் பணம் பெறக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அவர் தனது திரைப்பட வசனத்தும் பொது மேடையில் வைக்கும் கருத்துகளுக்கும் இடையில், சினிமா காதல் காட்சியில் அவர் ஆடும் நடனங்களுக்கும் பொது வாழ்வில் சமநிலையைப் பராமரிப்பதற்கும் இடையில், கிராஃபிக்ஸ் மூலம் அவர் திரையில் செய்யும் சண்டைக் காட்சிகளுக்கும் அரசியலில் சந்திக்கும் மோதல்களுக்கும் இடையில் அவர் ஒரு எல்லைக்கோட்டை வரைய வேண்டும். முன்னர் 'கேப்டன்' விஜய்காந்த் செய்தது போல, அக்டோபர் 2021-ல் நடந்த உள்ளாட்சித் தேர்தல்களின் போது, மக்கள் மனநிலையைக் கன்டறிய, மொத்த 38 மாவட்டங்களில் ஒன்பதில் தனது இயக்க உறுப்பினர்களை வேட்பாளர்களாகக் களமிறக்கினார். அது அவருக்கு மிகச் சிறந்த பயனை அளித்தது. விஜய் இயக்கத்தின் 169 வேட்பாளர்களில் 115 வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர். இதை அடுத்து, பல அரசியல் விமர்சகர்கள், மே 2026 தேர்தலிலும் இவர் இது போலவே செய்துபெருமளவு ஆதரவு பெறுவார் என்று எழுதினார்கள். 2011-ல் தனது முதல் சட்டமன்றத் தேர்தலில், விஜய்காந்த் எட்டு சதவிகித வாக்குகளைப் பெற்றார் ஒரு புதிய அரசியல் நட்சத்திரம் உருவானது என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டது. ஆனால், 2016 இல் அவரது தேமுதிகவின் வாக்கு சதவிகிதம் 2.16 ஆகக் குறைந்து, தேர்தல் ஆணையம் வழங்கியிருந்த 'மாநிலக் கட்சி' அந்தஸ்தையும் இழந்தது. 'கேப்டன்' போலல்லாமல், 'தளபதி' விஜய் இளமையானவர், சுத்தமான பழக்கங்கள் கொண்டவர், பொது வெளியில் நேர்மையானவர் என்ற பிம்பம் பெற்றிருக்கிறார். அவருக்கும் எப்போதும் திரை நடிகர்களை அரசியல் தலைவர்களாக ஆக்கி அழகு பார்க்கும் தமிழகத்துக்கும் எதிர்காலம் என்ன வைத்திருக்கிறது என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

இப்போது உங்களின் சுவையான டிபனால் இந்த அழகான ஞாயிறு காலையை மேலும் இனிமையாக்கும் நேரம். மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

# குருந்தூர் மலை: 1956 ஐ நோக்கிய பாதை?

திசரணி குணசேகர

அறகலய மூலம் கோட்டபாய ராஜபக்ஷ துரத்தியடிக்கப்பட்டு ஒரு வருடத்துக்கும் குறைவான காலப் பிரிவுக்குள் அவருடைய காவிப் படையினர் மீண்டும் களமிறங்கியிருக்கின்றார்கள். கொஞ்சம் அதிகாரத்துக்காகவும், ஒரு சிறு நிலப்பரப்புக்காகவும் மீண்டும் நாட்டுக்குத் தீ மூட்டுவதற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள். மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தொடக்கம் சிஹல ராவய அமைப்பின் அக்மீமன தயாரத்ன தேரர் வரையில் அனைவரும் களமிறங்கியிருக்கிறார்கள். (இன்றைய தமிழர்களும், முஸ்லிம்களும் புத்த பெருமானின் காலத்தில் வாழ்ந்த நிகண்டயாக்கள் என்ற குழுவுக்கு இணையானவர்கள் என்று சிரித்துக் கொண்டே கூறுகிறார் மெதகொட அபயதிஸ்ஸ தேரர். இந்த நிகண்டயாக்கள் மன்னருக்கு இலஞ்சம் வழங்கி, ஒரு கோயிலை கையகப்படுத்த முயன்றவர்கள். மறுபுறத்தில், அக்மீமன தயாரத்ன தேரர் பிரிவினை மற்றும் இரத்தம் சிந்துதல் என்பன குறித்து சூசகமாக பேசுகிறார்).

நடாஷா எதிரிசூரிய மற்றும் புரூணோ திவாகர ஆகியோர் வெற்றிகரமான விதத்தில் ஒடுக்கப்பட்டதுடன் இணைந்த விதத்தில் அரசியல் பிக்கு மீண்டும் வெளியில் வந்திருக்கிறார். விக்ரமசிங்க அரசாங்கம் அரசியல் நிர்ப்பந்தத்திற்கு அடிபணிவதற்குப் பதிலாக, சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தியிருந்தால் அரசியல் பிக்கு பின்வாங்கி, இதிலும் பார்க்க உசிதமான ஒரு தருணம் வரும் வரையில் காத்திருந்திருப்பார். ஆனால், அரசாங்கம் இங்கு மிகவும் கோழைத்தனமான விதத்தில் செயற்பட்டிருக்கிறது. அது சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சமவாய சட்டத்தை வெறுமனே ஒரு மத நிந்தனை எதிர்ப்புச் சட்டமாக திரிப்பதற்கு இடமளித்தது மட்டுமன்றி, அச்சட்டம் தெரிவு அடிப்படையில் - அதன் மூலம் பாரபட்சமான விதத்தில் - பிரயோகிக்கப்படுவதற்கு வாய்ப்பளித்திருக்கின்றது. எனவே, நடாஷா எதிரிசூரிய மற்றும் புரூணோ திவாகர ஆகியோர் பௌத்த மதத்தை இழிவுபடுத்திய காரணத்திற்காக இன்னமும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கின்றார்கள். அதே வேளையில், (சித்தார்த்த இளவரசர் அனைத்தையும் இழந்த ஒருவராக இருந்து வந்தாரா என்ற விதத்தில் சந்தேகம் தெரிவித்த) திலித் ஜயவீரவும், (கிறிஸ்தவர்களுக்கு எதிராக சிங்கள பௌத்தர்களின் ஆத்திரத்தைத் தூண்டுவதற்கு முயற்சித்த) பலங்கொடை கஸப்ப தேரரும், (பௌத்தர்கள் அல்லாதவர்கள் தமது வீடுகளிலிருந்து வெளியில் வர முடியாத அளவுக்கு ஒரு மதக் கலவரம் ஏற்பட முடியும் என அச்சுறுத்தல் விடுத்த) அக்மீமன தயாரத்ன தேரரும் சுதந்திரமாக தமது பிரிவினைவாத அரசியலை நடத்தி வருகிறார்கள்.

அரசியல்வாதிகளின் கோழைத்தனமும், சந்தர்ப்பவாதமும் அரசியல் பிக்குவை வலுவூட்டியுள்ளன. அந்தப் பின்னணியில், குருந்தூர் மலையை நோக்கிய யாத்திரை இப்பொழுது ஆரம்பித்திருக்கிறது. குருந்தூர் மலையில் அவர்கள் வெற்றியீட்டினால் இனி ஒருபோதும் அவர்களைத் தடுத்து நிறுத்த முடியாது போய்விடும். இது அவர்களுக்கேயுரிய நாடாகி விடும்.

மிகிந்தலை வளவஹங்குனவாவே தம்மரதன தேரர் சரியாக அதனையே சொல்கிறார். புராதன மன்னர்களினால் இந்நாடு புத்த பிக்குகளுக்கு (சாசன) அன்பளிப்பாக வழங்கப்பட்ட காரணத்தினால் அது மகா சங்கத்தினரின் (சாங்கிக) சொத்தாக இருந்து வருகின்றது என்கிறார் அவர். ஏனைய பிக்குகள் வடக்கு கிழக்கு காணிப் பிரச்னைகளுக்கும், அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகளை மீளமைப்புச் செய்தல்- விற்பனை செய்தல் என்பவற்றுக்கிடையில் ஓர் இணைப்பை உருவாக்குவதற்கு முயற்சித்து வருகின்றார்கள். அந்த விதத்தில், அவர்களுடைய அரசியல் நிகழ்ச்சிநிரல் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பொருளாதார நிகழ்ச்சிநிரலுக்கு முற்றிலும் எதிரானதாக இருந்து வருகின்றது. குருந்தூர் மலை பிரச்னையை அவர்கள் விக்ரமசிங்கவின் மற்றொரு வாக்குறுதியான 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்செய்வதுடன் இணைக்கிறார்கள். முன்னர் ஒருபோதும் இருந்திராத விதத்தில் சிங்கள பௌத்த ஆட்சி நடைபெறும் ஒரு நாடாக இலங்கையை மாற்றியமைப்பதே அவர்களுடைய செயல்திட்டம். அத்தகைய ஒரு நாட்டில் அதிகாரப் பகிர்வு தொடக்கம் அனுமதிக்கத்தக்க வானொலி நாடகங்கள் எவை என்பது வரையில் பெரிய விடயங்கள் தொடர்பாகவும், அதேபோல சிறிய விடயங்கள் தொடர்பாகவும் புத்த பிக்குகளே இறுதி முடிவை எடுக்கக் கூடியவர்களாக இருந்து வருவார்கள்.

உத்தேச ஒலிப்பரப்பு ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு சட்டத்தை நியாயப்படுத்தும் ஒரு முயற்சியாக ஜனாதிபதி விக்ரமசிங்க தனது நூல்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்ட விடயத்தை சுட்டிக் காட்டியுள்ளார். அது ஒரு காட்டுமிராண்டித்தனமான செயலாக இருந்து வந்ததுடன், அதனைச் செய்தவர்கள் சட்டத்தின் முன் எடுத்து வரப்படுதல் வேண்டும். துரதிர்ஷ்டவசமாக, அதனையடுத்து ஜனாதிபதி விக்ரமசிங்க அறகலயவுடன் சம்பந்தப்பட்ட அனைவர் தொடர்பாகவும் வெளிப்படுத்திக் காட்டிய பகைமை உணர்ச்சி, ஜனரஞ்சக இனவாத வலதுசாரிகளிலிருந்து தோன்றக் கூடிய அதே மாதிரியான ஆபத்துக்களைப் பார்க்க முடியாத ஒருவராக அவரை ஆக்கியிருக்கின்றது. தொல்லியல் பணிப்பாளர் நாயகத்துடன் இடம்பெற்ற ஜனாதிபதியின் இரண்டாவது சந்திப்பு தொடர்பாக கசிய விடப்பட்டிருக்கும் காணொளி தொடர்பாக பேசிய சிஹல ராவய அமைப்பின் செயலாளர் மதுபாஷன பிரபாத் எதனையும் கற்பனைக்கோ, ஊகத்துக்கோ விட்டு வைக்காமல் தெளிவாக தனது கருத்துக்களை சொல்லியிருக்கிறார்: "ராஜீவ் காந்திக்கு என்ன நடந்தது என்பது குறித்து ரணில் கவனம் செலுத்துதல் வேண்டும். ஏனென்றால், உங்களுக்கு அருகிலும் கூட தேசாபிமானிகள் இருந்து வருகிறார்கள். இந்தக் காணொளி ஜனாதிபதிக்கு மிக நெருக்கமான ஒரு குழுவினால் கசிய விடப்பட்டிருந்தது. தன்னைச் சூழ சிங்கள பௌத்தர்கள் இருந்து வருகிறார்கள் என்ற விடயத்தை அவர் புரிந்து கொள்ள வேண்டும். இச்சம்பவம் ஓர் உயர் பாதுகாப்பு வலயத்தில் நடந்திருக்கிறது. அத்தகைய ஓரிடத்திலிருந்து எளிதில் ஒரு காணொளியை கசிய விட முடியாது. அந்த தேசாபிமான பௌத்தர்கள் நாட்டுக்காக எதனையும் செய்வார்கள். நாடு தொடர்பாக தேவைப்படும் அனைத்துத் தலையீடுகளையும் அவர்கள் மேற்கொள்வார்கள்."



> **வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் வாழ்ந்து வரும் சாதாரண தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள், காணிப் பசியில் இருந்து வரும் அரசியல் பிக்குகளின் அடாவடித்தனங்களினால் பாதிக்கப்பட்ட நிலையில் எத்தகைய நிவாரணங்களும் இல்லாமல் இருந்து வருகின்றார்கள்.**

### தொல்லியலை ஒரு ஆயுதமாக கையிலெடுத்தல்

முன்னர் பௌத்த ஆலோசனை பேரவைக்கு வழங்கியிருந்த ஒரு வாக்குறுதியை நிறைவேற்றும் விதத்தில் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ 2020 ஜூன் மாதத்தில் கிழக்கு மாகாண தொல்லியல் மரபுரிமை முகாமைத்துவத்துக்கான செயலணியை நியமனம் செய்தார். இந்தச் செயலணி முதலில் ஒரே இனத்தைச் சேர்ந்த உறுப்பினர்களைக் கொண்டதாக இருந்து வந்தது. ஜனாதிபதியின் முதன்மையான சீடர்களில் ஒருவரான ஓய்வு பெற்ற ஜெனரல் கமல் குணரத்னவின் தலைமையிலான இந்தச் செயலணியில் இருந்த உறுப்பினர்களில் தெரண குழுமத்தின் உரிமையாளர் திலித் ஜயவீரவும், இரு புத்த பிக்குகளும் அடங்கியிருந்தனர். (இலங்கையில் செயல்பட்டு வரும் பல தமிழ் தொல்லியலாளர்கள் ஒருவர் கூட இந்தச் செயலணியில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை). ("ஒரு ஹிட்லராக செயற்பட்டாகிலும் நீங்கள் இதனைச் செய்ய வேண்டும்" என்ற புகழ் பெற்ற வார்த்தைகளை உதிர்த்த) வேண்டருவே உபாலி தேரரையும் உள்ளடக்கிய மேலும் நான்கு புத்த பிக்குகள் இச்செயலணியில் இருந்தனர். பின்னர் ஓர் அடையாள மதிப்புக்காக தமிழர் ஒருவரும், முஸ்லிம் ஒருவரும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

தொடக்கத்தில் நியமனம் செய்யப்பட்ட இரு புத்த பிக்கு உறுப்பினர்களில் ஒருவர் சிங்கள பௌத்த தொல்லியலின் பிதாமகர் என அறியப்பட்ட எல்லாவல மேதானந்த தேரர். ஜாதிக ஹெல உறுமய கட்சியின் ஸ்தாபகத் தலைவராகவும் இருந்த அவர் பௌத்த மதத்தை அழித்தொழிப்பதற்கு குறிப்பாக கிறிஸ்தவ அடிப்படைவாதிகள் முன்னெடுத்து வரும் சதிகள் குறித்து தொடர்ந்தும் பேசி வருபவர். "புத்த பிக்குகளுக்கு மத்தியில் எச்ஐவி தொற்றை பரப்புவது அவர்களுடைய திட்டத்தின் ஓர் அங்கம்" (சண்டே டைம்ஸ் 19.08.2007). முன்னர் ஒரு விகாரை அமைந்திருந்த ஓர் இடத்திலேயே கோணேஸ்வரம் கோயில் கட்டப்பட்டது என்றும் அவர் கூறுகிறார். கோட்டபாய ராஜபக்ஷவின் ஜனாதிபதி பதவி திடீரென முடிவுறுத்தப்படாதிருந்தால், இத்தகைய புத்த பிக்குகளின் கட்டுப்பாட்டின் கீழ் செயற்படும் இந்தச் செயலணி இலங்கையில் ஒரு அயோத்தியை உருவாக்கியிருக்க முடியும்.

இச்செயலணியில் உள்ளடக்கப்பட்டிருந்த மற்றைய உறுப்பினர் பனாமுரே திலகவன்ச தேரர். 2019 ஜனாதிபதித் தேர்தலை உடனடுத்து தொல்லியல் மரபுரிமை முகாமைத்துவம் தொடர்பாக அவர் தனது சொந்த தூர நோக்கினை முன்வைத்தார்: "இன்றைய தருணத்தில் இந்த நாட்டில் வாழும் சிங்கள பௌத்தர்களாகிய நாங்கள் அதிர்ஷ்டசாலிகளாகவும், அறிவுக் கூர்மையுள்ளவர்களாகவும் நடந்து கொண்டிருக்கின்றோம். இதோ ஒரு யுகம் உதயமாகியிருக்கிறது. அந்த துரதிர்ஷ்டவசமான கால கட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும், இந்நாட்டில் ஒரு புதிய சூழலையும், புதிய அரசாங்கத்தையும் அமைத்துக் கொள்வதற்கும் ஒரு யுகம் உதயமாகியிருக்கின்றது. ஒரு சிங்கள பௌத்த தலைவர் என்ற முறையில் அவர் (கோட்டபாய ராஜபக்ஷ) நாளை நமக்கு ஒரு சிங்கள பௌத்த தேசத்தை உருவாக்குவதற்கு முயற்சித்து வருவது குறித்து மகா சங்கத்தினர் என்ற முறையில் நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். அது ஒரு பாதுகாப்பான தேசமாக இருந்து வரும். 1980 களின் தசாப்தத்தில் திரு. சிறில் மெத்தியூ புராதன பௌத்த விகாரைகளின் இடிபாடுகளை இனங்கண்டு, அவற்றை அபிவிருத்தி செய்தார். மேலும், சிங்கள விவசாய சமூகங்களை அந்த இடங்களில் குடியேற்றினார். அவ்விதம் குடியேற்றப்பட்ட சிங்கள விவசாய சமூகங்கள் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் தொடர்ந்து வசித்து வந்திருந்தால் இந்த மாகாணங்கள் பாதுகாப்பானவையாக இருந்து வந்திருக்கும். நெருக்கடிகள் இல்லாத பிரதேசங்களாகவும் இருந்து வந்திருக்கும் அவை தீவிரவாதிகளின் பிடியில் இருந்திருக்க மாட்டாது."

தொல்லியல் துறை ஜாம்பவான் சேனக பண்டாரநாயக்க தொடர்பான 2022 நினைவுப் பேருரையில் முன்னணி தொல்லியலாளர் ஜகத் வீரசிங்க தொல்லியல் தொடர்பான நமது தப்பெண்ணங்களை சுட்டிக் காட்டினார். இலங்கையில் தொல்லியல் என்ற விடயம் ஜனரஞ்சக அலைக்கு இரையாகி, "தற்போதைய மேலாதிக்க உணர்வுகளுக்கு" சேவகம் செய்யும் நிலைக்கு அது தள்ளப்பட்டிருக்கும் விடயத்தை அவர் குறிப்பிட்டார். இது தொடர்பான தனது அச்சங்களை பேராசிரியர் பண்டாரநாயக்கவுடன் பகிர்ந்து கொண்ட பொழுது, அதற்கான அவருடைய பதில் இப்படி இருந்தது என ஜகத் வீரசிங்க குறிப்பிட்டார்: "ஹோர்ட்டன் சமவெளி குறித்து சிந்தித்துப் பாருங்கள். நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பாரிய மாற்றங்கள் இடம்பெற்று வந்த நிலையில் ஹோர்ட்டன் சமவெளியின் உயிரினவியல் சூழல் மாற்றமடையாமல் அதே விதத்தில் இருந்து வந்திருக்கிறது. உங்களுக்காகவும், உங்கள் சகாக்களுக்காகவும் ஒரு ஹோர்ட்டன் சமவெளியைக் கட்டியெழுப்புங்கள்" (சண்டே ஐலன்ட் 23.3.2022). பேராசிரியர் வீரசிங்கவின் அச்சங்கள் இப்பொழுது உண்மையாகி வருகின்றன. புத்த பிக்குகள், அரசியல்வாதிகள் மற்றும் சுயநல அக்கறை தரப்புகளுக்கு சேவகம் செய்யும் தொழில்வாண்மையாளர்கள் ஆகியோர் தொல்லியலை ஓர் ஆயுதமாகக் கையிலெடுக்கும் பொழுது அது மிகக் குரூரமான மோதல்கள் மற்றும் நீண்டகால போர்கள் என்பவற்றுக்கான விதைகளைத் தூவ முடியும். அடுத்து வரவிருக்கும் மோதல்களின் போது ஒரு 'ஹோர்ட்டன் சமவெளி' நிலைத்திருக்க முடியுமா என்பது ஒரு பெரும் கேள்விக் குறியாக இருந்து வரும் என்பதில் சந்தேகமில்லை.

கோட்டபாய ராஜபக்ஷவின் செயலணி வரலாற்றை மீள எழுதுவதற்கும், கள யதார்த்தத்துக்கு மாறான விதத்தில் ஊகங்களை உருவாக்குவதற்குமென மிகுந்த முனைப்புடன் தனது வேலைகளை ஆரம்பித்தது. ஆனால், பனாமுரே தேரர் முன்னெடுத்த 'மரபுரிமை பாதுகாப்பு' எந்த அளவுக்கு உச்சத்தை எட்டியது என்றால், செயலணியின் தலைவர் - அவருடைய அப்பழுக்கற்ற பேரினவாத சார்பு நிலைகளுக்கு மத்தியிலும் கூட - அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். ஓய்வு பெற்ற ஜெனரல் குணரத்னவுடன் 2021 பெப்ரவரி மாதம் இடம்பெற்ற ஒரு சந்திப்பின் போது மாவட்டச் செயலாளர்கள் அந்தத் தேரரினால் மேற்கொள்ளப்பட்டு வரும் பாரிய அளவிலான காடழிப்புச் செயற்பாடுகள் தொடர்பாக முறைப்பாடு செய்ததாக கூறப்படுகிறது. ஜெனரல் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். சம்பந்தப்பட்ட புத்த பிக்கு அது தொடர்பாக ஒப்புக்காக ஒரு மறுப்பை வெளியிட்டு விட்டு, தனது செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றார்.

கோட்டபாய ராஜபக்ஷ வெளியேறிய பொழுது இந்தச் செயலணி அதன் செயற்பாடுகளை நிறுத்திக் கொண்டது. ஆனால், (சிங்கள பௌத்தத்துக்கு உரியது எனக் கூறுவதன் மூலம்) கிழக்கு மாகாணத்தை அபகரித்துக் கொள்வதற்கான அரசியல் பிக்குகளின் முயற்சிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வந்தன. தேசிய மரபுரிமை பாதுகாப்புக்கான அமைப்புக்களின் சம்மேளனம் என்ற ஓர் அமைப்பு 2022 நவம்பர் மாதம் மெதகொட

(18 ஆம் பக்கம் பார்க்க)

# ஜெனிவாவின் தீர்மானங்களும் அறிக்கைகளும்; கவலை தெரிவிப்பதனால் என்ன பயன்?

**பனங்காட்டான்**




தமிழருக்கு தீபாவளிப் பெருநாள், தைப்பொங்கல் திருநாள் போன்று முள்ளிவாய்க்கால் வாரம், கறுப்பு யூலை மாதம் என்பவை முக்கியமான நினைவுக் காலங்களாக மாறிவிட்டன. இந்த வரிசையில் தற்போது ஜெனிவாக் காலமும் சேர்ந்துள்ளது.

ஒவ்வொரு வருடமும் மூன்று தடவை கூடும் மனித உரிமைகள் பேரவை கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையின் பொறுப்புக் கூறல், சர்வதேச நீதி விசாரணை பொறிமுறை என்பவற்றை வலியுறுத்தி வருகிறது. நவநீதம் பிள்ளையிலிருந்து பச்சிலற் அம்மையார் வரை நிறைவேற்றப்பட்ட எந்தவொரு தீர்மானத்தையும் இலங்கையின் எந்தவொரு அரசும் இதுவரை நிறைவேற்றவில்லை. இலங்கையில் கட்சிகளின் ஆட்சிகள் மாறிய போதும், ஜெனிவாவை நிராகரிக்கும் அதன் அடிப்படை நிரலில் மாற்றம் எதுவும் இல்லை.

இலங்கை மீது நிறைவேற்றப்பட்ட ஒவ்வொரு தீர்மானத்துக்கும் இரண்டு வருடங்களுக்கான மொத்தம் ஆறு அமர்வுகளுக்கு காலக்கெடு வழங்கப்படுவது வழக்கம். இந்த கால எல்லைக்குள் ஜெனிவாவின் பிரதான குழு (கோர் குழு) காட்டமான அறிக்கைகளை வெளியிடும். கனடா, அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய நாடுகள் இக்குழுவில் மாறி மாறி முக்கிய இடம் வகிப்பதால் இந்த அறிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

இந்த மாதம் 19ம் திகதி மனித உரிமைகள் பேரவையின் 53வது கூட்டத்தொடர் ஆரம்பமானது. இது யூலை 11ம் திகதி வரை தொடரும். இந்த அமர்வின்போது இலங்கை மீது புதிதாக தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்பட மாட்டாது. ஆனால் முன்னைய இறுதித் தீர்மானத்தையொட்டிய கரிசனைகளும் அபிப்பிராயங்களும் எதிர்பார்ப்புகளும் அறிக்கைகளாக முன்வைக்கப்படும்.

முதல் நாள் அமர்வில் பேரவையின் தலைவரான வொல்கர் டேர்க் தமது உரையில், மனித உரிமைகள் பேரவையின் விசேட ஆணையாளர்களால் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களை இலங்கை அரசு தொடர்ந்து நிராகரித்து வருவதையிட்டு கவலையை வெளிப்படுத்தினார். ஜெனிவா அமர்வுகளில் கவலை, அனுதாபம், விசனம் என்ற சொற்களை தொடர்ந்து கேட்டுகேட்டு பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு அவ்வார்த்தைகளில் ஒவ்வாமை (அலர்ஜி) ஏற்பட்டுள்ளது.

ஆனால், இப்போதிருக்கும் நிலைமையில் இதற்கும் மேலாக ஜெனிவாவால் எதனையும் செய்ய முடியாதிருப்பதால் இந்தச் சொற்பதங்களை பாவிப்பதுடன், இலங்கை அரசாங்கத்தின் மீது பரிந்துரைக்கப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியத்தை ஜெனிவா பேரவை வலியுறுத்துகின்றது என்று கூறி முடித்து வைப்பது தவிர்க்க முடியாததாகியுள்ளது.

மனித உரிமைகள் பேரவையின் ஆணைப்படி கடந்த பத்து வருட காலத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட உத்தியோத்தர்கள் நேரடியாகப் பெற்ற தகவல்களையும் தரவுகளையும் உள்ளடக்கியதான பரிந்துரைகளை இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டுமென வோல்கர் டேர்க் தமது அறிக்கையில் வேண்டியுள்ளார்.

இதுவெல்லாம் கேட்டுப் புளித்துப் போன அரசுக்கு செவிடன் காதில் ஊதிய சங்காகிவிட்டது.

மூன்றாம் நாள் அமர்வு 21ம் திகதி புதன்கிழமை இடம்பெற்றவேளை இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பான வாய்மொழி மூல அறிக்கையை பேரவையின் பதில் உயர் ஸ்தானிகர் நடா அல் நக்ஷீஃப் சமர்ப்பித்தார். இலங்கை அரசு தொடர்ந்தும் தனது பொறுப்புக் கூறலை தாமதப்படுத்தி வந்தால், பல தடைகளை இலங்கை மீது மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுமென அவர் எச்சரித்ததை இங்கே முக்கியமாகக் குறிப்பிடலாம். சர்வதேச நீதி விசாரணை பொறிமுறை இதில் அடங்கலாமென அவரால் சுட்டிக்காட்டப்பட்டது.

> ❝ ஜெனிவா மனித உரிமை பேரவை இலங்கை தொடர்பாக நிறை வேற்றும் தீர்மானங்கள் எதனையும் இலங்கை அரசு இதுவரை ஏறெடுத்தும் பார்க்க வில்லை. துயர நிகழ்வுகளில் 'கவலை' தெரிவிப்பது போன்ற அறிக்கைகளாலும் எச்சரிக்கைகளாலும் என்ன பயன்? சர்வதேச நீதிவிசாரணை பொறி முறைக்கு இன்னும் எத்தனை ஆண்டுகள் காத்திருக்க வேண்டும்?

மிகவும் மோசமான முறையிலான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நம்பத்தகுந்த ஆதாரங்கள் மனித உரிமை பேரவையிடம் உண்டு என்பதை மறைமொழியில் சுட்டிக்காட்டிய இவர், அதன் அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர்களுக்கு எதிராக தடைகளை விதிக்க வேண்டிய அவசியம் ஏற்படலாமென்று நேரடியாக கூறியுள்ளார்.

ஏற்கனவே இராணுவ உயர் அதிகாரியான சவேந்திர சில்வா, கடற்படைத் தளபதியாகவிருந்த வசந்த கரணகொட உட்பட நான்கு படைத்துறையினருக்கு அமெரிக்கா பயணத்தடை விதித்ததும், முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ச, கோதபாய ராஜபக்சவோடு மேலும் இரண்டு ராணுவ அதிகாரிகளுக்கு கனடிய அரசு பயணத்தடை விதித்ததும், நடா அல் நக்ஷீஃப் அவர்களின் எச்சரிக்கை ஊடாக நினைவுபடுத்தப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இலங்கையின் முன்னாள் படைத்துறை அதிகாரிகள் பலரை இலங்கை அரசு கனடாவுக்கு தூதுவர்களாக நியமித்தபோது அவர்களை கனடா நிராகரித்ததால், அரச பதவிகள் எதுவும் வகிக்காத ஒருவரையே இறுதியாக இலங்கை அரசு நியமிக்க நேர்ந்ததையும் இங்கு கவனிக்கலாம்.

1978ல் ஜனாதிபதியான ஜே.ஆர். ஜெயவர்த்தன பயங்கரவாத தடைச்சட்டத்தை குறுகிய காலத்துக்கானதாக அமலாக்கினார். தமிழ் இளைஞர்களை இலக்கு வைத்து நிறைவேற்றப்பட்ட இச்சட்டத்துக்கு சிங்கள அரசியல்வாதிகள் அனைவரும் ஏகோபித்து ஆதரவு வழங்கினர். இந்தச் சட்டம் இன்றுவரை தொடர்கிறது. சர்வதேசத்தின் நெருக்குவாரம் காரணமாக இதனை நீக்குவதாக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தாராயினும் அது இதுவரை நடைபெறவில்லை.

இதற்குப் பதிலாக பிரித்தானியாவில் இருப்பது போன்ற பயங்கரவாத எதிர்ப்பு தடைச்சட்டம் கொண்டுவரப்படுமென தெரிவித்த நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச, புதிதாக ஒன்றை தயாரித்து சில வாரங்களுக்கு முன்னர் சமர்ப்பித்தார்.



புதிய தயாரிப்பு முன்னையதைவிட மோசமானதென சிங்கள அரசியல் கட்சிகளே கடுமையாக எதிர்த்ததால் அதனை எதிர்பார்த்தவாறு ரணில் அரசினால் நிறைவேற்ற முடியாது போயிற்று.

அமைதி முறையிலான போராட்டங்களை மேற்கொள்வதற்கான உரிமை, தொழிலாளர் நலன் பேணும் உரிமை என்பவைகளைக்கூட மட்டுப்படுத்தும் அல்லது நசுக்கும் வகையில் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் உருவாக்கப்பட்டதாகக் கூறி சிங்களத் தரப்புகள் இதனை எதிர்த்தன.

இதனை தமது அறிக்கையில் அடையாளப்படுத்திய நடா அல் நக்ஷீஃப் அவர்கள், பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டுமென்றும், அதனை நடைமுறைப்படுத்துவதை உடனடியாக இடைநிறுத்த வேண்டுமெனவும் கோரியுள்ளார். இதனைக்கூட ரணில் அரசு காதில் போட்டுக் கொள்ளாது என்று நிச்சயமாகக் கூறலாம்.

மைத்திரி - ரணில் நல்லாட்சி(?) அரசு அப்போது அமெரிக்கா முன்மொழிந்த பொறுப்புக்கூறல் விசாரணைக்கு இணை அனுசரணை வழங்கியதை மறந்துவிட முடியாது. ராஜபக்சக்களை முறையாகக் காட்டிக்கொடுத்து மாட்டி விடவே நல்லாட்சிக் காலத்தில் அமெரிக்காவுடன் இணைந்து இணைஅனுசரணை வழங்கப்பட்டது.

ஆனால், இன்று ராஜபக்சக்களின் அனுசரணையில் - அவர்களது பெரமுனவின் பெரும்பான்மையில் ஜனாதிபதியானதால் அன்றைய இணை அனுசரணையை ரணில் தலைமையிலான அரசு இன்று மீளப்பெற்றுள்ளது. அதுமட்டுமன்றி அமெரிக்கா முன்மொழிந்த தீர்மான நடைமுறையை மறுதலித்தும் வருகிறது.

இலங்கையில் அவ்வப்போது நியமிக்கப்பட்ட பல்வேறு ஆணைக்குழுக்களின் கேவலத்தையும் நடா அல் நக்ஷீஃப் தமது அறிக்கையில் சுட்டிக்காட்டத் தவறவில்லை. 'இலங்கையில் கடந்த காலங்களில் பல்வேறு ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்ட போதிலும் அவை அனைத்தும் பெரும்பாலும் தோல்வியடைந்துள்ளன" என்று குறிப்பிட்ட இவர், காணாமல் போனோர் விடயத்துக்காக நியமிக்கப்பட்ட அலுவலகமும் பாதிக்கப்பட்ட தரப்பினரை திருப்திப்படுத்தவில்லையென்று விரல் நீட்டியுள்ளார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு ஆணையாளர்களை நியமிப்பதற்கு அரசியலமைப்புப் பேரவை முன்னெடுத்துள்ள நடவடிக்கை அக்கட்டமைப்பின் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்துவதாக இருக்க வேண்டுமென இவர் தெரிவித்துள்ளதானது, அதன் மீதான நம்பிக்கையின்மையை வெளிப்படுத்துகிறது.

கனடா, மாலாவி, மொன்டினீக்ரோ, வடக்கு மசிடோனியா, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய ஷகோர் குரூப்; இலங்கையில் தொடர்ந்து பயங்கரவாத தடைச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கான எதிர்ப்பை கவலையாக வெளிப்படுத்தியுள்ளது.

எதிர்வரும் செப்டம்பர் மாதத்தில் மனித உரிமைப் பேரவை இலங்கை தொடர்பாக முன்னெடுக்க வேண்டிய காத்திரமான நடவடிக்கைகளுக்கு கட்டியம் கூறுவதாக 53வது அமர்வின் அறிக்கைகள் காணப்படினும், இதனையிட்டு இலங்கை அரசு வழமைபோல அலட்டிக் கொள்ளாமல் அனைத்தையும் தவிர்த்துச் செல்லும் போக்கே காணப்படுகிறது. இதனையிட்டு தொடர்ந்து ஜெனிவா கவலைதான் கொள்ளும் என்றால், அதனால் யாருக்கு என்ன பயன்?

●

# ‘தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு’ – மக்களுக்கானதா? கட்சிகளுக்கானதா?

கந்தையா அருந்தவபாலன்




ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி (DTNA) என்ற பெயரில் ஏலவே பதிவு செய்திருந்த அரசியல் கட்சி ஒன்றின் பெயரில் கூட்டாக இணைந்து உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்ளப் போவதாக கடந்தஜனவரி மாதம் 14ஆம் திகதி அறிவித்த ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் மற்றும் தமிழ் தேசியக் கட்சி, ஜனநாயக போராளிகள் கட்சி என்பவற்றின் தலைவர்கள் அண்மையில் வவுனியாவில் ஒன்றுகூடி தமது எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பான பல தீர்மானங்களை எடுத்திருந்தார்கள். அவற்றுள் உண்மையான தமிழ்தேசிய கூட்டமைப்பு தாங்களே என்பதையும் அவர்கள் வெளிப்படுத்தியிருந்தார்கள்.இதனை அவர்கள்தங்கள் தொடக்கக் கூட்டத்திலும் சுட்டிக்காட்டியிருந்ததுடன் தேர்தல் விளம்பரங்களிலும்பயன்படுத்தியிருந்தனர். அதேவேளை தமிழ் தேசியக் கூட்டம்மைப்பின் பிரதான கட்சியான இலங்கைத்தமிழரசுக் கட்சி தாங்கள் கூட்டமைப்பிலிருந்து வெளியேறவில்லை, தேர்தலில் அதிக உறுப்பினர்களைப் பெறுவதற்கான ஒரு உத்தியாகவே தனித்து தேர்தலில் போட்டியிடுகிறோம் என்று கூறியதுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரை தேர்தலில் எவரும் பயன்படுத்தக் கூடாது எனவும் பங்காளிக் கட்சிகள் முடிவெடுத்திருந்ததாகவும் கூறியிருந்தது. இந்நிலையில் மீண்டும் ஜனநாயக தமிழ் தேசியக் கட்சித் தலைவர்களின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான உரிமைக்கோரிக்கை தொடர்பாக எவ்வித எதிர்வினையும் தமிழரசுக் கட்சியிடமிருந்து இப்பத்தி எழுதும்வரை வெளியாகவில்லை. எப்படியிருப்பினும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எனும் பெயர் தமிழ் மக்களிடையே பல்வேறு காரணங்களால் கௌரவத்துக்குரிய ஒன்றாகக் கருதப்படுவதாலும் அதுவே தமிழர்களின் தரப்பாக இதுவரை கருதப்படுவதாலும் அப்பதாகையின் கீழ் தேர்தல்களில் போட்டியிடுவது தமக்குச் சாதகமாக அமையும் என்பதால் அப்பெயரின் உரிமைக்காகப் போட்டி போடுகின்ற அரசியல் கட்சிகள், அது உருவாக்கப்ப்பட்டதற்கான நோக்கம் பற்றியோ,அதன்மூலம் உரிமைப் போராட்டத்திற்குக்கிடைத்த சாதக விளைவுகள் பற்றியோ, அதனடிப்படையில் எதிர்காலத்துக்காகத் திட்டமிடுவதுபற்றியோ அக்கறை கொள்வதாகத் தென்படவில்லை. 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பங்காளித் தலைவர்கள் இவையெல்லாவற்றையும் கைவிட்டு தனியே தேர்தல்வெற்றிக்கான ஒரு கோசமாகவே அப்பெயரைப் பயன்படுத்தி வந்துள்ளதைக் காணமுடியும். இவ்வகையில் இனிமேல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தாங்கள்தான் எனக்கூறும் ஜனநாயக தமிழ்தேசிய கூட்டணி அப்பெயரை உரித்தாக்குவதற்குவான வாய்ப்புகள் பற்றியும், அதன்மூலம் அக்கட்சிஎதிர்பார்க்கும் வெற்றிகள் சாத்தியத் தன்மை தொடர்பிலும் இப்பத்தி கவனஞ் செலுத்துகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது தேர்தல் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியல் கட்சி அல்ல.அங்கீகரிக்கப்பட்ட சில அரசியல் கட்சிகளின் தேர்தலுக்கான ஒரு கூட்டு மட்டுமே. இதுபோல தென்னிலங்கையிலும் கட்சிகளின் கூட்டணிகள் சில உள்ளன. இவ்வறான தேர்தல்கூட்டைத் தேர்தல் திணைக்களம் அங்கீகரிப்பதுடன் குறிப்பிட்ட கட்சிகளின் உடன்பாட்டின் பிரகாரம் வரையறுக்கப்பட்ட தேவைகளுக்கு அதனைக் கையாண்டும் வருகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புஎன்ற எண்ணக்கரு 2001இல் ஊடகவியலாளர் சிவராம் தலைமையில் கிழக்கு மாகாணத்தின் சில சமூகச் செயற்பாட்டாளர்களும் கொழும்பில்லுள்ள சில தொழில் அதிபர்களும் இணைந்து உருவாக்கியதாகும். இதன் உருவாக்கத்தில் விடுதலைப் புலிகள் நேரடியாக பங்கு கொள்ளாவிடினும் மறைமுகமான ஆசீர்வாதமும் ஒப்புதலும் இருந்தது. அந்நேரத்தில் இவ்வாறான தொருகூட்டுக்கான தேவைபற்றிச் சிந்திக்கவும் அதனை ஏற்கவும் அடிப்படையாக அமைந்த பிரதான காரணம் 2000ஆம் ஆண்டில் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்ப் பிரதிநிதிகளின் எண்ணிக்கைஎன்றுமில்லாதவாறு வீழ்ச்சி அடைந்தமையாகும். நிலவும் விகிதாசாரத் தேர்தல் முறையின் கீழ்தமிழ்த்தரப்பு பல கட்சிகளாகப் பிரிந்து தனித்தனியாக தேர்தலில் போட்டியிட்டதால் கிழக்கு மாகாணத்தில் பல உறுப்பினர்களை இழக்கவேண்டி ஏற்பட்டது. திருகோணமலையில் சம்பந்தன்தோல்வி அடைந்தது மட்டுமன்றி அங்கு தமிழர் பிரநிதித்துவமும் இல்லாமல் போனது. இதனால்தமிழ்த்தேசியப் பரப்பிலுள்ள அரசியல் கட்சிகள் ஒன்றுபடுவதன் மூலமே பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை தக்கவைக்க முடியும் என்ற பட்டறிவின் விளைவாக இக்கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்,ரெலோ,ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆகிய நான்கு கட்சிகள் கூட்டுச் சேர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக அறிவிக்கப்பட்டதுடன் 2001 இல் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு 15 உறுப்பினர்களையும் பெற்றுக்கொண்டது. இதன் மூலம் பிரிந்து நின்கும் தமிழர் தரப்பு ஒற்றுமைப்படுவதன் மூலமே சாதிக்க முடியும்என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கத்திற்கான நோக்கம் அனுபவ ரீதியாக உணர்த்தப்பட்டது. அதன்பின் 2004 இல் நடந்த பாராளுமன்றத் தேர்தலின் போது தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு முழுமையாக விடுதலைப் புலிகளின் ஆளுகைக் குள் வந்ததுடன் தேர்தல் வெற்றிக்கான கூட்டு என்பதற் கப்பால் தமிழ்த் தேசியத்துக்கான ஜனநாயக முகம் என்ற சிறப்பிடத்தையும் அது பெற்றுக்கொண்டது. இந்த வகையில் தமிழ்த்த தேசியக் கூட்டமைப்பின் வரலாறு தமிழ்த் தரப்பின் ஒற்றுமை, தமிழர் உரிமைப் போராட்டத்துக்கான ஜனநாயக வடிவம் என்ற இரு முக்கிய பண்புகளை உணர்த்தி நிற்கிறது.இந்த இரு விடயங்களையும் இதுவரை கூட்டமைப்பாக இருந்தவர்கள் குறிப்பாகத் தமிழரசுக் கட்சியினர் கருத்தில் எடுத்துச் செயற்பட்டார்களா? அவ்வாறு செயற்பட்டிருந்தால் ‘கழுதை தேய்ந்து கட்டெறும்பான’ நிலைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று தள்ளப்பட்டிருக்காதே. சரி, இப்போது உரிமை கோருபவர்கள் அவற்றைக் கருத்திற் கொண்டார்களா? கருத்திற் கொண்டிருந்தால்பிரிந்திருக்க மாட்டார்களே.பொதுப் பிரச்சினைகளில் ஏனைய கட்சிகளுடன் ஒன்றுபட்டு கூட்டாகஇயங்குவோம் எனக்கூறும் இவர்கள் பதவிகளுக்காகவே பிரிந்து நிற்கிறோம் என்பதை மறைமுகமாகஏற்றுக்கொள்கிறார்கள் எனக்கொள்வது தவறாகாது.

அரசியல் கட்சி ஒன்றில் பிளவுகள் ஏற்படுமிடத்து சட்டரீதியாக கட்சியின் பெயர், சின்னம் என்பவற்றை யார் உரிமை கோரத் தகுதி உடையவர் என்பதை பல காரணிகள் தீர்மானிக்கும் எனினும் பெரும்பாலான உறுப்பினர்களின் ஆதரவும் அதன்மூலம் முக்கிய பதவிகளைத் தக்க வைக்கும் தரப்புக்கு அதற்கான வாய்ப்பு கிடைக்கும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அப்படியான ஒன்றன்று. அதற்கெனதனியான யாப்பு,நிர்வாகம்,பதிவு எதனையும் கொண்டிராத அருவப் பொருள் அது. அதற்கு மேலாக அதன்தற்போதைய சின்னமாகக் கருதப்படும் வீடு தமிழரசுக் கட்சியினுடையது. இதனால் சட்டரீதியாகஅதனை எவரும் உரிமை கோரும் தகுதி அதற்கில்லை. ஆனால் இவ்வாறான கூட்டு ஒன்றில் இருந்தகடசிகளில் பெரும்பான்மைக் கடசிகள் ஒன்றாக தொடர்ந்தும் இயங்குமாயின் அப்பெயரை உரிமைகோரும் தார்மீகத் தகுதியை அவை பெறும் என்பதையும் நாம் மறுக்க முடியாது. இவ்வடிப்படையில்ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி என்ற கட்சியில் இணைந்துள்ளவர்கள் அவர்கள் கூறுவது போல தம்மைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எனக்குறிப்பிடுவதற்கான ஏதுநிலைகள் உள்ளனவா?

ஏலவே சுட்டியது போல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தொடக்கப் பங்காளிகள் தமிழர் விடுதலைக்கூட்டணி,அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்,ரெலோ,ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆகிய நான்குகட்சிகளாகும்.தொடங்கும் போது இணையாத புளொட் 2013 ஆண்டில்தான் இணைத்துக்கொள்ளப்பட்டது. விடுதலைப் புலிகளுக்கும் ஆனந்தசங்கரிக்கும் இடையிலான முரண்பாடுகள் காரணமாக தமிழர் விடுதலைக் கூட்டணி 2004 இல் கூட்டமைப்பிலிருந்து வெளியேறிவிட்டது. ஆயினும் அக்கட்சியின் பெரும்பாலான தலைவர்கள் ஆனந்தசங்கரியுடன் சேர்ந்து வெளியேறாது வீட்டுச் சின்னத்துடன் தமிழரசுக் கட்சியாக கூட்டமைப்பில் தங்கிவிட்டனர். பின்னர் 2010இல் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியது. 2015 ஆம் ஆண்டுக்குப் பின் ஈ.பி.ஆர்.எல்.எவ்வும் அக்கூட்டமைப்பிலிருந்து வெளியேறிவிட்டது. தர்க்க ரீதியாக நோக்கினால் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் வெளியேற்றத்துடன் தொடக்கக் கட்சிகள் நான்கில் மூன்று வெளியேறிவிட்டதால் தார்மீக ரீதியாக கூட்டமைப்பு என்பது வலுவிழந்து விட்டது. இப்போது மீண்டும் தொடக்கக் கட்சிகளில் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சிகளுடன் இடையில் இணைந்து கொண்ட புளொட்டும் ஒரே அணியில் இருப்பதால் தாங்கள்தான் கூட்டமைப்பு என வெளிப்படுத்துவது நியாயமானது எனக் கருதுகின்றன. அதேவேளை ஈ.பி.ஆர்.எல்.எவ் என்ற பெயரில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு அரசியல் கட்சியும் அதன் சின்னமான பூவும் இப்போது இல்லை.பதிலாகத் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்ற கட்சியும் அதன் மான் சின்னமுமே இப்போது உள்ளது. மேலும் அக்கட்சி அக்கூட்டணியிலிருந்து விலகியதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் வந்ததாகத் தெரியவில்லை என்பதுடன் புதிதாக அங்கீகரிக்கப்பட்ட தமிழ் மக்கள் கூட்டணிக்கு மான் சின்னத்தை வழங்கவும் அக்கட்சி உடன்படவில்லை. அத்துடன் தேர்தல் திணைக்களத்தில் அக்கட்சி ஒரு தேர்தல் கூட்டணியாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் அதை கூட்டமைப்பின் தொடக்கக் கட்சியாகக் கருதுவது எவ்வளவு தூரம் பொருத்தமானது என்ற ஐயமும் எழுவது தவிர்க்க முடியாது. இவ்வாறு மூன்று கட்சிகள் இணைந்திருந்தாலும் இக்கூட்டணியைதமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக மக்கள் ஏற்றுக் கொண்டார்களா?இல்லையா? என்பதை எதிர்காலத்தேர்தல்கள் தான் தீர்மானிக்கும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற பதாகையின் கீழ் தேர்தல்களில் போட்டியிடுவதன் மூலம் ஜனநாயகதமிழ் தேசிய கூட்டணிக் கட்சிகளுக்கும் அப்பதாகையின்றி தனித்து போட்டியிடுவதன் மூலம் தமிழரசுக்கட்சிக்கும் வரும் தேர்தல்களில் அவற்றின் வாக்கு வங்கிகளில் கணிசமான மாற்றங்கள் ஏற்படும் சாத்தியங்கள் தற்போதைய களநிலைமைகளில் காணப்படுவதாகத் தெரியவில்லை. முன்னரைப் போன்று தனியே கட்சிப் பெயர், சின்னம் என்பவற்றை கருத்திற் கொண்டு மக்கள் வாக்களிக்கும் நிலை இப்போது அருகிவிட்டது. அரசியல் கட்சிகளின் அணுகுமுறை,தேர்தல் உத்திகள்,நிதி போன்ற பல்வேறு காரணிகளுடன் ஊடகங்களின் அபரிதமான வளர்ச்சியும் இன்று தேர்தல் வெற்றியில் அதிகம்செல்வாக்குச் செலுத்துகின்றன. இதனால் புதிய கட்சியில், புதிய சின்னத்தில் வெற்றி பெறுவதுகடினமான விடயமில்லை என்பதற்கு ராஜபக்ஷக்களின் பொதுஜன பெரமுன கட்சி பெற்ற வெற்றி சிறந்தஎடுத்துக்காட்டு. எனவே தமிழ்த் தேசியக் கூட்மைப்பு என்ற பெயர் மட்டும் வெற்றியையோ அல்லது தோல்வியையோ தீர்மானித்துவிடப் போவதில்லை. அத்துடன் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களின் அரசியல் மற்றும் தனிப்பட்ட செயற்பாடுகள் கூட்டமைப்பின் மீதான தமிழ் மக்களின் நம்பிக்கையை அதிகளவில் பாதிப்புறச் செய்துள்ளன. அதன் தாக்கத்தை 2020 பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் காட்டி நிற்கின்றன. மேலும் போராளிக் கட்சித் தலைவர்களின் மீதானதமிழ் மக்களின் எதிர்மறை எண்ணங்கள் இன்றும் கணிசமாக உள்ளன. அவர்களின் கடந்தகாலசெயற்பாடுகள் பல இன்றும் விமர்சிக்கப்படுவதுடன் தேர்தல் வரும்போது அவை எதிர்க்கட்சிகளால் ஊதிப் பெருப்பிக்கப்படும். சுரேஸ் பிரேமச்சந்திரன், “ரீகாந்தா, சிவாஜிலிங்கம் போன்ற தலைவர்கள் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து கூட்டமைப்பாகத் தேர்தலில் பெற்ற வாக்குகளின் அளவுக்கும் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியபின் தேர்தலில் பெற்ற வாக்குகளின் அளவுக்கும் இடையில் அதிகளவுவீழ்ச்சி உள்ளது. ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சிக்கான வாக்கு வங்கி வடக்கு கிழக்கில் பரவலாக இருந்தாலும் அதன்செறிவு குறைவானது. ரெலோ கட்சிக்கான வாக்கு வங்கி யாழ் தேர்தல் மாவட்டத்தில் குறைவாகஇருந்தாலும் வன்னி மாவட்டத்தில் கணிசமாக உள்ளது. அந்த வாக்கு வங்கியைத் தக்க வைப்பதற்குத்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பதாகை அதற்கு அவசியமில்லை எனினும் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து தேர்தலில் பெற்றளவு வாக்குகளை அதனால் தனித்து அல்லது புதிய கூட்டில்பெறமுடியாதிருக்கும். புளொட் கட்சி என்றால் அது சித்தார்த்தன் தான். அதுவும் யாழ் மாவட்டத்தில்தான் அதனது வாக்கு வங்கி உள்ளது. அந்த வாக்குகள்கூட கட்சிக்கானதல்ல. அது சித்தார்த்தன் என்றதனிமனிதனுக்கானது. அதுவும் அவரது தந்தையின் அரசியல் முதுசொத்தில் இருந்து வந்ததாகவே நோக்கப்படுகிறது.அதனால் அவரது வாக்கு வங்கி தமிழரசுக் கட்சியுடன் பின்னிப் பிணைந்தது.அவருக்கு எதிராக தமிழரசு களத்தில் நிற்குமானால் அவருக்கான வாக்குகள் கணிசமாக வீழ்ச்சி காணும். திட்மிட்டவாறு

(18ஆம் பக்கம் பார்க்க)

# மீண்டும் தலை தூக்குகிறது இந்திய மீனவர் அத்துமீறல்!

இந்திய மீனவர்களுக்கு இதுவரை காலமும் மீன்பிடித் தடைக்காலம் அமுலில் இருந்தமையால் குறைவடைந்திருந்த இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள்-தடைக்கால முடிவடைந்த பின்னர் மீண்டும் தகைதூக்கியுள்ளன.

இலங்கை கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் இப்போது அதிகரிக்கத் தொடங்கி விட்டன.

இந்த பிரச்னை நீண்ட காலமாக தொடர்ந்தாலும் அதனை தீர்ப்பதற்கு யாரும் முன் வரவில்லை என மீனவர் சங்கப் பிரதிநிதிகள் குற்றம் சாட்டுகின்றார்கள்.

இந்த விடயத்தில் இரு நாட்டு அரசுகளும் தொடர்ந்தும் மெத்தனப்போக்குடனேயே செயற்பட்டு வருகின்றன.

இந்திய மீனவர் அத்துமீறல் விடயத்தில் இரு நாடுகளும் தங்கள் தங்கள் அரசியல் நலன் சார்ந்தே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதில் எந்தவிதமான மாற்றுக் கருத்துகளும் இல்லை.

தமிழ் மீனவர்களின் பிரச்னைகளை நன்கறிந்த-அரசுடன் நெருங்கி செயற்பட்டுக்கொண்டிருக்கின்ற தமிழரான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடற்றொழில் அமைச்சுப் பதவியை வகிக்கின்றபோதும் இந்த பிரச்னைக்கு முடிவை எட்டமுடியாத இழுபறி நிலை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இதனால் தொடர்ச்சியான பாதிப்பை எதிர்கொள்வது தமிழ் மீனவர் சமூகம்தான்.

இது குறித்து தமிழ் மீனவர் சமூகத்தவர்கள் என்ன சொல்கிறார்கள்?

## எம்மை ஏமாற்றுகிறார்கள்

**க.வர்ணகுலசிங்கம்,**
வடமராட்சி வடக்கு சமாச முன்னாள் தலைவர்



இந்திய மீனவர்களின் மீன்பிடித் தடைக்காலம் முடிந்து இந்திய இழுவை மடி படகுகள் எமது கடல் எல்லைக்குள் நுழைந்து நாசகாரமான வேலைகளைச் செய்து கொண்டிருக்கின்றன. அதேபோல உள்ளூர் இழுவை மடி மீனவரும் நாசகார வேலைகளைச் செய்கின்றார்கள். குறிப்பாக எங்களுடைய கடல் வளமும் மக்களின் வாழ்வாதாரமும் அழிக்கப்படுகின்றன.

அதாவது மீனவர் சமூகத்தைச் சாவுக்குள் தள்ளி இருக்கிறார்கள். குறிப்பாக கடற்தொழில் அமைச்சு மீனவர் பிரச்னைக்கு என்ன முடிவு எடுக்கப்போகின்றது?

நீண்ட காலமாக இந்த பிரச்னையை கடற் தொழில்அமைச்சுக்கு கொண்டு சென்றோம். குறிப்பாக முன்னாள் பிரதமராக இருந்த மகிந்த ராஜபக்ஷகூட கூறினர், 15 நாட்கள் தவணை தாருங்கள் தீர்த்து வைக்கின்றேன் என்று. ஆனால் நீண்ட காலமாக தமிழ் மீனவர்களை இந்த அரசாங்கங்கள் ஏமாற்றிக் கொண்டிருக்கின்றன.

இந்திய அரசாங்கத்தோடு பேசி இந்த பிரச்னைகளை நிறுத்துமாறு நீண்ட காலமாக நாங்கள் கோரிக்கை விடுத்து வருகின்றோம். தடைக்காலம் முடியும் நேரத்தில்கூட நாம் யாழ்.இந்திய துணைத் தூதரகத்தில் ஒரு மகஜர் கையளித்திருந்தோம்.

நமது எல்லைக்குள் இந்திய மீனவர்கள் வருகையை தடுத்து எமது வாழ்வாதாரத்தை பாதிக்காதவாறு காக்குமாறு கோரி இருந்தோம்.

ஆனால் இன்று வரை அதற்குரிய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கடந்த வாரம் கூட 30 இற்கும் மேற்பட்ட இந்திய மீனவர்களும் ஐந்து படகுகளுடன் கடற்படையால் கைது செய்யப்பட்டனர். தொடர்ந்து இவ்வாறான ஒரு சிக்கலான வாழ்க்கையை வாழ்வதற்கு எங்களால் முடியாது.

குறிப்பாக தற்பொழுது கடற்படை உத்வேகமாக செயல்படுவதன் காரணமாக அத்துமீறும் பல படகுகள் கைது செய்யப்பட்டு அரசுடமையாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

ஆனால் இரண்டு நாட்டு அரசாங்கங்களும் சேர்ந்து இதற்கு ஒரு தீர்வு காணும் வரை இந்த பிரச்னைக்கு தீர்வு கிட்டாது. இதன் காரணமாக வடக்கு-கிழக்கில் உள்ள மீனவர் சமூகங்கள் மிகவும் பாதிப்பை எதிர்நோக்குகின்றன.

எமது வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்படுகின்றது. குறிப்பாக அத்துமீறித் தொழிலில் ஈடுபடுவதன் காரணமாக எமது வலைகள் நாசமாக்கப்படுகின்றன. அத்தோடு நாங்கள் பயத்துடன் கடலுக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்ட யுத்த காலத்தில் கூட நாங்கள் இவ்வாறு பயப் படுட் கடலுக்குச் சென்றதில்லை. எனவே எதிர்வரும் மாதம் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்குச் செல்ல உள்ளதாக பத்திரிகை வாயிலாக அறிகின்றோம். இந்திய இழுவைமடித் தொழில் தொடர்பில் உடனடி நட வடிக்கை எடுப்பதற்கு இந்திய பிரதமருடன் பேசி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

குறிப்பாக கடந்த காலங்களில் இழுவைமடித் தொழிலைத் தடை செய்யும் சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு தற்போது கிடப்பில் காணப்படுகின்றது. அது உள்ளூர் படகுகளுக்கும் பொருந்தும். ஆனால் தற்பொழுது அந்த சட்டம் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

குறிப்பாக ஒருங்கிணைப்புக் கூட்டங்களில் இழுவைமடி சம்பந்தமாக யாரும் வாய் திறக்கின்றார்கள் இல்லை. என்ன காரணம் என்று தெரியவில்லை. நாங்கள் சட்டத்தை நடைமுறைப்படுத்தக் கோருகின்றோம். நாங்கள் சட்டத்துக்கு முரணாக எதையும் செயல்படுத்துமாறு கோரவில்லை.

96 ஆம் ஆண்டு சட்டத்தையும் 2017 ஆம் ஆண்டு சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறுதான் நாங்கள் கோரிக்கை விடுகின்றோம். நாங்கள் புதிதாக ஒன்றையும் அரசிடம் கேட்கவில்லை. அரசாங்கம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டமூலத்தை நடைமுறைப் படுத்துமாக இருந்தால் இந்த அத்துமீறல்கள் முற்றாக நிறுத்தப்படும்.

அத்தோடு தற்பொழுது நாடு பொருளாதார நெருக்கடியில் உள்ள நிலையில் உள்ள வளத்தை வேறொரு நாட்டு மீனவர்கள் எடுத்துச் செல்வதற்கு இந்த அரசாங்கம் அனுமதிக்கக்கூடாது. தமிழ் அரசியல்வாதிகள் தடை செய்யப்பட்ட தொழில்களை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாராளுமன்றம் மற்றும் உரிய திணைக்களங்கள் மற்றும் ஏனைய அமைப்பு மட்டத்தில் இந்த விடயத் தைக் கொண்டு சென்று இந்த சட்டமூலத்தை நடைமுறைப் படுத்தி சட்டவிரோதமான செயற்பாடு களை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லை என்றால் எதிர்வரும் காலங்களில் எமது சந்ததி செத்துத்தான் போகவேண்டியுள்ளது. ஏனென்றால் நாங்கள் கடலுக்குச் செல்ல தயங்கும் நிலை காணப்படுகிறது - என்றார்

## அடாவடி தொடர்கின்றது

**அன்ரனி**
யாழ்.மாவட்டக் கடற்றொழிலாளர் சமாசங்களின் சம்மேளன தலைவர்



குறிப்பிட்ட காலத்துக்கு பின்னர் மீண்டும் இந்திய இழுவைமடி படகுகள் இலங்கை கடற்பரப்புக்குள் நுழைந்து தொழிலில் ஈடுபட ஆரம்பித்துள்ளன.

மீண்டும் தங்கள் அடாவடித்தனங்களை எங்களிடம் திணிப்பதற்கு முற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அந்த வகையில் கடந்த வாரம் கூட நான்கு படகுகளுடன் 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இந்த கைது அதிகரிக்கப்படவேண்டும். குறிப்பாக அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களை கைதுசெய்ய வேண்டும்.

அத்தோடு இலங்கை கடற்பரப்புக்குள் நுழையும் இந்திய படகுகள் அனைத்தையும் கடற்படை கைது செய்யும்போதுதான் வருகையை குறைக்க முடியும்.

அத்தோடு ஜனாதிபதி இந்தியா சென்று கலந்துரையாடல் மேற்கொள்ளவுள்ளதாக அறிந்துள்ளோம். அந்த வகையில் இந்தியா செல்லும் ஜனாதிபதி வடக்கு மீனவர்களின் பிரச்னை களையும் அங்கே முதன்மைப் படுத்தி கதைத்து மத்திய அரசாங்கத்துடன் பேசி நமக்கு ஒரு தீர்வு பெற்று தரவேண்டும் என்பது எமது கருத்தாகும். அது தவறும் இடத்தில் பிரச்னைக்கு தீர்வு எட்ட முடியாது.- என்றார்.

## ஜனாதிபதி நல்ல தீர்வை எங்களுக்கு தரவேண்டும்



**ஆ.அன்னராசா**

2023 ஆம் ஆண்டு இந்திய மீனவர்களின் மீன் பிடித் தடைக்காலம் இந்த மாதம் 15 ஆம் திகதியுடன் நிறைவ டைந்துள்ள நிலையில் இந்திய மீனவர்களின் வருகை தீவகப் பிரதேசங்களில் அதிகரித்துள்ளது. கடந்த வாரங்களில் 30 இற்கும் மேற்பட்ட இந்திய மீனவர்கள் ஐந்து படகுகளுடன் கடற்படையால் கைது செய்யப்பட் டுள்ளனர்.

ஆனால் நாங்கள் இந்திய அரசாங்கத்தையும் இந்தியத் துணைத் தூதரகத்தையும் கோரி இருக்கின்றோம். எமது கடற் பிரதேசத்துக்குள் இழுவைமடித் தொழில் இரண்டு அரசாங்கங்களும் ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் தடை செய்யப்பட்டுள்ள நிலையில் இந்த வளத்தை அழிக்கும் இந்திய மீனவர்களைக் கட்டுப் படுத்துமாறு நாங்கள் கோரியிருக்கின்றோம்.

இலங்கையின் ஜனாதிபதி எதிர்வரும் மாதம் இந்தியாவுக்கான தனது உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ள இருக்கின்றார்.

அந்த உத்தியோகபூர்வ பயணத்தின்போது ஜனாதிபதி இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து இந்த விடயம் குறித்து பேசவேண்டும்.

2016 ஆம் ஆண்டு இரண்டு நாட்டு வெளிவிவகார அமைச்சு மட்டத்தில் ஆராயப்பட்டு பேச்சுவார்த்தையில் எட்டப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக இந்திய மத்திய அரசாங்கத்தோடு கலந்துரையாடி இலங்கை மீனவர்களுடைய பிரச்னைக்கு ஒரு சுமுகமான-ஒற்றுமையான தீர்வு என்ன என்பதை பெற்றுக் கொள்ளும் வகையில் ஜனாதிபதியின் விஜயம் அமைய வேண்டும்.

அதேபோன்று இந்தியாவோடு ஜனாதிபதி இந்த பிரச்னையை பேசி ஒரு நல்ல தீர்வை வெளிவிவகார அமைச்சு மட்டத்தில் எட்டவேண்டும் என்பதுதான் எங்களுடைய எதிர்பார்ப்பு.

அறிக்கையிடல்
REPORTING
என். குகராஜ்

## பேச்சுக்களில் தீர்வு எட்டப்படவில்லை

**அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ் ரட்ணகுமார்**
மாவட்ட கடற்தொழில் சமாச உபதலைவர்



வடக்கில் உள்ள மீனவர்கள் தற்போதைய ஜனாதி பதியிடம் அவசர கோரிக்கை ஒன்றினை முன்வைக்கின்றோம். அதாவது ஜனாதிபதி எதிர்வரும் மாதம் இந்தியா வுக்கு செல்ல உள்ளார்.

இந்தியாவில் பிரதமர் மோடியைச் சந்திக்க உள்ளார். அதற்கு முன்னர் வடக்கில் மீனவர்கள் எதிர்நோக்கும் இந்திய இழுவைமடி பிரச்னை தொடர்பில் கடற் தொழில் அமைச்சருடன் ஆராய்ந்து இந்திய பிரதமரி டம் இந்த விடயங்களை எடுத்துக்கூறி அதற்குரிய தீர்வைப் பெற்று தரவேண்டும்

நீண்ட காலமாக நாங்கள் பேச்சுவார்த்தை என இழுத்தடிக்கப்பட்டு ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். இது இந்த நிலை தொடரவிட முடியாது. குறிப்பாக கடந்த ஆண்டும் கூட நாங்கள் ஒரு பேச்சுவார்த்தைக்கு சென்றோம். ஆனால் அந்த பேச்சுவார்த்தையில் எந்தவிதமான தீர்வும் எட்டப்படவில்லை.

இது குறித்து இரண்டு நாட்டு மத்திய அரசாங்கங்களும் இணைந்து ஒரு தீர்மானம் எடுக்கவேண்டிய நிலை காணப்படுகின்றது. எனவே தற்பொழுது ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது. ஜனாதிபதி எதிர்வரும் மாதம் இந்தியாவுக்குச் செல்லவுள்ளார். அங்கே இந்திய பிரதமருடன் பேசி ஒரு இணக்கப்பாட்டோடு தீர்வை பெற்று தரவேண்டும்-என்றார்.




# தமிழில் மோகன்லால் வாரிசு

மலையாள நடிகர்கள் பெரும்பாலும் தமிழில் நடித்து விடுவார்கள். அந்த வரிசையில் அடுத்து வருகிறார் நிகில். இவர் மோகன் லாலின் தங்கை மகன். இவருக்கு ஜோடியாக பெங்களூரை சேர்ந்த புதுமுகம் நேத்ரா நாயகியாக நடிக்கிறார்.

மற்றும்பழம்பெரும் நடிகர் ஜெய்சங்கரின் மகன் சஞ்சய் சங்கர், வின்சென்ட் அசோகன், சுப்பு, சங்கீதா, மாறன், சுவாமிநாதன், தனி மற்றும் பலர் நடிக்கிறார்கள். ஜூட் ரோமரிக் படத்தை இயக்குகிறார். படத்திற்கு இன்னும் பெயர் வைக்கவில்லை.

# விஜயை இயக்கும் கௌதம்?



கௌதம் மேனனுக்கு நடிப்பதற்கான வாய்ப்புகள் குவிகின்றன. அவர் மலையாளி என்பதால் அங்கேயும் அவரை நடிக்க அழைக்கிறார்கள். திடீரென இப்போது நடிப்பதற்கான அழைப்புகளை மறுக்கிறார் கௌதம். இயக்குவதில் கவனம் செலுத்தத் தீர்மானித்துவிட்டார்.

விஜயை சந்தித்துப் பேசிய பிறகு இந்த முடிவை எடுத்திருப்பதால், இருவரும் சேர்ந்து படம் செய்வதற்கான வாய்ப்புகள் அதிகம் என்று சொல்கிறார்கள். ஏற்கெனவே சொன்ன கதையில் மாற்றங்களும் செய்து கொடுத்திருக்கிறார் கௌதம்.

# ஆர்யாவுடன் மஞ்சு வாரியர்

பிரபல மலையாள நடிகை மஞ்சு வாரியர் அங்கு அதிகம் சம்பளம் வாங்கும் நடிகையாக இருக்கிறார். வெற்றிமாறன் இயக்கிய ‘அசுரன்’ படம் மூலம் தமிழுக்கு வந்தார். இதில் பச்சையம்மாள் என்ற கதாபாத்திரத்தில் கிராமத்து பெண்ணாக சிறப்பாக நடித்திருந்தார். அடுத்து அஜித் ஜோடியாக ‘துணிவு’படத்தில் மொடர்ன் பெண்ணாக நடித்திருந்தார்.

இப்போது மீண்டும் தமிழ்ப் படத்தில் ஒப்பந்தமாகி இருக்கிறார். மனு ஆனந்த், ‘மிஸ்டர் எக்ஸ்’ என்ற த்ரில்லர் படத்தை இயக்குகிறார். இதில், ஆர்யா நாயகனாகவும் கௌதம் கார்த்திக் வில்லனாகவும் நடிக்கிறார். நாயகியாக அனகா நடிக்கிறார். தமிழ், தெலுங்கு, ஹிந்தி உட்பட 5 மொழிகளில் வெளியாக இருக்கும் இந்தப் படத்தில் மஞ்சு வாரியர் முக்கிய பாத்திரத்தில் நடிக்கிறார்.





# கொண்டாடும் விஜய் ரசிகர்கள்


விஜய் நடிப்பில் வெளிவரவுள்ள ‘லியோ’ படத்தின் முதல் சிங்கிள் பாடலான ‘நான் ரெடி’ வெளியாகி, அவரின் ரசிகர்களைக் கொண்டாட வைத்துள்ளது.

விஜய் நடிப்பில் லோகேஷ் கனகராஜ் இயக்கி வரும் லியோ படத்தின் படப்பிடிப்பு பணிகள் காஷ்மீரில் நடக்கிறது. இந்தப் படத்தில் த்ரிஷா, சஞ்சய் தத், அர்ஜூன், பிரியா ஆனந்த், மிஷ்கின், கௌதம் வாசுதேவ் மேனன், மன்சூர் அலி கான் ஆகியோர் நடிக்கின்றனர். இந்தப் படம் வரும் ஒக்ரோபர் 19ஆம் திகதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

இந்த நிலையில், விஜய்யின் பிறந்த நாளன்று லியோ படத்தின் முதல் சிங்கிளான ‘நான் ரெடி’ பாடலை படக்குழு வெளியிட்டுள்ளது. இந்தப் பாடலை அநிருத் இசையில் நடிகர் விஜய், அனிருத், அசல் கோலார் ஆகியோர் பாடியுள்ளனர். பாடல் வரிகளை விஷ்ணு எடவன் எழுதியுள்ளார்.

பாடல் காணொலியில் உற்சாகமாக நடனம் ஆடும் விஜயை சுற்றி இளைஞர்களும் நடனமாடும் காட்சிகள் சில இடம்பெற்றுள்ளன. தற்போது விஜய்யின் ’நான் ரெடி’ பாடலை அவரது ரசிகர்கள் இணையத்தில் பிரபலமாகி வருகின்றது.

# 4 மொழிகளில் சத்யராஜ்




தமிழ், தெலுங்கு, ஹிந்தி மொழிப் படங்களில் நடித்து வரும் சத்யராஜ், இணைய தொடர்க ளையும் கையில் எடுக்கத் தொடங்கி விட்டார். ஒரே நேரத்தில் நான்கு இணைய தொடர்களில் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறார். நான்கு மொழிகளுக்கான வியாபாரம் இருப்பதால் இணையத் தொடர் களும் சத்யராஜ் அவசியம் என நினைக்கின்றன ஓடிடி நிறுவனங் கள். சம்பளம், தேதி என எந்தக் குளறுபடியும் செய்யாதவர் என்கிற நற்பெயரும் இவருக்குக் கைகொடுக்கிறது.

**திரைப்படம் - ஆதிபுருஷ்**
**இயக்கம் - ஓம் ராவத்**
**பின்னணி இசை - சஞ்சித் பல்ஹாரா, அங்கித் பல்ஹாரா**
**நடிப்பு - பிரபாஸ், கிரித்தி சனோன், சைப் அலிகான்**



இரு பெரும் இதிகாசங்களான இராமாயணம், மகாபாரதம் ஆகிய இரண்டையும் தெருக்கூத்துக்களாக, நாடகங்களாக, திரைப்படங்களாக, தொலைக்காட்சி தொடர்களாக, சித்திர தொடர்களாக எத்தனையோ வடிவில் பார்த்து ரசித்திருக்கிறோம். அந்த இரண்டு காவியங்களைப் பற்றிய கதாபாத்திரங்களும் அவர்களின் உருவ அமைப்புகள் இப்படித்தான் இருக்கும் என்று நம் மனதளவில் ஒரு கற்பனை இருக்கும். அப்படி நம் கற்பனைக்கு ஏற்றபடி அமையும் திரைப்படங்கள்தான் நம்மை அதிகம் ஈர்த்து ரசிக்க வைக்கும். ஆனால், இந்த ‘ஆதி புருஷ்’ படத்தில் ஏதோ ஒரு தோற்றத்தை - களத்தை அசைவாக்க திரைப்பட முறையில் படமாக்கி வேறு ஒரு பிம்பத்தைக் கொடுக்க முயற்சித்திருக்கிறார் இயக்குநர் ஓம் ராவத்.

இராமாயண கதாபாத்திரங்களின் பெயர்களாக இராமர், இலட்சுமணர், சீதா, அனுமன், இராவணன் என்பதுதான் நாம் படித்து அறிந்த ஒன்று. ஆனால், இந்தப் படத்தில் இராமரை இராகவா எனவும், லட்சுமணரை சேஷு என்றும், சீதையை ஜானகி என்றும், அனுமனை பஜ்ரங் என்று அழைப்பதும் நமக்கு அந்நியப்பட்டு தெரிகிறது. தமிழில் மொழி பெயர்த்தபோது தமிழ் பெயர்களையே பயன்படுத்தியிருக்கலாம்.




இராமர், சீதை, இலட்சுமணனின் 14 வருட வனவாசத்தின்போது கதை நடக்கிறது. தங்கை சூர்ப்பனகை சொல்வதைக் கேட்டு சீதையை கடத்திக் கொண்டு போகிறார் இராவணன். எந்த படை பலமும் இல்லாத இராமர் வானரப் படையின் தலைவன் சுக்ரீவன் மற்றும் அனுமன் ஆகியோருடனும் ஏராளமான வானரங்களுடன் இலங்கைக்குச் செல்லும் வழியில் இராமர் பாலத்தை கட்டி முடித்து, அதன் வழியே சென்று இராவணனை எதிர்த்துப் போரிட்டு, தனது மனைவி சீதாவை மீட்பதுதான் இப்படத்தின் கதை.

இராமாயணத்தின் நாயகனான இராமபிரான் சாந்தமே வடிவானவராக, அமைதியின் திருவுருவமாக ஈரேழு உலகத்திலும் உள்ளவர்களும் அவரின் அழகைப் பார்த்து வியக்கும் ஒருவராகத்தான் பார்த்திருக்கிறோம். மீசையில்லாத அவரின் தோற்றம்தான் நமது மனதில் ஆழப் பதிந்த ஒன்று. ஆனால், இந்தப் படத்தில் பிரபாஸை நடிக்க வைக்க வேண்டும் என்பதற்காக அவரை மீசையுடன் நடிக்க வைத்திருப்பது பொருத்தமற்றதாக உள்ளது. ‘பாகுபலி’ பட அதிரடி நாயகனை இராமனாக முழுமையாக ஏற்க முடியவில்லை. எந்த ஒரு உணர்ச்சியும் இல்லாமல் ஏதோ ஒரு கடமைக்கு நடித்தது போலவே படம் முழுவதும் நடித்திருக்கிறார் பிரபாஸ்.

சீதா கதாபாத்திரத்தில் ஹிந்தி நடிகையான கிரித்தி சனோன் பொருத்தமாக இருக்கிறார். ஆனாலும், அவருக்கான காட்சிகள் அதிகமில்லை. இராவணனை எதிர்த்துப் பேசும் ஒரேயொரு காட்சியில் மட்டும் அவருக்கான வாய்ப்பைத் தந்திருக்கிறார் இயக்குநர்.

இராவணன் கதாபாத்திரத்தில் சைப் அலிகான். மாயாஜால வில்லன் போல இராவணன் கதாபாத்திரத் தோற்றத்தை உருவாக்கி இருக்கிறார் இயக்குநர். அது மட்டுமல்ல இராவணன் அரண்மனை, வழிபடும் சிவன் கோவில், அவருடைய படை வீரர்கள் என அவர் சம்பந்தப்பட்ட காட்சிகள் அனைத்துமே ஏதோ ஹொலிவூட் ஏலியன் படத்தில் வருவது போலவே உருவாக்கப்பட்டுள்ளது. இலங்கை என்று சொல்லிவிட்டு இராவணன் இருக்கும் இடத்தை மட்டுமே காட்டுகிறார்கள். இராவணன் கதாபாத்திரத்தை ஒரு ரோபோ போலவே மாற்றிவிட்டார்கள். நடப்பதும், சண்டையிடுவதும் அப்படித்தான் இருக்கிறது.

இலட்சுமணன் கதாபாத்திரத்தில் சன்னி சிங், அனுமன் கதாபாத்திரத்தில் தேவதத்த நாகே அவர்களுக்கான காட்சிகளில் படத்தின் மற்ற முக்கிய நடிகர்களைக் காட்டிலும் முத்திரை பதித்திருக்கிறார்கள்.

பல்லாயிரம் வருடப் பாரம்பரியமான இராமாயணத்தை இப்படி மாற்றி கொடுக்கலாமா என ஒரு பக்கம் கேள்விகள் வரலாம். இந்தக் காலத்து குழந்தைகளும் இரசிக்கும் விதமாக அவர்களும் இராமாணயத்தைப் பற்றி தெரிந்து கொள்ளும் விதமாக காலத்திற்கேற்றபடி மாற்றி எடுப்பதில் தவறில்லை என்றும் சிலர் சொல்லலாம்.

இராமாயணம் என்றாலே ஒரு தெய்வீகம் தானாக வந்துவிடும். படத்தைப் பார்க்கும் போது அந்த உணர்வு குறைவாகவே வருகிறது. அந்த தெய்வீகத்தை திரையிலும் உணர்த்தும் விதத்தில் சில பல காட்சிகளை இயக்குநர் அமைத்திருக்க வேண்டும். ஒரு திரைப்படத்துக்கான கதாபாத்திரங்கள், அதற்கான காட்சிகள் என்ற அளவில் மட்டுமே படத்தை உருவாக்கியிருக்கிறார். படம் முழுவதும் இருட்டிலேயே நடக்கிறது. போர்க்கள காட்சிகளைக்கூட இருட்டில் நடப்பது போலவே காட்டுகிறார்கள். 3டியில் படத்தைப் பார்க்கும் போது பல காட்சிகள் தெளிவாக இல்லை.

சில பல ஹொலிவூட் படங்களின் கதாபாத்திரங்களை காட்சிகள் ஞாபகப்படுத்துகிறது. அசைவாக்க, சித்திர படங்களைப் பார்த்து ரசிக்கும் குழந்தைகளுக்கு இந்தப் படம் பிடிக்க வாய்ப்பிருக்கிறது.

# இது தலைவனின் ஆட்டம்...!



இங்கிலாந்து அணிக்கு எதிரான ஆஷஷ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் முதல் போட்டியில் உலக சம்பியனான ஆஸ்திரேலிய அணி 2 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது. பர்மிங்ஹாமில் நடை பெற்று வந்த இந்த போட்டியில் அவுஸ்திரேலிய அணிக்கு 281 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த கடைசி நாள் ஆட்டத்தில் வெற்றிக்கு மேற் கொண்டு 174 ஓட்டங்கள் தேவையாக இருந்தன. கைவசம் 7 விக்கெட்களும் இருந்தன.

மழை காரணமாக மதிய உணவு இடை வேளைக்கு பின்னரே ஆட்டம் தொடங்கப்பட்டது. இதனால் அதிகபட்சமாக 67 ஓவர்கள் மட்டுமே வீசப்படும் என நடுவர்கள் அறிவித்திருந்தனர். இலக்கை நோக்கி கொஞ்சம்கொஞ்சமாக அடியெடுத்து வைத்த அவுஸ்திரேலிய அணி டெஸ்ட் கிரிக்கெட்டுக்கே உரித்தான பாணியில் போராட்ட குணத்தை வெளிப்படுத்தி வெற்றியை வசப்படுத்தியது.

கடும் அச்சுறுத்தலாக திகழ்ந்த உஸ்மான் கவாஜா 65 ஓட்டங்களில் பென் ஸ்டோக்ஸ் பந்திலும் அலெக்ஸ் கேரி 20 ஓட்டங்களில் ஜோ ரூட் பந்தில் ஆட்டமிழந்ததும் ஒரு கணம் இங்கிலாந்து பெருமூச்சு விட்டது. அப்போது அவுஸ்திரேலியாவின் நிலை 227ஃ8 என இருந்தது. எஞ்சிய 2 விக்கெட்களையும் எளிதாக சாய்த்து விடலாம் என இங்கிலாந்து அணி எண்ணியது.

ஆனால், அங்கிருந்துதான் அணித் தலைவர் பட் கம்மின்ஸின் இன்னிங்ஸ் வேகமெடுக்கத் தொடங்கியது. குறுகிய வடிவிலான போட்டியை போன்று மட்டையை சுழற்றினார் பட் கம்மின்ஸ். ஜோ ரூட் வீசிய ஓவரில் இரு சிக்ஸர்களை பறக்கவிட்டார். மறுமுனையில் அவருக்கு உறு துணையாக நதன் லயன் விளையாடினார். 14 ஓவர்கள் எஞ்சிய நிலையில் வெற்றிக்கு 37 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் ஸ்ரூவர்ட் பிரொட் வீசிய பந்தில் நதன் லயன் கொடுத்த பிடியை பென் ஸ்டோக்ஸ் தவறவிட்டார்.

அதற்கான பலனை இங்கிலாந்து அணி அனுபவித்தது. பட் கம்மின்ஸ் 73 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 4 பௌண்ட்ரிகளுடன் 44 ஓட்டங்களும் நதன் லயன் 28 பந்துகளில் 2 பௌண்ட்ரிகளுடன் 16 ஓட்டங்களும் சேர்க்க அவுஸ்திரேலிய அணி 92.3 ஓவர்களில் இலக்கை அடைந்தது. ஆலி ரொபின்சனின் பந்தை பவுண்டரிக்கு விரட்டி வெற்றிக் கோட்டை கடந்ததும் பட் கம்மின்ஸ் உற்சாகத்தில் ஹெல் மெட்டை கழற்றி வீசி எறிந்தார். துடுப்பு மட்டையையும் பறக்கவிட்டார். அவரின் ஆட்டம் அணித் தலைவரின் இன்னிங்ஸ் இதுதான் என்று கூறும்படி அமைந்தது.

இதே மைதானத்தில் கடந்த 2005ஆம் ஆண்டு இரு அணிகளும் மோதிய ஆட்டத்தில் 282 ஓட்டங்களை துரத்திய அவுஸ்திரேலிய அணி 2 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி கண்டிருந்தது. ஆனால், இம்முறை அவுஸ்திரேலிய அணி சுதாகரித்துக்கொண்டது. பட் கம்மின்ஸ் தனது அறிமுக டெஸ்ட் போட்டியில் 2011ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவுக்கு எதிராக இறுதிக்கட்டத்தில் இதேபோன்று விளையாடி இருந்தார்.

அந்த ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணி 8 விக்கெட்களை இழந்து தவித்த நிலையில் தன் பங்களிப்பாக 13 ஓட்டங்களை முக்கியமான கட்டத்தில் சேர்த்து வெற்றிக்கு உதவியிருந்தார். தற்போது அணித்தலைவராக இங்கிலாந்து மண்ணில் அவுஸ்திரேலிய அணியை வெற்றிகரமாக கரை சேர்த்துள்ளார். நதன் லயனுடன் இணைந்து பட் கம்மின்ஸ் 9ஆவது விக்கெட்டுக்கு சேர்த்த 55 ஓட்டங்கள் பெரிய அளவிலான வித்தியாசத்தை காட்டியது. இந்தக் கூட்டணி 12 ஓவர்களை எந்தவித பதற்றமும் இல்லாமல் எதிர்கொண்டு வெற்றியை சாத்தியமாக்கி உள்ளது.

இங்கிலாந்தின் “பாஸ்போல்” கிரிக்கெட் புரட்சியானது 5 நாட்கள் வரை ஆட்டத்தை எடுத்துச் சென்று வெற்றிகரமாக நிறைவு செய்த அவுஸ்திரேலியாவிடம் இருந்து நிச்சயம் பாடம் கற்றுக் கொள்ளும் என்றே கருதப்படுகிறது.

இது ஒருபுறம் இருக்க இந்த ஆட்டத்துக்கான இங்கிலாந்து அணித் தெரிவும், முதல் இன்னிங்ஸில் முதல் நாளிலேயே ஆட்டத்தை இடைநிறுத்தும் முடிவை அணித் தலைவர் பென் ஸ்டோக்ஸ் எடுத்ததும் விவாதத்துக்கு வழிவகுத்துள்ளது. முதல் இன்னிங்ஸில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 393 ஓட்டங்கள் என்ற நிலை யில் இங்கிலாந்து அணி ஆட்டத்தை இடைநிறுத்தியது. ஜோ ரூட் சதம் விளாசி களத்தில் நின்ற நிலையில் பென் ஸ்டோக்ஸ் ஆட்டத்தை இடைநிறுத்துவ தாக அறிவித்தது இங்கிலாந்து அணியின் வீழ்ச்சிக்கு வித்திட்டது.

இடது முழங்கால் காயத்தில் இருந்து முழுமையாக குணமடையாத பென் ஸ்டோக்ஸால் பந்து வீச்சிலும் முழுமையாக செயல்பட முடியவில்லை. 2ஆவது இன்னிங்ஸில் அவரால் 7 ஓவர்களே வீச முடிந்தது. மேலும் 40 வயதான அண்டர்சன் ஒரு விக்கெட் மட்டுமே எடுத்தார். மொயின் அலி முதல் இன்னிங்ஸில் 33 ஓவர்களை வீசி 147 ஓட்டங்களை வாரி வழங்கினார்.

அவரின் பந்து வீச்சு அவுஸ்திரேலிய அணி எளிதாக ஓட்டங்கள் சேர்க்க உதவியது. மேலும், இது இங்கிலாந்து அணியின் ஒட்டுமொத்த பந்து வீச்சையும் பலவீனப்படுத்தியது. விக்கெட் காப்பு பணியில் ஜொன்னி பெயர்ஸ்ரோ சில பிடிகளை தவறவிட்டார். ஒரு ஸ்ரொம்பிங்கையும் கோட்டை விட்டார். இதனால் லோர்ட்ஸ் மைதானத்தில் வரும் 28ஆம் திகதி தொடங்கும் 2ஆவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணியில் மாற்றங்கள் இருக்கக்கூடும் என்று நம்பலாம்.

---

# தலைமைக்கான பந்தயம் ஆரம்பம்...?

இந்திய கிரிக்கெட் அணி அடுத்த மாதம் முதல் 2023-25 ஐ. சி. சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்பின் மூன்றாவது பதிப்பில் விளையாட உள்ளது. இந்த சூழலில் இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் அடுத்த தலைவர் யார் என்ற கேள்வியும் இத்துடன் சேர்ந்தே எழுந்துள்ளது. ஏனெனில், அடுத்த சில ஆண்டுகளில் நிச்சயம் இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியில் பெரிய மாற்றங்கள் நிகழும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 2021ஆம் ஆண்டு வரையில் இந்திய டெஸ்ட் அணியை திறம்பட வழி நடத்தி வந்தார் விராட் கோலி. அவர் தலைமைப் பொறுப்பில் இருந்து விலகியதை அடுத்து ரோஹித் சர்மா, தலைமைப் பொறுப்பை ஏற்றார். அவர் தலைமையிலான அணி அண்மையில், ஐ. சி. சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் தோல்வியை தழுவி இருந்தது.

மறுபக்கம் அணித் தலைவர் ரோஹித் சர்மா, இன்னும் எத்தனை ஆண்டுகள் தொடர்ந்து கிரிக்கெட் விளையாடுவார் என்பதும் சரிவரத் தெரியவில்லை. தற்போது அவருக்கு 36 வயதாகிறது. அவர் முக்கிய தொடர்களில் மட்டுமே விளையாடுகிறார். அதனால் இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் அடுத்த தலைவர் யார் என்பதை அடையாளம் காண வேண்டியது அந்த அணிக்கு அவசியமாக உள்ளது.

இருபது - 20 கிரிக்கெட்டில் அணியை ஹார்திக் பாண்ட்யா வழிநடத்தி வருகிறார். ரோஹித்துக்கு பிறகு ஒருநாள் கிரிக்கெட்டிலும் ஹார்திக் தலைவராகத் தொடர வாய்ப்புகள் அதிகம். அதற்கு அவரின் உடல் ஒத்துழைக்க வேண்டும். ஆனால், டெஸ்ட் கிரிக்கெட்டில் அணியின் அடுத்த தலைவர் யார் என்பது இப்போதைக்கு தெளிவாக இல்லை.

கடந்த ஆண்டு கார் விபத்தில் சிக்குவதற்கு முன்னர் வரை விக்கெட் காப்பாளரும் துடுப்பாட்ட வீரருமான ரிஷப் பந்த் டெஸ்ட் அணிக்கான அடுத்த தலைவருக்கான போட்டியில் இருந்தார். இளம் வீரர் ஷுப்மன் கில் சிறப்பாக துடுப்பாட்டம் செய்து வருகிறார். இருந்தாலும் வெளிநாட்டு தொடர்களில் அவரின் செயல்பாடு எப்படி என்பதை பொறுத்தே தலைமை வாய்ப்பு அமையும். பந்துவீச்சாளரான பும்ராவும் இந்திய அணியை ஒரே ஒரு டெஸ்ட் போட்டியில் வழி நடத்தியுள்ளார். ஆனாலும் அவரின் காயம் காரணமாக மூன்று வடிவ கிரிக்கெட்டிலும் உள்ள பணிச்சுமையை அவர் எப்படி சமாளிப்பார் என்பதை பொறுத்தே அதுவும் இருக்கும். கே. எல். ராகுல் காயத்திலிருந்து மீண்டு வருகிறார்.

இந்திய அணி நிர்வாகம் வளர்ந்து வரும் இளம் வீரரை அணியின் துணைத் தலைவராக நியமிக்க வேண்டும். ரோஹித் தனது கிரிக்கெட் வாழ்வின் கடைசி கட்டத்தை அணிக்கு பலன் கொடுக்கும் வகையில் திட்டமிடுவது அவசியம். அப்போதுதான் அடுத்த தலைவரை அவரால் வளர்த்துவிட முடியும். ஒரு தலைவர் செய்ய வேண்டியதும் அதுதான். அது குறித்து இந்திய அணி நிர்வாகம் நிச்சயம் இப்போதே ஆலோசிக்க வேண்டும். அதற்கான நகர்வுகளை எதிர்வரும் மேற்கிந்திய தீவுகள் பயணத்திலேயே தொடங்க வேண்டும்.









# கட்டுக்கடங்கா தைரியமும் உரிமைக் குரலும் மாமனிதர் ரவிராஜ்

பேராசிரியர் கலாநிதி எஸ். ஜபநேசன்
(தலைவர், தந்தை செல்வா அறங்காவற் குழு)

## அமரர் மாமனிதர் ரவிராஜ் அவர்களின் ஜனனதினம் இன்றாகும்

“பொதுநலம் பேசும் புண்ணிய வான்களின் பேச்சினில் அநேக வித்தியாசம் புதுப்புது மொழி களிற் பேசுவதெல்லாம் புவியை ஏய்க் கும் வெளிவேஷம் அந்தப் பொல்லாத மனிதர் சொல்லாமல் திருந்த நல்லோரை எல்லோரும் கொண்டாடணும்” - பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்க ளின் சிறந்த தலைவர்களில் ஒருவரான நடராஜா ரவிராஜ் 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10ஆம் தேதி பேரின வாதிகளின் கூலிப்படைகளினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இலங்கை அரசாங்கத்தினதும் சிங்கள பேரினவாதிகளினதும் அட்டூழியங்களை பொறுக்க முடியாது சீறி எழுந்தவர் ரவி ராஜ். சர்வ தேசத்தின் மௌனம் அவ ருக்கு கடுஞ்சினத்தை ஏற்படுத்தியது ஒரு சர்வதேச அமைப்பின் அலுவலகம் முன் நின்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார். வயதில் முதிர்ந்த ஏனைய அரசியல்வாதி கள் செய்ய துணியாததை இளைஞர் ரவிராஜ் செய்தார். பேரினவாதம் பொறுமை இழந்தது. ரவிராஜ் அவர்களின் வாயை நிரந்தரமாகவே மூடிவிட்டது. ரவிராஜ் சாவகச் சேரியின் தவப்புதல்வன். அந்த நகரில் பலதரப்பட்ட மக்களும் அன்னியோன்யமாக வாழ்கின்றனர். அந்த மக்கட் கூட்டத்தின் ஏற்ற தலைவராக மட்டுமல்ல ஒட்டு மொத்த தமிழினத்தையே பிரதி பலிக்கும் ஒரு மாமனிதராக ரவிராஜ் விளங்கினர்.

சாவகச்சேரி பெண்கள் கல்லூரி, டிறிபேர்க் கல்லூரி, சென்ஜோன்ஸ் கல்லூரி ஆகியவை அவருக்கு பரந்த மனப்பான்மையையும் ஆழ்ந்த புல மையும் வழங்கின. ரவிராஜ் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டபோது நான் பெருமை அடைந்தேன். அவருடைய தாயார் மங்க ளேஸ்வரிக்கு எனது தாயார் டிறிபேர்க் கல்லூரியில் ஆங்கிலம் கற்பித்தவர்.

44 வருடங்கள் மாத்திரம் இப்பூமி யில் வாழ்ந்த ரவிராஜ் அவர்கள் மும் மொழியிலும் பாண்டித்தியம், புகழ் பூத்த சட்டத்தரணி, தனக்கென ஒரு சட்ட ஆலோசக நிறுவனம், யாழ் மாநகர சபையின் மேயர், பாராளுமன்ற உறுப்பி னர் என அவர் சாதித்தவை எண்ணி லடங்கா.

தாய்லாந்து, ஜெர்மனி, தென்னாபிரிக்கா, ஆஸ்திரியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், சீனா ஆகிய நாடு களில் இடம்பெற்ற சர்வதேச மாநாடுகளில் கலந்து கொண்டு தமிழ் மக்களின் உயர்வுக்காக குரல் கொடுத் தார். நண்பராக செவி இனிக்க சிந்தை இனிக்க பேசிய பேசும் அவர், நாடாளுமன்றங் களில் கர்ஜிக்கவும் தவறவில்லை. தமிழ் பேசும் மக்களின் தலைவ ராக வருவதற்கு எல்லா விதமான தகுதியும் உடையவராக இருந்தார் மாமனிதர் ரவிராஜ்.

அவர் கொட்டி முழங்கிவிட்டு குறு வயதில் சென்று விட்டது ஏன்? ஒரு முறை சுப்ரமணிய பாரதியாரிடம் ஒருவர், நல்லவர்கள் அற்ப ஆயுள் உள்ள வர்களாக இருக்கின்றார்களே என்று கேட்ட பொழுது பாரதியார் கூறிய பதிலில் ஆறுதலை காண்கிறோம். பாரதி யார் பின்வருமாறு பதில் அளித்தார், “மகான்கள் பூலோகத்திற்கு தேவதூதர்கள், பூலோகத்தில் அவர்கள் வந்த காரியம்




ஆனதும் அவர்கள் இவ்வுலகத் தில் நிற்க மாட்டார்கள் மறைந்து விடுவார்கள்”

ரவிராஜின் குரல் மௌனித்திருக்க லாம் ஆனால் அவரது தைரியமும் தியாகமும் மறக்கப்படப்போவ தில்லை.

---




**ஜி.கிருசாந்தன், சங்கிலியன் வீதி, நல்லூர்.**

**கேள்வி:** குருந்தூர்மலை விகாரை இராணுவத்தின ரின் பங்களிப்பிலேயே அமைக்கப்பட்டது என்று அங்கு புதிதாக நிறுவப்பட்ட கல்வெட்டுமூலம் உறுதியாகி யுள்ளதாகக் கூறப்படுகின்றதே. குருந்தூர்மலை விகாரை கட்டப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து குருந்தூர்மலை ஆதி ஐயனார் ஆலய நிர்வாகம் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடுத்திருந்தது. இந்த வழக்கு விசாரணையில் 19.07.2022 அன்று விகாரை கட்டு மானம் எந்த மட்டத்தில் இருந்ததோ அதேநிலையில் பேணுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தும் ராணுவம் விகாரையை கட்டுகின்றது என்றால் அதன் மூலம் உங்களுக்கு தெரிவது என்ன?

**வியுக்தியார்:** இதில் தெரிந்துகொள்வதற்கு என்ன இருக்கின்றது. விகாரையை கட்டக்கூடாது என்று நீதிமன்றம் விகாரை நிர்வாகத்திற்கு தானே உத்தரவிட்டி ருக்கும். சிலவேளை விகாரை நிர்வாகம், ராாணுவம் கட்டியது தங்களுக்குத் தெரியாதே என்று சொன்னா லும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்த நாட்டில் ராணு வம் என்ன செய்தாலும் கேட்பதற்கு ஆளில்லை என்பது தெரிந்த சங்கதிதானே.

---

**க.ஐங்கரன் றக்கா வீதி, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** ‘வடக்கு - கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத் தும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இங்கிருந்து கொழும்புக்கு வந்து மக்கள் பிரச்னையை கூறுகின்றார் கள். எனினும், அதன் உண்மைத்தன்மை எமக்குத் தெரியாது. அதனைத் தெரிந்து கொள்வதற்காகவே நான் குருந்தூர் மலை வந்தேன்” என்று உதய கம்பன்பில எம். பி. தெரிவித்திருந்தரே?

**வியுக்தியார்:** அதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. ஆனால் அவர் விகாரையை சுற்றியுள்ள வயல்காணி களை விகாரையின் காணி என்று தொல்லியல் திணைக் களம் அடையாளப்படுத்தியதை கேள்விக்குட்படுத்தியது தான் ஆச்சரியமாக இருந்தது. மக்கள் வயல்நிலங் களில் பயிர்ச்செய்கையை தடுப்பதற்கு எதிராக அவர் தெரிவித் திருந்தது- அதாவது தமிழ் மக்களுக்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்திருந்ததுதான் ஏன் என்று தெரிய வில்லை. அவர் மாறியிருக்க வாய்ப்பே இல்லை. ஆனால் எதற்காக அப்படி சொன்னார் என்பதைதான் கண்டறியவேண்டும்.

---

**ந. ராஜேந்திரன் அராலி வடக்கு, அராலி.**

**கேள்வி:** ‘தமிழ் மக்களின் பிரச்னை விடயங்களில் அரைவாசிக்கு நாம் தீர்வு கண்டுவிட்டோம். இறுதியாக அதிகாரப் பகிர்வை செய்வதற்கான சாத்தியமான தீர்வு களை தமிழ் கட்சிகளிடம் முன்வைத்துள்ளோம். ஜூலை இறுதிக்குள் தீர்வுக்கான விரிவான செயல்முறைகளை ஆரம்பிப்போம்” என்று லண்டனில் வைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறாரே?

**வியுக்தியார்:** அவர் தமிழ் கட்சிகள் என்று எவற்றைச் சொல்கிறார் என்பது தெரியவில்லை. நமக்கு தெரிந்து அவர் கடைசியாக தமிழ் அரசுக்கட்சியினரைச் சந்தித்த போது, மாகாணசபைகளை ஆலோசனைச்சபை ஒன்றை நியமித்து நடாத்தி சொல்வது பற்றித்தான் பேசியதாக தமிழ் அரசுக்காரர்கள் தெரிவித்திருந்தனர். அது பற்றி ஜூலையில் மீண்டும் சந்தித்து பேசுவதாகவும் கூறியிருந் தார். இரண்டாயிரத்து ஐந்தில் சமஷ்டியில் தொடங்கி, பின்னர் எக்க ராஜ்யவுக்கு வந்து, பிறகு பதின்மூன்று முழுமையான அமுல் என்றாகி, இப்போது ஆலோசனை சபை என்று வந்து நிற்கின்றது அவரது பேச்சுக்கள். அடுத்த ஜனாதிபதி தேர்தலிலும் இதுபோன்ற திருகு தாளங்களை அவர் தொடந்தால், இரண்டாயிரத்து ஐந்தில் தமிழர்களால் வெற்றிவாய்ப்பை இழந்ததுபோல இன்னுமொரு தடவையும் வெற்றிவாய்ப்பை இழந்து விடுவார் போலத்தான் தெரிகின்றது.

---

**எஸ். சதீஸ்குமார், பொகவந்தலாவ, ஹற்றன்.**

**கேள்வி:** ஜனாதிபதி லண்டன் சென்று, சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தை புலிகளுடன் தொடர்பு டைய தமிழர் ஒருவருக்கு விற்பனை செய்ய பேச்சு நடத்தியுள்ளார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளு மன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்திருந்தாரே. அதுபற்றி ஏதும் அறிந்தீர்களா?

**வியுக்தியார்:** சிறிலங்கா ரெலிகொம் நிறுவனத்தில் அரசாங்கத்திற்கு இருக்கும் பங்குகளை தனியாருக்கு விற்பது என்று முடிவெடுக்கப்பட்டுவிட்டது. அதற் கான கேள்வியும் கோரப்பட்டுள்ளது. அதனை புலம் பெயர் தமிழர் ஒருவர் வாங்கவிருப்பதாகவும் கூறப்படு கின்றது. தமிழர் என்றாலே இவர்களுக்கு புலிகள் என்ற கோசம் வந்துவிடுவது வழமையானதுதானே. ஏற்கனவே ரெலிகொம் நிறுவனத்தில் ஐம்பது வீத பங்கு களை மலேசியத் தமிழரான (அவரும் யாழ்ப்பாணத் தமிழர்தான்) வாங்கியபோது அவரும் புலிகளுடன் தொடர்புடையவர்தான் என்று அப்போது ராணுவத் தளபதியாக இருந்த அவர் ஏன் கூக்குரலிடவில்லை என் பது தெரியவில்லை. அதுசரி, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டபோது அவருக்கு வாக்களித்த தமிழர்கள் எல்லோருமே புலிகளுடன் தொடர்பில் இருந்தவர்கள் என்பது அவருக்கு தெரிந்திருக்கவில்லையோ?

---

**எஸ். சுதர்மன், திமிலத்தீவு, மட்டக்களப்பு.**

**கேள்வி:** இலங்கை ரூபாவின் பெறுமதி அடிக்கடி கூடிக்குறைந்துகொண்டே இருக்கின்றதே. அது எதனால் என்று உங்களுக்காவது தெரியுமா?

**வியுக்தியார்:** நான் என்ன பொருளியல் நிபுணரா இதையெல்லாம் தெரிந்துகொள்ள? ஆனால் ஒன்று மட்டும் தெரிகின்றது, டொலர் பெறுமதி கூடிக் கொண்டே சென்றபோது தம்மிடமிருந்த பணத்தை யெல்லாம் டொலராக மாற்றி வைத்திருந்தவர்கள் இப்போது தடுமாறிக்கொண்டிருக்கின்றார்கள். டொலர் தொடர்ந்து குறைவதுபோல இருந்ததும், தம்மிட மிருந்த டொலர்களை அவசரப்பட்டு மாற்றுகின்றார் கள். அப்படி அவர்கள் மாற்றியதும் மீண்டும் டொலர் பெறுமதி கூடுகின்றது. இது பதுக்கிவைக்கப்பட்டிருக் கும் டொலர்களை வெளியே கொண்டுவரும் முயற் சியோ தெரியவில்லை.

---

**எஸ். சுகிர்தகுமார், திருக்கோவில், அம்பாறை.**

**கேள்வி:** கோட்டாபய ராஜபக்ஷவின் இரண்டரை வருட கால ஆட்சியில் நாடு ஒன்பது ஆண்டுகள் பின் னோக்கி சென்றுள்ளது என்று எதிர்க்கட்சி எம்.பி.யும் பொருளாதார கலாநிதியுமான ஹார்ஷ டி சில்வா கூறியி ருக்கிறாரே? அது என்ன ஒன்பது ஆண்டுக்கணக்கு?

**வியுக்தியார்:** அது வேறு ஒன்றுமல்ல, அது நல்லாட்சி அரசாங்கம் ஆட்சியைப் பொறுப்பேற்ற இரண்டாயிரத்து பதினைந்து நிலைமைக்கு கொண்டு போய்விட்டார் கோட்டா என்கிறார் போலும். அதா வது அதற்குப் பின்னர் நல்லாட்சி அரசாங்கம் பொறுப் பேற்றதும் நூறுநாள் வேலைத்திட்டத்தில் நாட்டை சீர்செய்ததுபோல, ரணில் கடந்த பதினொரு மாதத்தில் நாடை பழைய நிலைக்கு கொண்டுவந்து விட்டார் என்று சான்று கொடுக்கிறாரோ தெரியவில்லை.

# இந்தியா - பாகிஸ்தான் கடற்படை கப்பல்கள் ஒரே நேரத்தில் இலங்கை வந்தது ஏன்?



பாகிஸ்தானிற்கு சொந்தமான போர் கப்பல், கொழும்பில் நங்கூரமிட்டுள்ள தருணத்தில், இந்தியாவிற்கு சொந்தமான நீர்மூழ்கி கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது பலரின் கவனத்தையும் பெற்றிருந்தது.

இந்தியாவிற்கு சொந்தமான ஐ.என்.எஸ் வகீர் என்ற நீர்மூழ்கி கப்பலே இவ்வாறு கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்ததாக இலங்கை கடற்படை தெரிவித்திருந் தது.

அதிகாரபூர்வ பயணமாக இந்திய நீர்மூழ்கி கப்பல் இவ்வாறு கொழும்பு வந்தடைந்ததாக இலங்கை கடற் படையின் ஊடகப் பிரிவு தெரிவிக்கின்றது. கொழும்பை வந்தடைந்த நீர்மூழ்கி கப்பலை, இலங்கை கடற்படையினர் பாரம்பரிய முறைப்படி வரவேற்றி ருந்தனர்.

கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த ஐ. என்.எஸ், வகீர் நீர்மூழ்கி கப்பலானது, 67.5 மீட்டர் நீளம் கொண்டது. அதில் 60 வீரர்கள் உள்ளனர்.

இந்த கப்பலின் கட்டளை தளபதியாக கமாண்டர் எஸ். திவாகர் கடமையாற்றி வருகின்றார். இந்தியாவில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த நீர்மூழ்கி கப்பலானது, இந்திய கடற்படையுடன் இணைந்த புதிய நீர்மூழ்கி கப்பலாக கருதப்படுகின்றது.

இந்த கப்பலின் தயாரிப்பு நடவடிக்கைகள் 2020ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, இந்த ஆண்டு ஜனவரி மாதம் 23ம் தேதி பணிகள் நிறைவடைந்து அதிகாரப் பூர்வமாக இயக்கப்பட்டுள்ளது.

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு நடத்தப் பட்ட நிகழ்ச்சியில், இந்த நீர்மூழ்கி கப்பலில் வருகை தந்த படையினரும், இலங்கை கடற்படை அதிகாரிகயும் கலந்து கொண்டனர்.

ஐ.என்.எஸ் வகீர் நீர்மூழ்கி கப்பலின் செயற்பாடுகள் தொடர்பிலும், இந்த பயணத்தின் போது இந்திய படையினர், இலங்கை படையினருக்கு தெளிவூட் டல்களை வழங்கியிருந்தனர்.

அத்துடன், இரு நாட்டு கடற்படையினருக்கும் இடையிலான நல்லுறவுகளை மேம்படுத்திக் கொள்வது தொடர்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்வுகளிலும் இருநாட்டு அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இலங்கைக்கு அதிகாரப்பூர்வ பயணத்தை மேற் கொண்ட ஐ.என்.எஸ் வகீர் நீர்மூழ்கி கப்பல், கடந்த 22ம் தேதி பயணத்தை நிறைவு செய்து, நாட்டிலிருந்து வெளியேறியது.



**ஒரு நாள் முன்பாக இலங்கை சென்ற பாக். போர்க் கப்பல்**

இந்தியாவிற்கு சொந்தமான ஐ.என்.எஸ் வகீர் நீர்மூழ்கி கப்பல், இலங்கைக்கு பயணம் செய்வதற்கு ஒரு நாளிற்கு முன்பாக, பாகிஸ்தானிற்கு சொந்தமான போர் கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது. பாகிஸ்தான் கடற்படைக்கு சொந்தமான பீ.என்.எஸ். திப்பு சுல்தான் என்ற கப்பலே, அதிகாரப்பூர்வ பயணத்தை மேற்கொண்டது.

பாகிஸ்தானிற்கு சொந்தமான, இந்த போர் கப்பலா து, 134.1 மீட்டர் நீளத்தை கொண்டது. அதில் 168 வீரர்கள் இருக்கின்றனர். இந்த கப்பலின் கட்டளை தளபதியாக கேப்டன் ஜவாட் ஹூசேன் செயற்பட்டு வருகின்றார்.

**இந்தியா - பாக் கடற்படையினர் சந்திப்பா?**

இலங்கைக்கு ஒரே நேரத்தில் பயணம் மேற்கொண்ட இந்திய மற்றும் பாகிஸ்தான் கடற்படையினர் எந்தவித சந்திப்புகளையும் நடத்தவில்லை என இலங்கை கடற் படை ஊடகப் பேச்சாளர் தெரிவிக்கின்றார்.

இலங்கைக்கு பயணம் மேற்கொண்ட இரு நாட்டு கடற்படையினரும் வெவ்வேறாக இலங்கை கடற்படை யினருடன் பயிற்சிகள் மற்றும் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டதாகவும் அவர் கூறினார்.

இலங்கை, பிராந்திய ரீதியாகவும், பூகோள ரீதியாக வும் அனைத்து நாட்டு கடற்படையினருடனும் நெருங் கிய தொடர்புகளை ஒரே விதத்தில் பேணி வருவதாக அவர் குறிப்பிடுகின்றார்.

அதனாலேயே, அனைத்து நாட்டு கடற்படையின ரும் இலங்கைக்கு ஒரே விதத்தில் பயணம் மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவிக்கின்றார்.

இந்திய கடற்படையினரும், பாகிஸ்தான் கடற்படை யினரும் பிராந்திய எல்லை பாதுகாப்புக்கு இலங்கைக்கு ஒத்துழைப்புகளை வழங்கி வருவதாகவும் அவர் குறிப் பிடுகின்றார்.

அதனாலேயே, இரு நாட்டு கடற்படையினரும் ஒரே நேரத்தில் வருகை தந்ததாக இலங்கை கடற்படை ஊட கப் பேச்சாளர் தெரிவிக்கின்றார்

---

# ஆன்மீக புரட்சியை ஏற்படுத்திய ஆயிரம் வேல்களுடனான வேல்யாத்திரை!

**விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா**

வரலாற்று சிறப்புமிக்க கதிர்காம கந்தன் ஆலய ஆடிவேல்விழா உற்சவத்திற்காக வரலாற்றில் முதல் தடவையாக மேற்கொள்ளப்பட்ட ஆயிரம் வேல்கள் தாங்கிய அடியார்களுடனான மாபெரும் வேல் யாத்திரை வெற்றிகரமாக நிறைவடைந்தது.

1,000 வேல்களுடன், 1000 முருக பக்தர்கள் கதிர்கா மம் நோக்கி பயணிக்கும் மாபெரும் வேல் யாத்திரை வரலாற்றில் முதல் தடவையாக கடந்த (14) புதன் கிழமை பி.ப. இரண்டு மணியளவில் உகந்தை மலை முருகன் ஆலயத்தில் இருந்து சித்தர்கள் குரல் அமைப் பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையில் ஆரம்ப மாகியது.

இந்த மாபெரும் வேல் யாத்திரையை வேலோடு மலை முருகன் ஆலயத்தின் ஆதீனகர்த்தா முருகசிறி தியாகராஜா ஆசிரியர் வேல்சாமியாக இருந்து இவ்வரு டம் முதல் யாத்திரையை தலைமையேற்று நடத்தினார்.

திருமூலர் பெருமானின் அருளாசியுடன், சித்தர்களின் குரல் சிவசங்கர் குருஜியின் நேரடி வழிகாட்டலின் கீழ் இவ்வருடத்தில் இருந்து 1,000 வேல்களுடன், 1000 முருக பக்தர்கள் பயணிக்கும் மாபெரும் வேல் யாத்திரை யாக, கதிர்காமம் நோக்கி கந்தனை தரிசிக்க வேலோடு





மலையில் இருந்து அரோஹரா கோசம் விண்ணைப் பிளக்க "பாத யாத்திரை"அமிர்தகழி மாமாங்க பிள்ளை யார் ஆலயத்தை வந்தடைந்து அங்கிருந்து, உகந்தை முருகன் ஆலயத்தை அடைந்து அங்கிருந்து தொடங்கி யது.

பாதயாத்திரை மேற்கொள்ளப்பட்ட ஆறு நாட்களி லும் யாத்திரீகர்கள் அனைவருக்கும் மூன்று வேளை சாத்வீக உணவும், இரண்டு வேளை தேனீரும் இலவச மாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சுமார் 1500 யாத்திரீகர்கள் பயன்பெற்றனர். சித்தர்கள் குரல் அமைப் பின் நளபாகச் சக்கரவர்த்தி மதியண்ணா தலைமையி லான குழுவினர் சிறப்பாக அலுப்பில்லாமல் விருப்பு டன் செயற்பட்டமை காணக்கூடியதாக இருந்தது.

அனைத்து ஏற்பாடுகளையும் சித்தர்களின் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன், துணைத்தலைவர் மனோகரன் ஆகியோரின் நேரடி ஏற்பாட்டின் கீழ் வெற்றிகரமாக நடைபெற்றது.

தினமும் தரித்து நின்ற ஒவ்வொரு இடங்களிலும், சக்தி வாய்ந்த வேல் பூஜை அபூர்வ வன மூலிகைகளி னால் சர்வ வல்லமை வாய்ந்த 210 சித்தர்கள் வேள்வி, வன பூஜை, வன போஜனம் மூலிகை குளியல், ஒரு கோடி சண்முக பஞ்சாட்சர ஜெபம், கூட்டு வழிபாடு கள், நமது கர்ம வினைகளை கரைக்கும் அற்புதமான தியானங்கள், திருப்புகழ் பாராயணங்கள் இடம் பெற்றன.

அனைத்து வேல் அடியார்களும் காவி வஸ்திரங்கள் தரித்து அணிவகுத்து சென்றமை பக்திப் பரவசத்தை ஊட்டியது.

பாதயாத்திரை என்றால் இப்படித்தான் பக்தி முக்தியாக பயபக்தியுடன் ஆசாரசீலத்துடன் செல்ல வேண்டும் என்பதை இந்த வேல் யாத்திரை பலருக்கும் உணர்த்தியது.

கதிர்காம கந்தனின் ஆடிவேல் உற்சவத்தில் கலந்துகொள்வதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பாதயாத்திரையை ஆரம்பித்த பக்தர்கள் கதிர்காம திருத்தலத்தை அடைந்து வருகின்றனர்.

பாதயாத்திரையானது குமண வன பறவைகள் சரணாலய காட்டுவழி பாதையூடாக ஆரம்பிக்கப்பட்டு 6 நாட்களில் 18 யாக பூசை உள்ளிட்ட புனித கங்கை களின் அபிஷேகங்களுடன் இடம் பெற்றன.

அனைத்தும் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜீ தலைமை யில் நமசிவாய சுவாமியின் பங்கேற்றலுடன் சிவாகம முறைப்படி அனைத்து சிறப்பு பூஜைகளும் மிக பிரமாண்டமாக இடம்பெற்றன. தினமும் நடுநிசி 12 மணிக்கு விசேடயாகம் நடுக்காட்டில் ஆறு இடங்களி லும் நடைபெற்றமை பலரையும் வியப்பில் ஆழ்த்தியது.

கதிர்காமத் திருத்தலத்தில் அமைந்துள்ள பள்ளி வாசலில் கடந்த திங்கட்கிழமை(19) திகதி மாலை 5.00 மணியளவில் கொடியேற்றம் நடைபெற்றது.

சர்வமத தலைவர்கள், கதிர்காமம் பஸ்நாயக்க நிலமே டிஷான் குணசேகர உள்ளிட்ட அதிகளவிலான பக்தர்க ளும் இதில் கலந்துகொண்டிருந்தனர்.

கதிர்காம கந்தனின் வருடாந்த ஆடிவேல் திருவிழா வில் இந்த ஆண்டுக்கான முதலாவது திருவீதி உலா( பெரஹரா) கடந்த 19 திகதி நடைபெற்றமை குறிப் பிடத்தக்கது.

கதிர்காம கந்தனின் ஆடிவேல் உற்சவம் எதிர்வரும் ஜூலை மாதம் 4 ஆம் திகதி மாணிக்க கங்கையில் நடை பெறவுள்ள நீர்வெட்டும் நிகழ்வுடன் நிறைவு பெறவுள் ளது.



# பூட்டானில் மறைக்கப்பட்ட இருண்ட ரகசியம்: லோட்ஷாம்பா மக்கள் மீதான இன வன்முறை!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

பூட்டான் என்றவுடன் தமிழ் மக்களுக்கு ஞாபகத்தில் வருவது 1985 திம்பு பேச்சு வார்த்தை தான். இலங்கை அரசுக்கும் ஈழப் போராளிகளுக்கும் பூட்டான் தலைநகர் திம்புவில் நடந்த பேச்சுவார்த்தை உலக அரங்கில் தமிழ் மக்களின் தேசியப் போராட்டத்தை பாரியள வில் வெளிப்படுத்தியது எனலாம்.

பூட்டான் தேசம் வாழ்வதற்கு மிகவும் மகிழ்ச்சியான இடங்களின் பட்டியலில் பெரும் பாலும் முதலிடம் வகிக்கிறது. பூட்டான் இராச்சியம் தெற்காசியாவில் இமய மலைச் சாரலின் கிழக்கு எல்லையில் அமைந்து ள்ள நாடாகும். இதன் எல்லைகளாக தெற்கு, கிழக்கு மற்றும் மேற்கே இந்தியாவும், வடக்கே திபெத்தும் அமைந்துள்ளன.

மூலதனமயமாக்கப்பட்ட உலகில் நல்லிணக்கத்தின் முன்மாதிரியாக விளங்கும் இந்த சிறு தேசத்தில், அனைத்து நல்லிணக்கத் தின் முகத்திலும், பூட்டான் மிகவும் இருண்ட வர லாற்றை மறைக்கிறது. பூட்டானில் உள்ள இனச் சுத்திகரிப்பு என்பது பூட்டானில் இருந்து 'லோட்ஷாம்பா' அல்லது நேபாளி குடியின மக்களை அகற்றுவதற்கான தொடர்ச்சியான வன்முறைகளைக் குறிக்கிறது.

பூட்டானில் உள்ள இனங்களுக்கிடையிலான பதட்டங்களின் விளைவாக பல லோட்ஷாம்பா மக்கள் நேபாளத்திற்கு விரட்டப் பட்டனர். அவர்களில் பலர் பூட்டானிய இராணுவத்தால் வெளியேற்றப்பட்டனர்.

1996இல் 100,000 பூட்டானிய அகதிகள் (அப்போது பூட்டானின் மக்கள் தொகையில் 17 வீதம்) நேபாளத்தில் உள்ள அகதிகள் முகாம்களில் வசித்து வந்தனர். பின்னர் அவர்களில் பலர் வேறு நாடுகளில் மீள்குடியேறியுள்ளனர்.

**ஒரு புதிரான தேசத்தின் பிரமிக்க வைக்கும் வரலாறு**

இந்தியாவின் சிக்கிம் மாநிலம் நேபாளம் பூட்டான் ஆகியவற்றைப் பிரிக்கிறது. பூட்டான் மக்கள் தமது நாட்டை டிரக் யூல் (வெடிக்கும் டிராகனின் நிலம்) என அழைக்கின்றனர். திம்பு இதன் தலைநகரமாகும்.

வரலாற்று ரீதியாக பூடான் ஒரு தொலைதூர தொடர்பில்லாத ராஜ்ஜியம் ஆகும்.

தற்போது பூட்டானின் பிரதமராக லோட்டே ஷெரிங் உள்ளார். பூட்டானின் மக்கள் தொகை 7,56,100. அரசின் தலைவராக மன்னர் ஜிக்மே கேசர் நம்க்யால் வாங்சுக் உள்ளார். அரசாங்கத்தின் வடிவம் முடியாட்சி ஜனநாயகம். தேசிய கவுன்சிலில் 252 பேரும், தேசிய சட்டமன்றத்தில் 47 பேரும் இருக்கின்றனர்.

**பூட்டானில் லோட்ஷாம்பா இன அழிப்பு**

லோட்ஷாம்பா மக்கள் நேபாள வம்சாவளியைச் சேர்ந்த மக்கள். 19 ஆம் நூற்றாண்டில் தெற்கு பூட்டானில் மக்கள் வசிக்காத பகுதிகளில் குடியேறத் தொடங்கினர். இதனால் லோட்ஷாம்பா மக்கள் தெற்கு பூட்டானைப் பூர்வீகமாகக் கொண்டவர்களாயினர். எனவே அவர்கள் பொதுவாக 'தென்நாட்டினர்' என்று குறிப்பிடப்படுகிறார்கள்.

2007 ஆம் ஆண்டு நிலவரப்படி, பூட்டான் அரசாங்கத்திடமிருந்து வெளியேற்றும் கொள்கைகளை எதிர் கொண்ட பின்னர், லோட்ஷாம்பா மக்கள் தொகையில் பெரும்பாலோர் அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து மற்றும் பிற ஐரோப்பிய நாடுகள் போன்ற மேற்கத்திய நாடுகளுக்கு வலுக்கட்டாயமாக இட மாற்றம் செய்யப்பட்டனர்.




இன்று, நேபாளத்தில் உள்ள லோட்ஷாம்பாவின் எண்ணிக்கை அமெரிக்கா மற்றும் அவர்கள் இடம் பெயர்ந்த பிற நாடுகளை விட கணிசமாகக் குறைவாக உள்ளது. தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடந்தாலும் அகதிகள் யாரும் பூட்டானுக்கு திரும்ப அனுமதிக்கப் படவில்லை.

**அகதிகள் பாரியளவில் வெளியேற்றம்**

1980களின் போது, பூட்டானின் மொத்த மக்கள் தொகையில் லோட்ஷாம்பா மக்கள்தொகை 25 வீதம் ஆக இருந்தது. 1980 களின் பிற்பகுதியிலிருந்து, பூட்டான் அதிகாரிகளால் சட்டவிரோதமாக வெளிநாட்டினர் என்று முத்திரை குத்தப்பட்ட பின்னர், 100,000 க்கும்




மேற்பட்ட லோட்ஷாம்பாக்கள் பூட்டானில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

இந்த குடிமக்கள் நேபாளத்திலிருந்து பூட்டானுக்கு குடிபெயர்வது முதன்முதலில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் தொடங்கியது. 1988 மற்றும் 1993 க்கு இடையில், இன மற்றும் அரசியல் ஒடுக்குமுறை காரணமாக ஆயிரக்கணக்கானோர் நாட்டை விட்டு வெளியேறினர்.

1990 இல், அதிக ஜனநாயகம் மற்றும் சிறுபான்மை உரிமைகளுக்கு மதிப்பளிக்கக் கோரி, தெற்கு பூட்டானில் வன்முறை இனக் கலவரம் மற்றும் அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் வெடித்தன.

அந்த ஆண்டு, பூட்டான் மக்கள் கட்சி, அதன் உறுப்பினர்கள் பெரும்பாலும் பூட்டான் அரசாங்கத்திற்கு எதிராக வன்முறை பிரச்சாரத்தை மேற்கொண்டனர்.




லோட்ஷாம்பா மக்கள் அரசாங்கத்திடம் இருந்து ஒரு மிருகத்தனமான பதிலை எதிர்கொண்டனர். அதில் பெண்கள் மற்றும் குடிமக்கள் பிடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர்.

**சிறையில் கொடூர சித்திரவதை**

இதில் மனித உரிமை ஆர்வலர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசியல் தலைவர்களும் அடங்குவர். இந்த அமைதியின்மை மற்றும் வன்முறையை அடுத்து, ஆயிரக்கணக்கான மக்கள் பூட்டானை விட்டு வெளி யேறி நேபாளத்தின் ஏழு அகதிகள் முகாம்களில் குடியேறி உள்ளனர்.

1985 ஆம் ஆண்டின் பூட்டான் குடியுரிமைச் சட்டமும் லோட்ஷாம்பாவின் இடப்பெயர்ச்சியில் பெரும் பங்கு வகித்தது. பூட்டான் குடிமகனாக யாரை நியமிக்கலாம் என்பதற்கான புதிய தேவைகளை இந்த சட்டம் அறிமுகப்படுத்தியது, மேலும் இது முக்கியமாக லோட்ஷாம்பா இனத்தவரைப் பாதித்தது.

ஒரு குடிமகனாகக் கருதப்படுவதற்கு, ஒருவரின் பெற்றோர் இருவரும் பூட்டானியர்களாக இருக்க வேண்டும் என்று சட்டம் அறிவித்தமையால், இது லோட்சம்பா மக்களை பெரிதும் பாதித்தது. ஜனவரி 2010 வரை, 85,544 அகதிகள் முகாம்களில் தங்கியுள்ளனர். 2008 ஆம் ஆண்டில், பூட்டானின் மக்கள் தொகையில் 35ூ இந்த மோதல்களின் விளைவாக இடம்பெயர்ந்துள்ளதாக அமெரிக்க வெளியுறவுத்துறை மதிப்பிட்டுள்ளது.

இந்தியாவிற்கு தப்பி ஓடிய லோட்ஷாம்பா மக்கள் :

> **லோட்ஷாம்பா மக்கள் மீதான இன வன்முறை, பூட்டானில் மறைக்கப்பட்ட இருண்ட ரகசியமாக இன்னமும் தொடர்கிறது. உலகின் கண்களுக்கு அழகிய தேசமாக மிளிரும் மலைச்சாரல் நாட்டில் ஓர் இனம் முழுமையாக விரட்டப்பட்ட சுத்தகரிக்கப்பட்டுள்ளமை வரலாற்றின் கருப்புப் பக்கங்களாகும்**

பல லோட்ஷாம்பா மக்கள் இந்தியாவிற்கு தப்பி ஓடிய போதிலும், உள்ளூர் இந்திய அரசாங்கத்திடம் இருந்து அவர்கள் மிகக் குறைந்த ஆதரவையே பெற்றனர். இது பூட்டானிய இராணுவத்தை லோட்சம்பாவிற்கு எதிராக பெரிய வன்முறைச் செயல்களைச் செய்ய அனுமதித்தது.

நேபாளம் மக்களிடம் அதிக வரவேற்பைப் பெற்றதாக நிரூபித்து, இறுதியில் ஏப்ரல் 1993 இல் தொடங்கி லோட்ஷாம்பாவை திருப்பி அனுப்ப முயற்சிக்க பூட்டானுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டது.


எவ்வாறாயினும், இந்த பேச்சுவார்த்தைகள் லோட்ஷாம்பா அகதிகளை புதிய வகைப்படுத்தலில் மட்டுமே விளைவித்தன. அவர்கள் வெளியேற்றப்பட்ட பூட்டானி யர்கள், புலம்பெயர்ந்த பூட்டானியர்கள், குற்றப் பதிவு கள் உள்ள பூட்டானியர்கள் மற்றும் பூட்டானியர் அல்லாதவர்கள் என நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட் டனர்.

லோட்ஷாம்பா அவர்களின் குடியுரிமையை அகற்றுவதன் மூலம் மீண்டும் நாட்டிற்குள் நுழைவதைத் தடுக்க பூட்டானால் இது ஒரு தந்திரமாக செய்யப்பட்டது. இதில் தாங்கள் தானாக முன்வந்து பூட்டானை விட்டு வெளியேறியதாகக் கூறும் படிவங்களில் கையெழுத்திடுமாறு லோட்ஷாம்பா மக்களுக்கு அழுத்தம் கொடுத்தது.

**பூட்டானின் இருண்ட ரகசியம்**

தனிநபர் அடிப்படையில் அகதிகளை உலகில் மிகப்பெரிய அளவில் உருவாக்கிய நாடு பூட்டான் தான். 1990களில் பூட்டானின் மக்கள்தொகையில் ஆறில் ஒரு பங்கைக் கொண்ட லோட்ஷாம்பா இனக் குழு தோற்றுவித்தது.

லோட்ஷாம்பா மக்கள் மீதான இன வன்முறை, பூட்டானில் மறைக்கப்பட்ட இருண்ட ரகசியமாக இன்னமும் தொடர்கிறது. உலகின் கண்களுக்கு அழகிய தேசமாக மிளிரும் மலைச்சாரல் நாட்டில் ஓர் இனம் முழுமையாக விரட்டப்பட்டு சுத்தகரிக்கப்பட்டுள்ளமை வரலாற்றின் கருப்புப் பக்கங்களாகும்.



# புடினுக்கு எதிராக கூலிப்படை கலகம்!

## மொஸ்கோவில் டாங்கிகள் காவல்!!
## தெற்கு நகரில் இராணுவ தலைமையகம் முற்றுகை



**மொஸ்கோ, ஜூன் 25**

**ரஷ்யாவில் இராணுவத் தலைமைக்கும் அந்நாட்டின் சக்தி மிக்க தனியார் கூலிப்படைக்கும் இடையே உள்மோதல் வெடித்திருக்கிறது.**

**உக்ரைன் போரில் ரஷ்யப்படைகளின் அண்மைக்கால வெற்றிகளுக்குப் பின்னால் இயங்கி வந்த ‘வாக்னர்’ கூலிப்படை திடீரெனப் புடினின் இராணுவத் தலைமைகளுக்கு எதிராகக் கலகத்தில் இறங்கியுள்ளது.**

அதனால் மொஸ்கோவில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

நாட்டில் கலகத்தைத் தூண்டுகிறார் என்று வாக்னர் கூலிப்படைத் தலைவர் மீது கிரெம்ளின் குற்றம் சுமத்தியுள்ளது.

உளவுத் துறை அவர் மீது விசாரணையைத் தொடக்கியுள்ளது.

தலைநகர் மொஸ்கோவில் “பயங்கரவாதத் தடுப்பு ஏற்பாடுகள்” செய்யப்பட்டிருப்பதாக நகரின் மேயர் செர்ஜி சோபியானின் அறிவித்திருக்கிறார். நகரின் பல இடங்களிலும் கவச வானங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. நாட்டின் ஏனைய சில பிராந்தியங்களிலும் காவல் அதிகரிக்கப்பட்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.


ரஷ்யாவின் தென்பகுதியின் முக்கிய மைய நகரமாகிய ரோஸ்டோவ்-ஒன்-டொனில் உள்ள இராணுவத் தலைமையகத்தையும் வான் தளம் ஒன்றையும் வாக்னர் படைகள் இன்று சனிக்கிழமை காலை கைப்பற்றி நிலைகொண்டுள்ளன என்று அறிவிக்கப்படுகிறது. ரெலிகிராம் சமூகவலைத் தளத்தில் வெளியான ஒரு வீடியோவில், வாக்னர் படைத் தலைவர் ப்ரிகோஜின் தலைமையகத்தின் உள்ளே காணப்படுகிறார். ரோஸ்டோவ் நகரம் உக்ரைன் மீதான படை நடவடிக்கையில் முக்கியமான ஒரு பின் தளமாகும்.

வாக்னர் படைத் தலைவர் அங்கிருந்து வெளியிட்ட ஒரு வீடியோவில், தானும் தனது 25 ஆயிரம் வீரர்களும் நாட்டுக்காக உயிர்விடத் தயார் என்று அறிவித்திருக்கிறார். பாதுகாப்பு அமைச்சர் நேரில் பேசுவதற்கு வரவேண்டும் என்றும் அழைப்பு விடுத்திருக்கிறார்.

வாக்னர் கூலிப்படையின் தலைவர் ப்ரிகோஜின் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட வீடியோ பதிவுகளில் ரஷ்ய ராணுவம் பெரும் எண்ணிக்கையான தனது வீரர்களைத் தண்டனை வழங்கும் நோக்கில் கொன்று விட்டதாகக் குற்றம் சாட்டினார். உக்ரைனில் நடக்கின்ற போரில் சாதாரண ரஷ்ய மக்களுக்கு உண்மை மறைக்கப்படுகிறது என்று கூறிய அவர், ராணுவத் தலைமையை அகற்றும் நீதிக்கான பயணத்தைத் தொடக்கப்போவதாக அறிவித்தார்.

வாக்னர் தனியார் படை 25 வீரர்களைக் கொண்டது. அதன் தலைவர் ப்ரிகோஜின் அண்மைக் காலமாக உக்ரைன் போர் தொடர்பாக ரஷ்ய இராணுவத் தலைமை மீது கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வருகிறார். (அ)

# “தேசத் துரோகம், என்கின்றார் புடின்!



மொஸ்கோ நகரில் இராணுவ வாகனங்கள் நிறுத்தப்பட்டிருப்தையும் ஆயுதம் தாங்கிய படையினர் நிலையெடுத்துக் காவல் புரிவதையும் காட்டுகின்ற தொலைக்காட்சிப் படங்கள் வெளியாகியுள்ளன. நகரில் பதற்றம் நிலவுகின்ற போதிலும் மக்கள் நடமாட்டம் காணப்படுகிறது. (அ)

மொஸ்கோ, ஜூன் 25

ரஷ்யாவில் சக்தி மிக்க தனியார் படை ஆரம்பித்துள்ள உள்நாட்டுக் கிளர்ச்சி அங்கு பெரும் குழப்பமான நிலைமையை உருவாக்கியிருக்கிறது.

இரவிரவாக இடம்பெற்ற சம்பவங்களை அடுத்து நேற்று சனி காலை அரசுத் தொலைக்காட்சியில் தோன்றி விசேட உரையாற்றிய அதிபர் விளாடிமிர் புடின், வாக்னர் படையின் தலைவர் ப்ரிகோஜின் செயலை “தேசத்துரோகம்” என வர்ணித்தார். “அவர் முதுகில் குத்தி விட்டார். நாட்டுக்கும் மக்களுக்கும் இது ஒரு பின்னடைவு, இந்த உள்நாட்டுத் துரோகத்தில் இருந்து நம்மை நாமே தற்காத்துக் கொள்வோம் “-என்றும் புடின் உறுதி அளித்தார்.

வாக்னர் படைத் தலைவரது பெயரைக் குறிப்பிடாமல்” இந்தக் கிளர்ச்சிக்குப் பின்னால் இருப்பவர்களுக்குத் தகுந்த தண்டனை வழங்குவோம் “-என்றும் அவர் அறிவித்தார்.

வாக்னர் படைகளது கட்டுப்பாட்டில் வந்துள்ள ரோஸ்ரோவ் - ஒன்-டொான் என்ற தென்பகுதி நகரில் நிலைமை “குழப்பமாக” இருப்பதைப் புடின் தனது உரையில் ஒப்புக் கொண்டார்.

இதேவேளை - வாக்னர் தனியார் படைத் தலைவர் ப்ரிகோஜின், தங்களது நடவடிக்கையை “ஒரு சதிப் புரட்சி அல்ல, கிளர்ச்சியே” என்று அறிவித்திருக்கிறார். தந்தையர் நாட்டு மக்களுக்காக உயிரைக் கொடுக்கத் தயாராக இருப்பதாகவும் ரஷ்யாவின் காவல் படைகளைத் தம்மோடு கைகோர்க்க வருமாறும் அழைப்பு விடுத்திருக்கிறார்.

அதேசமயம், ப்ரிகோஜினினைக் கைவிட்டு விட்டு வெளியேறுமாறு வாக்னர் படையின் வீரர்களுக்கு ரஷ்ய ராணுவம் வேண்டுகோள் விடுத்துள்ளது. அவர்களுக்குத் தண்டனையில் இருந்து விலக்களிக்கப் படும் என்றும் ராணுவம் கூறியுள்ளது.







# ‘தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு’...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சித் தேரதல் நடைபெற்றிருக்குமானால் குத்துவிளக்குச் சின்னத்தில் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்த ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி கணிசமான உறுப்பினர்களைப் பெறுவதற்கான வாய்ப்பு இருந்தது. அது கட்சிக்கானதல்ல வட்டாரங்களில் செல்வாக்குப் பெற்ற நபர்களுக்கானது. இருப்பினும் அவ்வாய்ப்பு புதிய கூட்டணிக்கு உந்து சக்தியை வழங்கியிருக்கும் என்பதையும் மறுக்க முடியாது.

மறுபுறத்தில் தமிழரசுக் கட்சிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பதாகை இல்லாவிட்டாலும்அதன் சொந்த வாக்கு வங்கியில் பெரிய மாற்றம் நிகழ்ந்து விடாது. ஏனெனில் அக்கட்சி கூட்டமைப்பு என்பதிலும் பார்க்க தமிழரசுக் கட்சி என்பதையே முதன்மையாகப் பேணி வருகிறது. தமிழரசுக்கட்சியின் இந்நிலைப்பாடே கூட்டமைப்பின் வெடிப்புக்கான பிரதான காரணம் என்பது வேறு விடயம். இன்றும் வடக்குக் கிழக்கில் பரவலான கட்சிக் கட்டமைப்பைக் கொண்ட தமிழ்க் கட்சி அது மட்டுமே. ஆனால் அக்கட்சியும் அதன் உள்ளக முரண்பாடுகளாலும் தலைமைத்துவ வறுமையாலும் தனிநபர்போட்டிகளாலும் தனது வாக்கு வங்கியை வேகமாக இழந்து வருகிறது. எதிர்காலத் தேர்தல்களில் இதன்தாக்கம் அதிகம் உணரப்படும்.அத்துடன் கூட்டமைப்பின் ஏனைய கட்சிகளின் வெளியேற்றம் தமிழர்பிரதிநிதித்தவத்தைப் பெருமளவு பாதிக்கும். இது கிழக்கு மாகாணத்தில் பெருமளவு உணரப்படும். இதுகூட்டமைப்பைத் தோற்றுவித்தபோது இருந்த நிலைமையைவிட மோசமான நிலைமையே ஏற்படுத்தும்.

இன்று தமிழ்த் தேசியப் பரப்பில் அதற்கு எதிரான சக்திகளும் அரச அடிவருடிகளும் வேகமாக ஊடுருவி உறுதியான தளங்களை அமைத்துவரும் ஒரு சூழ்நிலையில் தமிழ்க் கட்சிகள் மேலும் மேலும் பிளவடைந்து செல்வது பாதகமான விளைவுகளையே எதிர்காலத்தில் தோற்றுவிக்கும். இதனால்மக்களுக்கு மட்டுமன்றி அக்கட்சிகளுக்கும் எவ்வித நன்மைகளும் கிடைக்கப் போவதில்லை. இதனை உணர்ந்து செயற்படும் நிலையிலும் தமிழ்த் தேசியக் கட்சிகள் இன்று இருப்பதாகவும் தெரியவில்லை. ஏனெனில் அக்கட்சிகள் தமிழ் மக்களின நலன்களைவிட வேறு விடயங்களையே முக்கியமாகப் பார்க்கின்றன. இவ்வகையில்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பதாகையையும் அவை கையாளவிரும்புகின்றன. எனவே கட்சிகள் ஒன்று பட்டாலே கூட்டமைப்பு மக்களுக்கானதாக இருக்கும்.இல்லையெனில் அது கட்சிகளுக்கானதாகவே பார்க்கப்படும். ●

# குருந்தூர் மலை...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

அபயதிஸ்ஸ தேரரின் அனுசரணையின் கீழ் துவக்கி வைக்கப்பட்டது. இராணுவ முகாம்களுக்கு அருகில், இராணுவ அனுசரணையுடன் புதிய விகாரைகளை அமைப்பதற்கென பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒரு சம்பவத்தின் போது (ஏப்ரல் 2023, புல்மோட்டை) அமைச்சர்கள் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த அரசியல் பிக்கு ஒருவரின் மெய்க்காவலர் ஒருவர், ஓர் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் மீது துப்பாக்கியை நீட்டிக் கொண்டிருக்கும் ஒரு காணொளி வெளியிடப்பட்டது. (பொலிஸ் பேச்சாளரின் கருத்தின் பிரகாரம், புத்த பிக்குகளையும் உள்ளிட்ட விதத்தில் அரசியல்வாதிகள் அல்லாத நபர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கென 5400 பொலிஸ் உத்தியோகத்தர்கள் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளனர். தர்மத்தின் பிரகாரம் வாழ்பவர்கள் அந்த தர்மத்தினால் பாதுகாக்கப்படுவார்கள் என புத்த பெருமான் சொன்னார். மெய்ப் பாதுகாவலருடன் கூடிய புத்த பிக்குகள் ஒன்றில் புத்த பெருமானின் போதனைகளைப் பொருட்படுத்துவதில்லை. அல்லது அந்தப் போதனைகள் தம்மை உள்ளடக்கவில்லை என்பதை அறிந்திருக்கிறார்கள்.)

இந்தப் பின்னணியிலேயே ஜனாதிபதி விக்ரமசிங்க 2023 மே மாதத்தில் தொல்லியல் பணிப்பாளர் நாயகத்துடனான தனது முதலாவது சந்திப்பை மேற்கொண்டார். தொல்லியல் திணைக்களம் வடக்கு கிழக்கு பிரதேசங்கள் மீது இயல்புக்கு மாறான விதத்தில் உயர் அளவில் கவனம் செலுத்தி வருவது குறித்து கேட்கப்பட்ட பொழுது, பேராசிரியர் அநுர மனதுங்க அதற்கு இரண்டு விளக்கங்களை முன்வைத்தார். போர் இடம்பெற்ற காலப் பிரிவின் போது இப்பிரதேசத்தில் எத்தகைய தொல்லியல் அகழ்வுகளையும் மேற்கொள்ள முடியாதிருந்தது. மேலும், இப்பிரதேசங்களில் இடம்பெற்று வரும் தொல்லியல் செயற்பாடுகளுக்கு வெளியாட்கள் முக்கியமாக புத்த பிக்குகள் நிதிப்படுத்தலை வழங்கி வருகின்றார்கள். வேறு வார்த்தைகளில் கூறுவதாக இருந்தால், பண பலத்துடன் கூடிய புத்த பிக்குகள் தொல்லியல் திணைக்களத்தின் நிகழ்ச்சிநிரல் முன்னெடுக்கப்பட வேண்டிய விதம் தொடர்பாக பணிப்புரைகளை வழங்குவதற்கென பண நன்கொடைகளை வழங்கி வருகின்றார்கள்.

தொல்லியல் திணைக்களம் ஒரு தனியார் நிறுவனம் அல்ல என்ற விடயத்தையும், வெளி வளங்கள் திணைக்களத்திலிருந்து மட்டுமே அது நிதிகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற விடயத்தையும் ஜனாதிபதி சரியாகவே பணிப்பாளர் நாயகத்துக்கு நினைவூட்டினார். “(தொல்லியல் மதிப்பைக் கொண்ட) ஏதேனும் ஒரு வஸ்து கண்டு பிடிக்கப்பட்டால் எவரும் அந்த இடத்தில் ஒரு வீட்டையோ அல்லது பௌத்த கோயிலையோ அமைக்க முடியாது” என அவர் கூறினார். “அது நாட்டுக்குச் சொந்தமானது.” ஆனால், பணிப்பாளர் நாயகம் வேறு விதத்தில் சிந்தித்திருப்பது போல் தெரிகிறது. அதுவே இரண்டாவதும், பிரபல்யமானதுமான சந்திப்புக்கு வழிகோலியிருந்தது.

### மரபுரிமை என்ற விளையாட்டின் விதிகள்

போர் வெற்றியை உடனடுத்து, அந்த வெற்றியை நினைவு கூரும் பொருட்டு அநுராதபுரத்தில் ஒரு நினைவுத் தூபியை நிறுவ வேண்டுமென மஹிந்த ராஜபக்ஷவும், கோட்டபாய ராஜபக்ஷவும் தீர்மானித்தார்கள். எரிவாயுவை பெற்றுக் கொள்வதற்காக கியூ வரிசைகள் ஆரம்பமாகியிருந்த நிலையிலும், நாட்டு மக்களில் நான்கில் ஒரு பங்குக்கு மேற்பட்டவர்கள் ராஜபக்ஷர்கள் “மீட்டெடுத்த” தேசத்திலிருந்து வெளியேறிச் செல்வதற்கு எதிர்பார்த்திருந்த ஒரு சூழ்நிலையிலும் இந்த நினைவுத் தூபி 2021 நவம்பர் மாதம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது (“இராணுவம், கடற்படை, விமானப் படை மற்றும் சிவில் பாதுகாப்புத் திணைக்களம் என்பவற்றின் வீரர்களின் அழியாத நினைவுகளும், பெறுமதி மிக்க தியாகங்களும் மீண்டுமொரு முறை அமரத்துவம் அடைந்திருப்பதுடன், புனிதப்படுத்தப்பட்டுள்ளன” என டெய்லி நியூஸ் பத்திரிகை உரத்த குரலில் பிரகடனம் செய்தது. அதாவது, வன்முறையுடன் கூடிய ஒரு போரைக் கொண்டாடுவதற்கு அகிம்சையில் நம்பிக்கை வைத்திருக்கும் ஒரு மதத்தைக் கீழ்மைப்படுத்தும் விதத்தில் அது அப்படி எழுதியிருந்தது). சந்தஹிரு சேய என்ற பெயரிலான இந்தப் போர் நினைவுத் தூபி தொல்லியல் ரீதியில் மிகவும் நிர்ணயகரமான இந்த அமைவிடத்தில் ஒருபோதும் நிர்மாணிக்கப்பட்டிருக்கக் கூடாது என முன்னாள் தொல்லியல் பணிப்பாளர் நாயகம் கலாநிதி செனரத் திசாநாயக்க கூறினார். இந்தக் கருத்திட்டத்துக்கு அனுமதி வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் தனக்கு ஏற்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார். இரத்தத்தையும், கண்ணீரையும் கொண்டு கிழக்கில் தொல்லியல் மரபுரிமையைப் பாதுகாப்பதற்கு பிரதிக்ஞை அளித்திருக்கும் பெரும்பாலான அரசியல் பிக்குகள், ராஜபக்ஷர்கள் இவ்விதம் இந்த இடத்தை இரு விதத்தில் களங்கப்படுத்தியிருப்பது குறித்து மௌனம் சாதித்தார்கள்.

மேலும், 2010ஆம் ஆண்டு ஜூலை 17ஆம் திகதி இரவு ஆயுதம் தாங்கிய ஒரு கும்பல் பாணம்பத்துவில் அமைந்திருக்கும் ஒரு புராதன சிங்களக் கிராமமான றாகம்வெல கிராமத்தை தீயிட்டுக் கொளுத்திய பொழுது இவர்கள் எவரும் வாய் திறக்கவில்லை. றாகம்வெல கிராமவாசியான முதியன்சேலாகே பண்டார இது தொடர்பாக இப்படிக் கூறுகிறார்: “அவர்கள் எம்மை எமது இடத்திலிருந்து வெளியேற்றிவிட்டு, கொலை செய்வதாக அச்சுறுத்தினார்கள். அவர்களிடம் இரண்டு ரி 56 துப்பாக்கிகள் இருந்தன. நான் அந்த இடத்திலிருந்து தப்பிச் சென்றேன். ஆனால், அதற்குள் அவர்கள் எல்லா இடங்களையும் தீயிட்டுக் கொளுத்திக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது நான் திரும்பி வந்தேன்” (பிபிசி 18.7.2010). ஒரு சில கிராமவாசிகள் உதவி நாடி அருகிலிருந்த விசேட அதிரடிப்படை காவலரணுக்கு ஓடிச் சென்ற பொழுது, அங்கிருந்த அதிரடிப்படை ஆளணியினர் அந்த விடயத்தில் தலையிடுவதற்கு மறுத்தனர். தீயிட்டுக் கொளுத்தப்பட்ட தமது கிராமங்களுக்கு கிராமவாசிகள் திரும்பி வருவதனை பொலிஸார் தடுத்து நிறுத்தினார்கள். வெல்லஸ்ஸ - திகாமடுல்ல பிரதம சங்கநாயக்க தேரர் கிராமத்தின் விகாரையில் ‘வஸ்’ அனுஷ்டிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டது. அதே போல, றாகம்வெல கிராமத்திலிருந்த புராதன தொல்லியல் அமைவிடம் ஒன்றான சமுத்ரகிரி பன்சலையை கடற்படையினர் அழித்ததாக கூறப்படுகிறது. றாகம்வெல மற்றும் ஏனைய பாணம கிராமங்களைச் சேர்ந்த மக்கள் - தமது தமிழ் மற்றும் முஸ்லிம் அயலவர்கள் செய்து வருவதைப் போலவே - தாம் இழந்த காணிகளைப் பெற்றுக் கொள்வதற்காக இன்னமும் போராடி வருகின்றார்கள்.

புத்த பெருமான் இப்படிச் சொன்னார்: “பிக்குகள் தாமாகவே உங்களை ஒரு தீவாக ஆக்கிக் கொள்ளுங்கள் நீங்களே உங்களிடம் சரணடையுங்கள் வேறு எவரும் தேவையில்லை. தம்ம உங்களுக்கான தீவாகவும், உங்களுக்கான சரணாலயமாகவும் இருந்து வரட்டும். வேறு எதுவும் தேவையில்லை” (அட்டாதிபா சூத்தர). அரசியல் பிக்கு இந்தக் குறிப்பிட்ட தீவு தமது சொத்து என உரிமை கோருகிறார். சித்தார்த்த இளவரசர் ஆன்ம ஒளியைப் பெற்றுக் கொள்வதற்கான தனது தேடலின் போது உலக வஸ்துக்களை துறந்தார். அரசியல் பிக்கு அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக உலக வஸ்துக்களை குறிப்பாக - காணிகளை - சேர்த்துக் கொள்வதற்கு புத்த மதத்தைப் பயன்படுத்தி வருகிறார். வலுவான, குரலை உச்ச மட்டத்தில் உயர்த்தும் ஆற்றலுடன் கூடிய இந்தத் தரப்பை பகைத்துக் கொள்ளக் கூடாது என்ற அச்சத்தில் அனைத்து வண்ணங்களையும் சேர்ந்த அரசியல்வாதிகள் அவர்களுடன் சேர்ந்து செயற்பட்டு வருகின்றார்கள். ஜனாதிபதி விக்ரமசிங்க இது தொடர்பாக மிகவும் அரிதான ஒரு விதிவிலக்காக இருந்து வருகிறார். அவர் தான் சொல்வதைச் செய்வாரா என்பதனை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

மரபுரிமை பாதுகாப்பு என்ற போர்வையில் இக்காணிகளைக் கையகப்படுத்திய பின்னர், அவற்றில் விவசாயம் செய்து வருபவர்கள் குத்தகைக் கட்டணத்தை செலுத்த வேண்டும் என பணாமுரே தேரர் கூறி வருவதாக இப்பொழுது நன்கு பிரபல்யமடைந்திருக்கும் இந்தச் சந்திப்பின் போது தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். அவ்வாறு செய்வதற்கு புத்த பிக்குவுக்கு உரிமை இருந்து வருகின்றது எனக் கூறியதன் மூலம், ஆசிரிமலை புனித பிரதேசத்துக்குள் இருக்கும் காணிகள் குத்தகைக்கு விடப்பட்டு வருவதாகக் கூறப்படும் விடயத்தை மெதகொட அபயதிஸ்ஸ தேரர் நியாயப்படுத்தினார். எல்லாவல மேதானந்த தேரர் மேலும் ஒரு படி முன்னே சென்று, குருந்தூர் மலை கோயில் தொடர்பாக உரிமை கோரப்பட்ட காணிகளை மட்டுமன்றி, அதனைச் சூழவுள்ள காணிகளையும் சிங்கள பௌத்தர்கள் அல்லாத எவருக்கும் வழங்க முடியாது எனக் கூறினார்.

ஆகவே, மரபுரிமை பாதுகாப்பு என்ற விளையாட்டின் விதிகள் இப்படித் தான் இருந்து வருகின்றன. தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கூறி ஓரிடத்தை அடையாளப்படுத்துதல் அதனை ஒரு புனித பூமியாக உரிமை கோருதல் அதன் பாதுகாவலராக ஒரு பிக்குவை நியமனம் செய்தல் அந்தக் காணிகளை குத்தகைக்கு விடுவதனையும் உள்ளடக்கிய விதத்தில் தான் எதனைச் செய்ய வேண்டுமென விரும்புகின்றாரோ அதனைச் செய்வதற்கு அந்தப் பிக்குவுக்கு இடமளித்தல். அதன் விளைவாக, தொல்லியல் அமைவிடங்கள் நாசமாக்கப்படுதல் மற்றும் காடுகள் அழிக்கப்படும் நிலைமைகள் என்பன தோன்றும் பொழுது அரச அதிகாரிகள் செவிடர்கள், ஊமையர், குருடர்கள் போல இருந்து வருவார்கள். அதாவது, தாய்லாந்து நாட்டில் பிறந்த கொம்பன் யானையான முத்துராஜா யானையை அதன் பாதுகாவலர்களான கந்தே விகாரை பிக்குகள் கொடூரமாக நடத்திய சம்பவத்தை உதாசீனம் செய்த அதே விதத்தில் அதிகாரிகள் இது தொடர்பாகவும் நடந்து கொள்வார்கள்.

முத்துராஜா யானை அதிர்ஷ்டவசமாக இலங்கையில் பிறந்திருக்கவில்லை. அந்த யானைக்கு நேர்ந்திருக்கும் கதி தாய்லாந்துக்கு தெரிய வந்த பொழுது, அதனை மீண்டும் அந்நாட்டுக்கு எடுத்துச்செல்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. மூன்று தசாப்த காலம் இந்த சிங்கள - பௌத்த நரகத்தில் வாழ்ந்ததன் பின்னர் இறுதியில் முத்துராஜா சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறது.

வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் வாழ்ந்து வரும் சாதாரண தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள், காணிப் பசியில் இருந்து வரும் அரசியல் பிக்குகளின் அடாவடித்தனங்களினால் பாதிக்கப்பட்ட நிலையில் எத்தகைய நிவாரணங்களும் இல்லாமல் இருந்து வருகின்றார்கள். வறியவர்களாகவும், எத்தகைய தொடர்புகளும் இல்லாதவர்களாகவும் இருந்து வரும் மண்ணின் மைந்தர்களான இந்த மக்களுக்கு வேறு போக்கிடமில்லை. துன்பத்திலும், வெறுப்பிலும் அமிழ்வதைத் தவிர அவர்கள் வேறு என்ன செய்ய முடியும்? அவ்விதம் கையறு நிலைக்குத் தள்ளப்படுவது மிகவும் ஆபத்தான ஒரு நிலைமை. இன்றைய அரசியல் பிக்குகள் தமது புவியியல் ரீதியான சிங்களம் மட்டும் நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்த விதத்தில் அடுத்தக் கட்ட மோதல்களுக்கான விதைகளை தூவி வருகின்றார்கள். அவர்களுடைய முன்னோர்கள் 1956இல் சிங்களம் மட்டும் கொள்கையின் மூலம் செய்த அதே காரியத்தை இவர்கள் இப்போது செய்து வருகின்றார்கள். ●

## உள்நாட்டு..

அல்லது கடன் காலத்தை நீடிக்கவோ வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மத்திய வங்கியின் சுதந்திரச் சட்டத்தையும் நிறைவேற்ற அரசாங்கம் எதிர்பார்க்கிறது. இந்த கட்டளைகள் மற்றும் ஒழுங்குமுறைகள் ஜூலை மாதத்துக்கு முன்னர் நிறைவேற்றவேண்டும் என சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு அறிவித்துள்ளது. (அ)

## யாழ்...

மற்றும் மறைமுகமான பங்களிப்புக்களும் ஆதரவுகளுமே காரணமாகும்.

இருப்பினும் சில விடயங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தவும் அறியத் தருவதற்குமானதொரு சூழல் தற்போது எழுந்திருக்கின்றமையால் அதனை இந்தக் கடிதம் வாயிலாக அறியத்தருகின்றோம்.

1. தமிழ் மக்களின் கூட்டு உணர்வுகளோடு தொடர்புடைய தினங்களில் களியாட்டங்கள் மற்றும் கொண்டாட்டங்களிற்கு ஒப்புதல் வழங்குவதனையும் அவற்றினை முன்னெடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்வதனையும் தவிர்க்குமாறும், அன்றைய தினங்களில் பல்கலைக்கழக நாட்காட்டியில் நிகழ்வுகள் இடம்பெறாமையை உறுதி செய்யுமாறும் வேண்டிக் கொள்கிறோம்.

அண்மையில்கூட தமிழ் மக்களின் உணர்வுகளைப் உதாசீனப்படுத்தி அவமதிக்கும் விதத்தில் நிகழ்வொன்று இராணுவப் பிரசன்னத்தோடு இடம் பெற்றிருந்தது. அது தமிழ் மக்களின் ஆறாத மனங்களை மேலும் புண்படுத்தியிருந்ததோடு, பலத்த விமர்சனத்துக்கு உள்ளாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

2. யாழ். பல்கலைக்கழகத்தில் திட்டமிட்டு இடம்பெறும் மறைமுகமான சிங்களமயமாக்க முயற்சிகளால் தமிழ் மாணவர்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படாமையை உறுதி செய்யுமாறு வேண்டுகின்றோம்.

பல்கலைக்கழக நுழைவு என்னும் எந்தப் புள்ளியில் இனப்பிரச்னை ஆரம்பமாகியதோ அதே புள்ளியில் மீண்டும் வந்து நிற்கின்றோமா? என்று எண்ணத் தோணுகின்றது.

தமிழ் மக்களின் உரிமைப் பயணத்தில் பலமான குரலாக ஒலித்துக் கொண்டிருக்கும் யாழ். பல்கலைக்கழகத்தின் குரலை நசுக்கும் விதமாக பெரும்பான்மையின மாணவர்கள் திட்டமிட்ட வகையில் உள்நுழைக்கப்பட்டு வருகின்றார்கள் என்பது யாவரும் அறிந்ததே.

இவ்வாறானதொரு சூழலில் அவர்கள் பெரும்பான்மையைக் கைப்பற்றுவதன் ஊடாக தமிழ் மாணவர்களுக்குரிய தலைமைத்துவ வாய்ப்புக்கள் யாவும் ஜனநாயகம் என்ற போர்வையில் பறிக்கப்படுவதற்கான சூழல் எழுந்துள் ளது.

இதனால் இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ் மாணவர்களுக்கென்றிருக்கும் இறுதியான ஒரேயொரு வாய்ப்பாகவிருக்கும் யாழ். பல்கலைக்கழகமும் இழக்கப்படும் சூழல் திட்டமிட்டு உருவாக்கப்பட்டு வருகின்றது.

தாயகத்தில் இடம்பெறும் பௌத்த-சிங்களமயமாக்கலுக்கு எதிராக யாழ். பல்கலைச்சமூகம் போராடி வருகையில், எமது விரிவுரையாளர்களே பல்கலையினுள் சிங்களமயமாக்கலை முன்னெடுக்கும் சூழல் உருவாகுமேயானால் அது ஒரு முரணான செயலாகும்.

“யாழ்.பல்கலைக்கழகத்திலேயே எமக்கு அநீதி இழைக்கப்படுகிறது, எவரேனும் நீதி தாருங்கள்” என்னும் கையறு நிலைக்கு எமது தமிழ் மாணவர்களை தள்ளிவிட வேண்டாம் என்றும், இவை பொதுவெளியில் மக்கள் மன்றத்திற்குச் செல்ல முன்னர் அவ்வாறான தமிழர் விரோத முயற்சிகளை தடுத்து நிறுத்துமாறும் வேண்டிக் கொள்கிறோம்”- என்றுள்ளது. (அ)

# எரிபொருளுக்கு பதிலாக தேயிலையை ஈரானுக்கு வழங்க திட்டமிடும் இலங்கை

கொழும்பு, ஜூன் 25

ஈரானிடம் இருந்து பெற்றுக்கொள்ளவுள்ள எண்ணெய்க்கு பதிலாக தேயிலை உற்பத்தி பொருட்களை வழங்கி கொடுப்பனவுகளை செலுத்த 2021ஆம் ஆண்டு இரு நாட்டு அரசுகளும் ஒப்பந்தம் செய்து கொண்டதாகவும், இது ஜூலை மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஈரானிடம் இருந்து இலங்கை பெற்ற 250 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான எரிபொருளுக்கான கொடுப்பனவுகளை செலுத்துவதற்காக தேயிலை ஏற்றுமதி செய்யப்படவுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின்படி மாதம் ஒன்றுக்கு ஐந்து மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான தேயிலையை ஈரானுக்கு 48 மாதங்களுக்கு ஏற்றுமதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

பண்டமாற்று வர்த்தகம் அல்லது பொருட்கள் பரிமாற்ற முறையின் கீழ் ஈரானுக்கு ஏற்றுமதி செய்யப்படும் தேயிலைக்கு இலங்கையில் உள்ள தேயிலை ஏற்றுமதியாளர்களுக்கு கனிம எண்ணெய் கூட்டுத்தாபனம் இலங்கை ரூபாயில் பணம் செலுத்தவுள்ளது.

ஈரானிய தேயிலை இறக்குமதியாளர்கள் ஈரானிய தேசிய எண்ணெய் நிறுவனத்திற்கு ரியால்களில் உரிய கொடுப்பனவுகளை செலுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# டுபாயில் தொழில்பெற்றுத் தருவதாக பண மோசடி செய்த பெண் கைதானார்!

கொழும்பு, ஜூன் 25

டுபாயில் சொக்கலட் உற்பத்தி நிறுவனத்தில் தொழில்பெற்றுத் தருவதாக தெரிவித்து, பண மோசடி செய்த பெண் ஒருவரை, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசேட விசாரணைப் பிரிவு கைது செய்துள்ளது.

தம்பதி ஒன்றின் மூலம் இந்த மோசடி வர்த்தகம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது.

தொழில்வாய்ப்பை பெற்றுத் தருவதாக ஒருவரிடம் தலா 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதம், 7 பேரிடம் அவர்கள் பணம் பெற்றுள்ளனர்.

பிரதான சந்தேகநபரான மஹியங்கனை பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த பெண், மருதானை பகுதியில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையம் ஒன்றில் சேவையாற்றியவர் என விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நிலையில், குறித்த மோசடியுடன் தொடர்புடைய அவரின் கணவரைக் கைது செய்ய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கச்சதீவு...

கூறப்பட்டுள்ளதாக தி ஹிந்து செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும், நடுக்கடலில் இந்திய மீனவர்களுக்கு அநீதிகள் இழைக்கப்படுவதாக தெரிவித்து, சென்னை மீனவர்கள் நல சங்கத்தை சேர்ந்த பீற்றர் ராஜன் என்பவர் உயர் நீதிமன்ற கிளையில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

பிரச்னைக்கு தீர்வாக 1974 ஆம் ஆண்டின் இந்தியா - இலங்கை ஒப்பந்தத்தை இரத்து செய்து கச்சதீவை மீட்க மத்திய அரசுக்கு உத்தரவிடவேண்டும் என இந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த மனு தலைமை நீதிபதி கங்காபுர்வாலா, நீதிபதி சுப்பிரமணியன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்தியா- இலங்கை இடையிலான 1974 ஆம் ஆண்டின் கச்சதீவு ஒப்பந்தத்தை இரத்து செய்ய நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை என நீதிபதிகள் இதன்போது குறிப்பிட்டுள்ளனர்.

இந்த மனு மீதான விசாரணை எதிர் வரும் 7 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (அ)

## ஜனாதிபதி...

இது தொடர்பில் அரச தரப்புக்குள் ஜனாதிபதி ஆலோசனை நடத்தியுள்ளார் எனவும், மேலதிக ஆலோசனைக்காக 10 பேரடங்கிய நிபுணர் குழுவொன்று அமைக்கப்படலாம் எனவும் அறியமுடிகின்றது.

செலவுக் கட்டுப்பாடு உள்ளிட்ட விவகாரங்களைக் கருத்திற்கொண்டே ஜனாதிபதி இவ்வாறு சிந்தித்து வருகின்றார் எனவும் கூறப்படுகின்றது.

மக்கள் மத்தியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கான செல்வாக்கு அதிகரித்துவரும் நிலையிலேயே, தேசிய வேலைத்திட்டத்தை முன்னெடுக்கும் நோக்கில் ஜனாதிபதி பதவியில் நீடிப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க எதிர்பார்க்கின்றார்.

எனினும், இது தொடர்பில் உத்தியோகபூர்வமாக எவ்வித தகவலும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அரசியல் வட்டாரங்களில் பேசப்படும் விடயங்களை மையப்படுத்தியதாகவே இத்தகவல் அமைந்துள்ளது.

# வெளிநாடு சென்றார் கோட்டா

கொழும்பு, ஜூன் 25

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச வெளிநாடு சென்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த பயணத்தில் அவரது மனைவி அயோமா ராஜபக்சவும் இணைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூர் எயார்லைன்ஸுக்கு சொந்தமான விமானத்தில் நேற்று அதிகாலை ஒரு மணிக்கு அவர் இலங்கையில் இருந்து வெளியேறியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கம்போடியா மற்றும் லாவோஸ் ஆகிய நாடுகளில் உள்ள பௌத்த விகாரைகளை வழிபடுவதற்காக இவர்கள் வெளிநாடு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தனது 18 நாள் பயணத்தை முடித்துக்கொண்டு அடுத்த மாதம் 10 ஆம் திகதி அவர் நாடு திரும்புவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு அரசுக்கு எதிரான போராட்டங்கள் காரணமாக, கடந்த ஆண்டு ஜூலை 9 ஆம் திகதி கோட்டாபய ராஜபக்ச நாட்டை விட்டு வெளியேற நேரிட்டது. அதன் பின்னர் பதவியையும் இராஜினாமா செய்திருந்தார்.

எவ்வாறாயினும், கடந்த 20 ஆம் திகதி கோட்டாபய ராஜபக்சவின் பிறந்த நாளை முன்னிட்டு கொழும்பில் சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அரசியல்...

லண்டனில் ஜனாதிபதி ரணில் தெரிவித்த கருத்துக்கள் அனைத்தும் உண்மை என்றும் அவர் குறிப்பிட்டார்.

லண்டன் சென்றுள்ள ஜனாதிபதி தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பில் தெரிவித்த கருத்துகள் குறித்து பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்த்தன், சி.சிறிதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் க.சுரேஷ் பிறேமச்சந்திரன் ஆகியோர் தமது கடும் விசனத்தை வெளியிட்டிருந்தனர். ஜனாதிபதியின் கருத்து முற்றிலும் பொய் என அவர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டபோதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியல் கைதிகள் விடுதலை, காணாமற்போனோர் விவகாரம், அதிகாரப் பகிர்வுடனான அரசியல் தீர்வு, காணிப் பிரச்னைகளுக்கான தீர்வு ஆகியன தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க லண்டனில் கூறிய கருத்து 100 வீதம் உண்மையானது.

தமிழ் எம்.பிக்களுடன் நடத்திய பேச்சுக்களின் அடிப்படையில்தான் அந்த தகவல்களை லண்டனில் கூறினார் ஜனாதிபதி ரணில்.

ஆனால் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் சிலர் தங்கள் அரசியல் இலாபங்களுக்காக இதனை மறுக்கிறார்கள்.

அவர்கள் தமிழ் மக்களை ஏமாற்றி அரசியல் பிழைப்பு நடத்துகிறார்கள். இது தமிழ் மக்களுக்கும் தெரியும் - என்றார். (அ)

## யானை...

என மொட்டுக் கட்சி எம்.பிக்கள் சிலர் அறிவித்து வருகின்றனர். இதனால் கட்சிக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது.

மொட்டுக் கட்சியில் இருந்து வெளியேறி 30 இற்கும் மேற்பட்டோர் சுயாதீனமாகச் செயற்படும் நிலையில், ஐக்கிய தேசியக் கட்சி பக்கமும் குழுவொன்று சென்றுவிட்டால் அடுத்த தேர்தலில் அது தாக்கமாக அமையும் என்பதாலேயே கட்சியின் பலத்தைக் காக்க மொட்டுக் கட்சி தற்போது வியூகம் வகுத்து வருகின்றது. (அ)

## ஜனாதிபதி நாடு...

பிரதமரிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் கால வரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளதால் வேட்புமனுக்களை கையளித்த அரச ஊழியர்களைப் போன்று ஏனைய நபர்களும் அடுத்தக்கட்டம் நோக்கி நகர முடியாமல் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாக பிரதமர் முன்னிலையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வேட்புமனுக்களை இரத்து செய்வதற்கு சட்டமூலமொன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்ற வேண்டும் என பிரதமர் தினேஷ் குணவர்தன இதன்போது பதிலளித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் (திருத்த) சட்டத்தின் கீழ், வேட்பாளர் ஒருவர் தனது தொகுதிகளில் சமூக சேவை நடவடிக்கைகளில் ஈடுபட்டு, மக்களுக்கு உதவுதல் போன்றவற்றின் மூலம் தேர்தல் சட்டங்களை மீறுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வேட்புமனுவை இரத்து செய்ய, பிரதமர் தினேஷ் குணவர்தன ஜனாதிபதியின் அனுமதி பெற எதிர்பார்த்துள்ளதாகவும் தெரியவருகிறது. (அ)

ஈழநாடு
Eelanadu

# நாணய நிதியத்தின் திட்டத்தை சீர்குலைத்தால் நாடு படுகுழியில்!

## எச்சரிக்கிறார் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய

கொழும்பு, ஜூன் 25

**சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டம் சீர்குலைந்தால் நாடு கடந்த வருடம் ஜூலை மாதம் இருந்த நிலைமைக்கு திரும்பும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம் பலாப்பிட்டிய தெரிவித்தார்.**

ருவன்வெல்ல பிரதேசத்தில் நேற்று சனிக்கிழமை ஊடகங்க ளுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- நாடு எதிர்நோக்கும் பொருளா தாரப் பிரச்னையைத் தீர்த்து மீளக் கட்டியெழுப்பும் செயற்பாட்டுக்கு சர்வதேச நாணய நிதியம் உள் ளிட்ட உலக நாடுகள் பூரண ஆதரவை தந்துள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது கடனுதவிக்கான மீளாய்வு செப்ரெம்பர் மாதத்தின் நடுப் பகுதிக்குள் மேற்கொள்ளப்ஷபடும்.

குறித்த உடன்படிக்கைகள் மற்றும் அது தொடர்பான விட யங்கள் தொடர்பில் தேவையான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன-என்றார். (அ)

# மின்சாரம் தாக்கி பெண் உயிரிழப்பு

## பெரியவிளானில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 25

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பெரிய விளான் பகுதியில் மின்சாரம் தாக்கி 60 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்தார்.

வீட்டில் உள்ளவர்கள் வெளியே சென்றிருந்த நிலை யில், குறித்த பெண் தண்ணீர் இறைப்பதற்கு மோட் டாரை இயக்க முற்பட்டபோதே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

அவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட் டது.

செந்தில்நாதன் செந்தமிழ்ச்செல்வி (வயது 60) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார். (அ)

# பணவீக்கம் குறைந்தது

கொழும்பு, ஜூன் 25

இலங்கையில் தற்போது பணவீக்க வீதம் குறைவடைந் துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிடுகையில், மே மாதம் பணவீக்க வீதம் குறைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி, மே மாதம் நாட்டின் பணவீக்கமானது 21.1 வீதமாக பதிவாகியுள்ளது.

அதேசமயம், கடந்த ஏப்ரல் மாதம் நாட்டின் பணவீக் கம் 33.6 வீதமாக காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# யாழ். தனியார் கல்வி நிலையங்களை வெள்ளி, ஞாயிறு மூடுவதால் பாதிப்பு

## வணிகர் கழகம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்.மாவட்டத்தில் தனியார் கல்வி நிலையங்களை வெள்ளி, ஞாயிற்றுக்கிழமைகளில் மூடுவதென யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் விடுத்த அறிவிப்பை மீள் பரிசீலனை செய்யுமாறு யாழ்ப்பாண வணிகர் கழகம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த தீர்மானத்தினால் மாணவர்கள் மத்தியில் ஏற் படப் போகும் பாதிப்புக்களையும் அது பட்டியலிட்டுள் ளது.

ஜூலை முதலாம் திகதி முதல் யாழ்.மாவட்டத்திலுள்ள தனியார் கல்வி நிலையங்கள் வெள்ளி மாலைகளிலும், ஞாயிறு முழு நேரமும் மூடப்படவேண்டுமென யாழ். மாவட்ட அரச அதிபர் அறிவித்திருந்தார்.

யாழ்.மாவட்டத்தின் கல்வி வீழ்ச்சியடைந்துள்ள சமயத்தில் இந்த தீர்மானம் மேலும் பாதிப்பை ஏற்படுத்துமென வணிகர் கழகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த தீர்மானத்தின் மூலம், மேற்படி விடுமுறை நாட்களில் ஆசிரியர்கள் பிரத்தியேக வகுப்புக்களை ஆரம்பிப்பார்கள். அதில் அதிக கட்டணம் செலுத்தி வசதி கூடிய பிள்ளைகள் மட்டும் படிக்கும் ஆபத்து நேரும் என ஏற்கனவே பல தரப்பினரும் சுட்டிக் காட்டியிருந்தனர்.

அத்துடன், அதிகமான விடுமுறை மாணவர்களை வழிதவற செய்யும் அபாயத்தையும் உருவாக்குமென்றும் பல தரப்பினரும் சுட்டிக்காட்டியுள்ள நிலையில், வணிகர் கழகமும் தனது எதிர்ப்பை தெரிவித்துள்ளது.

# மீன் விலை மாற்றமில்லை

கொழும்பு, ஜூன் 25

மண்ணெண்ணெய் விலை குறைக்கப்பட்டுள்ள போதிலும், மீன்களின் விலையில் எவ்வித மாற்றமும் இடம்பெறவில்லை என கடற்றொழிலாளர் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இந்த மாதத்தின் முதலாம் திகதி தொடக்கம், வீட்டுத் தேவைக்கான மண்ணெண்ணெயின் விலை 50 ரூபாவி னாலும், தொழில்துறைக்கான மண்ணெண்ணெயின் விலை 134 ரூபாவினாலும் குறைப்பட்டது.

எவ்வாறிருப்பினும், இலங்கை கனியவளக் கூட்டுத்தா பனத்தினால் மேற்கொள்ளப்பட்ட மண்ணெண்ணெய் விலைத்திருத்தத்துக்கு அமைய, மீன்களின் விலையை குறைக்க முடியாது என கடற்றொழிலாளர் சங்கங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது, சந்தையில் மீன்கள் அதிக விலைக்கு விற் பனை செய்யப்படுவதால், தாங்கள் பாரிய அசௌகரி யங்களை எதிர்நோக்கியுள்ளதாக நுகர்வோர் தெரிவித் துள்ளனர். (அ)

# இந்தியாவின் நியாயமான பாதுகாப்பு கரிசனைகளை இலங்கை பரிசீலிக்கும்!

## கூறுகின்றார் வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி

கொழும்பு, ஜூன் 25

இந்தியாவின் நியாயமான பாதுகாப்பு கரிசனைகளை இலங்கை பரிசீலிக்கும். எனினும், இலங்கை ஒரு நாட்டுடன் மாத்திரம் இணைந்து செயற்படாது என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.



ஆங்கில ஊடகம் ஒன்றிடம் கருத்து வெளியிட்ட போது அவர் இதனை குறிப்பிட்டார்.

இந்தியா, இலங்கையின் மிகப் பெரிய அண்டை நாடு என்பதை இலங்கை மனதில் வைத்துக்கொள்ளும் என்றும், இந்தியா எழுப்பும் சட்டபூர்வ மான பாதுகாப்புக் கரிசனைகள் கவனத்தில் கொள் ளப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

பாதுகாப்பு அச்சுறுத்தலாக, இந்தியா கருதக்கூடிய சீனக் கப்பல்களின் பயணங்களைத் தவிர்த்தல் என்ற விடயம், இந்த பாதுகாப்பு கரிசனையில் உள்ளதா என்ற கேள்விக்கு, பதிலளிக்க அலி சப்ரி மறுத்துவிட்டார்.

எனினும், நிலைமைகளின் அடிப்படையில் அவற்றை நோக்கமுடி யும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அடுத்த வாரம் சீனாவுக்குச் செல்லவுள்ள நிலையி லேயே அமைச்சர் அலி சப்ரியின் இந்தக் கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

# இலங்கையின் நடவடிக்கையை பாராட்டுகின்றார் ரஷ்ய தூதுவர்

கொழும்பு, ஜூன் 25

சர்வதேச சமூகத்தில் எழும் சில சிக்கலான சூழ் நிலைகளில் இலங்கை மேற்கொண்ட மத்தியஸ்த நடை முறையை ரஷ்ய அரசாங்கம் மிகவும் பாராட்டுவதாக இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் லெவன் ஜகாரியன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கை உள்ளிட்ட சில நாடுகளின் உள்நாட்டு பிரச்னைகளில் மேற்குலக நாடுகளின் தாக்கம் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இலங்கைக்கான ரஷ்ய தூதரகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச கலாசார மற்றும் உணவு கண் காட்சி காலி முகத்திடல் ஹோட்டல் வளாகத்தில் நடைபெற்றது.

ரஷ்யா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஈரான், மலேசியா மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளின் தூதர்கள் இந்தக் கண்காட்சிக்கு வந்திருந்தனர்.

அங்கு உரையாற்றிய இலங்கைக்கான ரஷ்ய தூதுவர், "சர்வதேச சமூகத்தில் எழும் சில பிரச்சனையான சூழ்நிலைகளில் இலங்கையின் தலையீட்டை நாங்கள் பெரிதும் பாராட்டுகிறோம்.

மேலும், மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்ட போது நாங்கள் உங்களுடன் இணைந் தோம். சில மேற்கத்திய நாடுகள் உள்நாட்டுப் பிரச்னை களில் தலையிடுவதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கி றோம்.

சுதந்திர நாடுகள் உட்பட சில நாடுகளின் உள்நாட்டு பிரச்சனைகளில் தலையிடுவதை நிறுத்தி, உங்கள் சொந்த நாடுகளில் ஏற்பட்டுள்ள பிரச்னைகளில் கவனம் செலுத்த வேண்டும்" என தெரிவித்தார். (அ)

# ரணிலின் அடுத்த வெற்றிக்காக முன்நின்று செயற்படும் நிமல்!

கொழும்பு, ஜூன்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அடுத்த ஜனா திபதி தேர்தலுக்கான வேலைத்திட்டங்கள் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரது தலைமையில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் சிலருக்கு மேலதிகமாக பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா உள்ளிட்ட குழுவினர் இதற்காக முன்நின்று செயற்பட்டு வருவதாக கூறப்படுகிறது.

பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் கள் மாத்திரமின்றி , சுதந்திரக்கட்சியில் இருந்து அரசாங் கத்தில் இணைந்துக்கொண்டவர்களும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவை வெற்றி பெற செய்வ தற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக தெரிய வருகிறது. (அ)

# திறைசேரி உண்டியல் ஏலம் பிற்போடப்பட்டது

கொழும்பு, ஜூன்

ஒரு இலட்சத்து 40 ஆயிரம் மில்லியன் ரூபாய் மதிப்பிலான திறைசேரி உண்டியல்கள், எதிர்வரும் 10ஆம் திகதி ஏல விற்பனை ஊடாக வழங்கப்படவுள்ள தென இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இந்த ஏலத்திற்கான திறைசேரி உண்டியலின் தீர்ப்ப னவு திகதி எதிர்வரும் ஜூலை மாதம் 4ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

எனினும், முன்னதாக எதிர்வரும் 30ஆம் திகதி இந்த ஏலத்திற்கான தீர்ப்பனவு திகதியாக அறிவிக்கப்பட் டிருந்த நிலையில், குறித்த திகதியில் மாற்றம் செய்யப் பட்டுள்ளது.

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் எதிர்வரும் 30ஆம் திகதி விசேட வங்கி விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

அதற்கமைய எதிர்வரும் 27ஆம் திகதி இடம்பெற வுள்ள திறைசேரி உண்டியலின், தீர்ப்பனவு திகதி எதிர் வரும் ஜூலை மாதம் 4ஆம் திகதிக்கு மாற்றம் செய்யப் பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.06.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.